மே, 1957

ஹேவிளம்பி - வைகாசி

40 நயா பைசா

# மஞ்சரி

# தர்ம பலம்

**வ**லிமையற்றவன் தர்மத்தைக் கொண்டு வலிமையுள்ளவனை வெல்ல விரும்புகிறான். அந்தத் தர்மமே சத்தியம். ஆதலால் சத்தியம் கூறுபவனைத் தர்மத்தைக் கூறுகிறான் என்பர். தர்மத்தைக் கூறுபவனைச் சத்தியமுரைக்கிறான் என்பர். உண்மை யுரைப்பதே சத்தியமும் தர்மமுமாகும்.

—பிருகதாரணியகம்.

## மஞ்சரி

**ஆசிரியர், பதிப்பாளர்:**
என். ராமரத்தினம்

**நிர்வாக ஆசிரியர்:**
தி. ஜ. ரங்கநாதன்

**பாஷை ஆசிரியர்கள்:**

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

**ஓவியர்கள்:**
ஸாமி, மகான், சுசி, சுப்பு.

---

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை-4. பிரதி ஆங்கில மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 40 நயா பைசா ($6\frac{1}{2}$ அணா). வருஷ சந்தா ரூ. 4/75 (ரூ. 4-12-0). சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புங்கள். விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். 'மஞ்சரி'யிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 10] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: மே 1957 [இதழ் 5

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

## கலைமகள் விழா

சில நாளைக்கு முன், 'கலைமகள்' பத்திரிகையின் வெள்ளி விழா நடைபெற்றது. பல எழுத்தாளர்களும் அரசியல் தலைவர்களும் ஏராளமான பொதுமக்களும் ஆர்வத்தோடு அதில் கலந்துகொண்டு கலைத்தேவியின் விழாவாகவே அதைச் சிறக்கச் செய்துவிட்டார்கள். 'மஞ்சரி', 'கண்ணன்' இரண்டுக்கும் தாய்ப் பத்திரிகை 'கலைமகள்'. எனவே, 'மஞ்சரி'க்கும் அது குடும்ப விழாவைப் போன்றது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னே, அமரர் ஸ்ரீ ஆர். நாராயணசாமி ஐயர், சற்றும் லாபங் கருதாமல், கலை வளர்ச்சியே நோக்கமாகக் கொண்டு 'கலைமக'ளைத் தொடங்கினார். 'பணி புரிவதே நம் நோக்கம்' என்று இன்று உபசாரமாகச் சிலர் கூறுவதுபோல் அல்லாமல், தமிழ்ப் பணிக்காகவே 'கலைமகள்' தொடங்கியது. பத்து வருஷ காலம் நஷ்டத்திலேயே நடந்தது. இன்று வியாபார ரீதியிலும் இலக்கியப் பணியிலும் மிகச் சிறந்த நிலையைக் 'கலைமகள்' அடைந்திருக்கிறது. 'கலைமக'ளுக்கு இன்று அதிபர் ஸ்ரீ நாராயணசாமி ஐயரின் புதல்வர் ஸ்ரீ நா. ராமரத்தினம்; ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன். 'கலைமகள்' தொடங்கிய காலத்திலிருந்தே அதில் சேவை செய்து வருபவர் ஸ்ரீ ஜகந்நாதன். 'கலைமக'ளின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமாக இந்த இருவரையும் முன்னணியில் கொண்டு பல அன்பர்கள் பணி புரிகிறார்கள். இந்த வெள்ளி விழாச் சந்தர்ப்பத்தில், 'கலைமக'ளை மேலும் மேலும் சிறக்கச் செய்து, தமிழுக்குப் பல துறைகளிலும் சேவை செய்ய அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் உறுதி பூண்டிருக்கிறார்கள். இந்தக் 'கலைமகள்' விழாவின் மகிழ்ச்சியில், அதன் குடும்பத்தையே சேர்ந்த 'மஞ்சரி'க்கும் அதன் அன்பர்களுக்கும் பங்கு உண்டு. 'கலைமகள்' வாழ்க!

## பக்தியும் புரட்டும்

சமயக் கூட்டம் ஒன்று நடந்தது. ராஜாஜி வந்திருந்தார். ஜனத் திரளுக்குக் கேட்க வேண்டுமா? பெண்களும் குழந்தைகளும் மற்றோரும் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள். முதலில் யாரோ ஒருவர் ஆங்கிலத்தில் பேசினார்; நீளமாகவே பேசினார். கூட்டத்திலே முக்கால்வாசிப் பேருக்குப் பொருள் புரிந்திராது என்பது நிச்சயம். ஆயினும், ஒரு முணுமுணுப்பு இல்லை; பரம நிச்சப்தம் நிலவியது. ராஜாஜிக்கே வியப்பாய்ப் போயிற்று. ''இதுதான் பக்தி'' என்று அவர் கூறினார். பக்தர்கள் காரணகாரியங்களை ஆராய்வதில்லை. ஆழ்ந்த நம்பிக்கை கொள்கிறார்கள். தங்களுக்குத் தெரியாத பாஷையாக இருந்தாலும், ஏதோ நல்ல விஷயத்தைப்பற்றிப் பேசுகிறார் ஒருவர் என்ற நம்பிக்கை விழுந்ததாலேயே பல ஜனங்கள் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதுதான் பக்தியின் இயல்பு. இதே சமயம் வேறு சிலருடைய போக்கைக் கண்டும் நாம் வியப்படையத்தான் வேண்டியிருக்கிறது. 'கோயிலாவது குளமாவது' என்று அவர்கள் கேலிசெய்கிறார்கள். அவர்களே, 'கோயிலிலே தமிழில் அர்ச்சனை

செய்யாவிட்டால், மறியல் செய்வோம்' என்று கர்ஜிக்கிறார்கள். அவர்களையும் பல மக்கள் நம்புகிறார்கள். பக்தி எங்கும் இருக்கிறது; புரட்டு எங்கும் இருக்கிறது. இல்லையா?

## புள்ளியும் காசும்

**ந**யா பைசா வந்துவிட்டது; மெல்ல மெல்ல நிலைத்துக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் கிலி இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அது குறைந்து வருகிறது. சில கூடைக்காரிகளும் சில்லறைக் கடைக்காரர்களும் மட்டும் நயா பைசாவைக் கண்டு இன்னமும் சற்று மிரண்டு கொண்டுதான் இருக்கிறார்கள். நாள் செல்லச் செல்ல எல்லாம் சரியாகிவிடும். இதெல்லாம் போக, 'நயா பைசா' விலே கள்ள நாணயமும் கூடவே வந்துவிட்டது என்ற புரளி எழுந்ததுதான் விநோதம். சில நயா பைசாக்களிலே வருஷத்துக்குக் கீழே புள்ளி இருக்கிறது; சில வற்றில் அந்தப் புள்ளி இல்லை. இரண்டில் ஒன்று கள்ள நாணயமாயிருக்குமோ என்று ஒரு பீதி உண்டாயிற்று. அப்படி ஒன்றும் விபரீதம் நேரவில்லை என்று சட்டென்று சர்க்காரின் அறிக்கை பிறந்திருக்கிறது. பம்பாயில் தயாராகும் நாணயங்களுக்குப் புள்ளி வைப்பார்களாம்; கல்கத்தாவில் தயாராகும் நாணயங்களுக்குப் புள்ளி வைக்கமாட்டார்களாம். இது வெகு கால வழக்கமாம். ஆகவே, மக்கள் இனிப் புள்ளியைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை. புள்ளி நாணயங்களையும் புள்ளி இல்லா நாணயங்களையும் இனி நிம்மதியாகப் புழங்கலாம்.

## படகு விபத்து

**அ**ரியலூர் விபத்தைவிடக் கோரமாகப் பத்ராசலம் உற்சவத்திலே படகு விபத்து ஒன்று நிகழ்ந்துவிட்டது. இரு நூறுக்கு மேற்பட்ட மக்கள் அதில் மாண்டுவிட்டார்கள். இரண்டு படகுகள். அவற்றை ஒன்றோடொன்று பிணைத்துவிட்டார்கள். ஒவ்வொன்றும் முந்நூறு பேர் கொள்ளக் கூடியது. அளவுக்குமேல் அவற்றில் மக்கள் ஏறிவிட்டார்கள். நதியின் ஆழத்திலே படகுகளைக் கொண்டு போய் நிறுத்திக் கட்டணம் வசூலிக்கத் தொடங்கிவிட்டார்கள் படகுக்காரர்கள். ஒரு படகிலே ஓட்டை. ஜலம் புகுந்தது. மூழ்கத் தொடங்கியது. பெண்களும் குழந்தை குட்டிகளுமாகப் பலர் அமிழ்ந்து மாண்டார்கள். இந்தப் பயங்கரத்தைக் கற்பனை செய்து பார்த்தாலே உள்ளம் நடுங்குகிறது. இந்தமாதிரி பெரிய உற்சவங்களில் அதிகாரிகள் சகல முன்னெச்சரிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். எதற்கும் எதிலே குற்றம் என்று விரிவான விசாரணை நடத்தியாக வேண்டும். துன்புற்றோருக்குச் சர்க்காரும் மக்களும் முடிந்த உதவியெல்லாம் புரிய வேண்டும். அந்தத் துர்ப்பாக்கிய மக்களின் குடும்பத்தினருக்கு நம் உள்ளம் பொருந்திய அநுதாபம் உரியதாகும்.

## விண் அடைந்த வள்ளல்

**க**ல்விக்கே கோடி ரூபாய்க்கு மேல் வழங்கிய வள்ளல் ஸ்ரீ அளகப்ப செட்டியார் காலமானார். மண்ணுடம்பு மறைந்தாலும் புகழுடம்பு என்றென்றும் சிரஞ்சீவியாய் வாழும் என்று, இறந்த எவரையும்பற்றிப் பெரும்பாலும் உபசாரமாய்க் கூறுவது வழக்கம். ஸ்ரீ அளகப்ப செட்டியாரைப்பற்றி இப்படிக் கூறினால், அது 'உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.' அவருடைய மறைவுக்கு எவரும் துக்கம் கொண்டாடத் தேவையில்லை. அவர் அமரத்துவம் பெற்றுவிட்டார். செட்டியார் பெரிய வணிக நிபுணர்; தேசபக்தர்; கல்விமான். காரை மாநகரில் மயசிருஷ்டிபோல அவர் அமைத்திருக்கும் யந்திரக்கலை நுட்பக் கலலூரி, அவருடைய புகழுக்கு என்கிறன்றும் நிலைத்த ஞாபகச் சின்னமாக விளங்கும். அது வாழ்க! அவர் வாழ்க!

நாட்டிலே எத்தனைவித மக்கள்! அவர்களுடைய நடனக் கலைகள்தான் எத்தனைவிதம்!

# நாடோடி நர்த்தனம்

ஸி. எஸ். நாயர்

குடியரசுத் தினக் கொண்டாட்டத்தோடு தொடர்ந்து டில்லியில் நாடோடி நர்த்தன உற்சவம் நடத்துவது வழக்கம். அது தற்காலம் தேசியக் கொண்டாட்டமாக வளர்ந்திருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சேரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நடிகர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிந்துகொள்ளவும் பழக்கம் செய்துகொள்ளவும் இது வாய்ப்பு அளிக்கிறது.

1953-ஆம் ஆண்டு முதல் இந்தத் தேசியக் கொண்டாட்டத்தை நடத்தி வருகிறார்கள். கண்களைப் பறிக்கும் நிறங்களுடன் அழகிய நாட்டியங்கள் உண்டு. இவற்றில் நம் நாட்டில் பரம்பரையாக வளர்த்த கலைகளின் உயர்ந்த நோக்கங்கள் காணப்படுகின்றன.

நாட்டு நர்த்தனங்களுக்கு எவ்வளவோ பெருமை உண்டு. அவற்றைப் பார்த்து அன்னை பூமிதேவியின் தாய்மையை மக்கள் உணருகிறார்கள். பார்ப்பவரை இந்த நர்த்தனங்கள் பரவசமாக்குகின்றன. மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களை இவற்றில் பார்க்க முடியும். மக்களின் கலைகளுக்கும் சமூக வாழ்க்கைக்கும் எத்தகைய தொடர்பு உண்டு என்பதும், தேசத்தை உருவாக்குவதில் இக் கலைகளின் பங்கு எவ்வளவு என்பதும் இதிலிருந்து நமக்குத் தெளிவாகிறது. உள்நாடுகளில் பரம்பரையாக வளர்ந்து வந்த நிருத்தியங்



மைசூர்ப் புரவி ஆட்டம்



ஒரிஸ்ஸாவின் 'தமியால' நிருத்தியம்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 31-3-57), கோழிக்கோடு.

கள் மக்களின் தினசரி வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஊட்டுவதுடன், அவற்றின் லயமும் சங்கீதத்தின் இனிமையும் சேர்ந்து அவர்களை இன்பத்தில் ஆழ்த்தும்.

அறுவடைக் காலத்திலும், பருவ மாற்றங்களிலும் கிராம வாழ்க்கையில் உற்சாகம் நிறைந்திருப்பது வழக்கம். அப்பொழுது கிராமம் முழுவதும் வாத்திய கோஷங்கள் நிறைந்திருக்கும்; பயிரிடுபவர்கள் நர்த்தனத்தில் ஈடுபடுவார்கள்.

சரத் காலத்தில் பனித்துளிகள் படிந்திருக்கும் வயல்களில் பழுத்த நெற்கதிர்கள், கிராம மக்களின் உள்ளத்தில் மோதும் இன்ப அலைகளுக்குப் புதிய சுருதியும் தாளமும் அளிக்கின்றன. இடைவிடாது உழைத்துக் களைப்புற்ற குடியானவர்களுக்கு அந்திப் பொழுதில் இந்தக் கிராம நாட்டியங்கள் ஆனந்தம் அளிக்கின்றன. ஆவலுடன் பயனைக் கருதி இடைவிடாது உழைத்ததன் பயன் கையில் வந்த பொழுது உண்டாகும் இந்த உள்ளப் பூரிப்பு, குடியானவனுக்குமட்டுந்தான் என்பதில் சந்தேகமில்லை. அதனால் அவன் தன்னை மறந்து ஆடிப் பாடிச் செல்கிறான்.

சாஸ்திரீயமான கட்டுக் கோப்புகளை இந்த நாட்டியத்தில் காண முடியாது. அதற்கேற்ற உத்திகளும் இதில் இல்லை. இவை அப்போதைப்போது மாறிக்கொண்டும், மலர்ந்தும், புதுமணம் வீசிக்கொண்டும் இருக்கின்றன. கட்டுப்பாடின்றி அந்தச் சமயத்தில் தோன்றும் முறையில் அவர்கள் நர்த்தனம் செய்கிறார்கள். ஆடுபவர் காட்டும் முத்திரைகளும் உறுப்புக்களின் அசைவுகளும் அந்த அந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றும் மனோபாவத்துக்கு ஒத்திருக்கும். பூர்ண லயத்துடன் அவர்கள் நர்த்தனம் செய்கிறார்கள். இதன் வாயிலாக அவர்கள் கிராமவாசிகளின் வாழ்க்கை மலர்ச்சியையும் நட்பையும் சகோதரத் தன்மையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

பாரத நாட்டின் கிராமங்களில் சமூகக் கலைகள் எல்லாம் பொதுவாக மக்களின் கலைகளாகும். இவற்றில் ஒன்றும் ஒருதனிப்பட்டவரைக் குறித்தோ ஒருவருடைய முயற்சியினாலோ தோன்றியவை அல்ல. இந்தக் கலைகளில் பயிரிடும் மக்களுடைய உண்மை வாழ்க்கையின் அழிவற்ற தன்மையும் சக்தியும் நிறைந்திருக்கின்றன.

நம் நாடு மிகப் பரந்தது. இதில் நடைமுறையில் பலதரப்பட்ட கலைகள் உண்டு. சமூக நடனத்தில் நம் நடை, உடைக்கு ஏற்றவாறு பல மாறுபாடுகள் உண்டு. ஒவ்வோர் ஊரிலும் அவைகளுக்கு ஏற்ற கலைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றுள் நம் நாட்டின் பண்பாடு மாறுபடாமல் ஊடுருவி இருப்பதைக் காணலாம். ஒவ்வோர் ஆண்டிலும் நடத்தும் இந்தப் பாரத நர்த்தனக் கொண்டாட்டம், பாரத நாட்டுக் கிராம மக்களின் இடையே சிறந்த கருத்தொருமையை உருவாக்குகிறது. மேலும், இதில் பொதுவான பண்பாட்டிடையே அழகூட்டும் வேற்றுமைகளையும் கணக்கற்ற நிலையில் காணலாம்.

## குழந்தை எழுதிய கதை

ஹாலிவுட் முதலாளி ஒருவரின் குழந்தை ஒரு கதை எழுதத் தொடங்கியது: ''அது ஓர் ஏழைக் குடும்பம். அப்பா ஏழை. அம்மா ஏழை. மூன்று குழந்தைகளும் ஏழை. சமையல்காரி ஏழை. டிரைவர் ஏழை. தோட்டக்காரன் ஏழை. உண்மையிலே அத்தனை பேரும் ஏழை...''

—'ஜூர்ஸ் டி ஃப்ரான்ஸ்'

# நயா பைசா

★

இந்த நயா பைசா வந்தாலும் வந்தது; எங்கே பார்த்தாலும் - பஸ்ஸிலே, கடையிலே, வீதியிலே, வீட்டிலே, பத்திரிகையிலே, கறிகாய்க் கடையிலே எங்குந்தான் - சில்லறைத் தகராறு, சில்லறை பற்றிய தகராறு மலிந்துவிட்டது. ராஜாஜி சொன்னதுபோல, நயா பைசாவுக்குப் பதில் நயா ரூபாய் வந்திருந்தால், பொது ஜனங்களுக்கு இந்த மாறுதல் சிறு சிரமமும் தந்திராது. ஆனால், சர்க்காருக்கும் பெரும் பண வரவு செலவு செய்வோருக்கும் சற்றுச் சிரமம் தந்திருக்கும்.

எப்படியோ, நயா பைசா வந்துவிட்டது; புழங்குகிறது. பழைய சில்லறைகளையும் நயா பைசாக்களையும் பரிமாறிக்கொள்ளும் போது, வீசம், அரைக்கால், கால், அரை நயா பைசாப் பின்னங்களில் லாப நஷ்டம் ஏற்படுகிறது. அதன் பலாபலனையோ கணக்கையோ இங்கே நாம் ஆராய விரும்பவில்லை.

பக்கத்திலே நாலணா வரைக்கும் பழைய தம்படிக்கும் நயா பைசாவுக்கும் உள்ள மாற்று விகித ஸ்கேல் ஒன்று தந்திருக்கிறோம். ஒவ்வொரு நாலணா வந்ததும் பிசிர் இல்லாமல் போகிறது. ஆகவே, அந்த அளவோடு இந்த ஸ்கேலை அமைத்திருக்கிறோம். இதை நறுக்கி ஓர் அட்டையில் ஒட்டி வைத்துக் கொள்ளுங்கள். டேபிள் எல்லாம் பார்த்துச் சிரமப்பட வேண்டாம். இரண்டு நாணயங்களுக்கும் உள்ள மாற்று விகிதத்தை இதில் சட்டென்று கண்டுகொள்ளலாம்.



# புராதன இந்திய ஓவியம்

எம். எஸ். சுந்தர சர்மா

வெள்ளிவிழாக் கண்ட 'கலைமக'ளின் பழைய பக்கங்களைப் புரட்டினால், அறிவுச் செல்வமான பல அரிய கட்டுரைகள் கிடைக்கின்றன. பழைய இதழ் ஒன்றில் உள்ளது இந்தக் கட்டுரை.

அரசகுமாரியின் அழகு வாய்ந்த ஓர் உருவை அவளது தலையினின்று இழிந்த ஒரு மயிரைக் கண்டே எழுதிய திறமை வாய்ந்த ஓவியரின் கதையாவது, மற்றும் ஒரு மடந்தையின் அழகிய உருவை எண்ணெய்க் கிண்ணத்தில் தோன்றிய சாயையிலிருந்து வரைந்த ஓவியரின் கதையையாவது, தன் பாட்டியின் மடியில் இருந்தவண்ணம் கேட்டுக் களிக்காத இந்திய வாலிபரும் உண்டோ? மக்களும் மன்னர்களும் ஒரே வகையில் ஓவியத் தேர்ச்சி பெற்று ஓவியங்கள் புனையாத வெறுஞ் சுவர்களே கிடையாதபடி நமது தேசம் இருந்தது. இவ்விதமாக 'இறகு பேனா ஓட்டும்' நாகரிகம் முற்றிய இந்தக் காலம்வரையில் ஓவியப் பயிற்சி குன்றாது வழங்கிவந்தது.



விளக்கம்–1: சித்தன்ன வாசல் ஓவியம்: கூட்டத்துக்கிடையே நிற்கும் ஒருவருடைய முகம்.

இந்த ஓவியப் பயிற்சி வெகு மேன்மையாக அமைந்திருந்கதென்பதை இப்பொழுது ஆங்காங்கே சிதறுண்டு காணும் மதில் ஓவியங்களிலிருந்து நாம் அறியலாம்.

ஓவிய அமைப்புக்குச் சுபாவத்திலேயே சில வரம்புகள் உண்டு. இயற்கையின் பிரகாசத்தையும், நுட்பத்தின் மகிமையையும், ஓயாத அசைவையும் யாரால் எடுத்து வரைந்துகாட்ட முடியும்? இவைகளின் ஜாடைகளைத்தான் காட்டக் கூடுமாகையால் ஓவியக்கலை ஒரு குறிக்கலையாகத்தான் இருக்க முடியும். எவ்வளவுக் கெவ்வளவு லகுவாய் அந்தக் குறிகள் வரையப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவ்வோவியம் மேன்மை பெற்றதாகும். புராதன இந்திய ஓவிய நிபுணர்கள் வெகு காலத்துக்கு முன்பே மேற்சொல்லிய உண்மைகளை அறிந்திருந்தார்கள். கண்முன் பொருளை நிறுத்தி எழுதும் வழக்கமே அவர்களிடம் இல்லை. அந்த எண்ணமே அவர்களுக்கு உதித்ததில்லை. அபார ஞாபக சக்தி வாய்ந்த இந்தத் தேசத்தில் மேலான காரியங்களெல்லாம் மனோபாவமாய்ச் செய்வதுதான் மேன்மை யென்றும் அப்படிச் செய்யவேண்டியதே கடமை யென்

காப்பிரைட்: கலைமகள் (தமிழ்: ஜூலை 1932), சென்னை-4.

றும் சொல்லாமலே விளங்கியது. அந்தக் காலத்து ஓவிய அறிஞர்கள் தம் கண்களாகிய ஓவியப்பட்டையால் தம் மூளை என்னும் இதழ்களிலேயே குறிப்புக்கள் எப்பொழுதும் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் உலகை உற்று நோக்கியவர்களாக இருந்தமையால் அவர்களுடைய சிறிய ஓவியத்திலோ பெரிய ஓவியத்திலோ ஏற்பாடு செய்த பாவத்தோடு கூடிய உருவ அமைப்பைக் காண்பதரிது. எல்லை வரி வரைவதிலேயே அவர்கள் பேரானந்தம் பெற்றார்கள். எல்லை வரிதான் ஓவியக் கலையின் ஆதியும் அந்தமும் ஆகும்.

உண்மை, அழகு, மனோபாவம் ஆகிய இந்த மூன்றுந்தான் அவர்களுடைய எல்லையும் முடிவும் ஆகும். உண்மை என்பதை உருவபேதம் என்றும் பிரமாணம் என்றும் இரு வகைப்படுத்தி இருந்தார்கள். அநேக மாறுதல்களைப் பெற்று வெவ்வேறாகக் காணும் உருவங்களை உருவபேத தத்துவத்தினால் உணர்ந்து, அந்த அந்த உருவத்தின் அமைப்பைக் காட்டும் பிரமாணங்களைப் பாகுபாடு செய்து அறிந்தார்கள். பாவம், லாவண்ய யோஜனம் இரண்டும் கூடியதே நாம் அழகு என்று கூறுவது. பாவத்தினால் வாழ்க்கையின் வெவ்வேறு இயல்புகளையும் லாவண்ய யோஜனத்தினால் வாழ்வின் சிறப்பையும் அறிந்து அழகுற அமைத்தார்கள். பின்னும், ஸாத்ருச்யம் என்பதனால் மனோபாவ ஒற்றுமைகளையும், வர்ணீகபங்கத்தினால் கவிசாதுர்யம் அல்லது வர்ணணைப் போக்கையும் அறிந்து மனோபாவம் முற்றும் பெற்றிருந்தார்கள். ஆகவே, முற்கால ஓவிய நிபுணர்கள் ஓவிய, சிற்பக் கலைகளின் முக்கிய தத்துவங்களாகிய இவைகளை நன்றாக ஆராய்ச்சி செய்து உணர்ந்திருந்தார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

வர்ணீகபங்கம் என்பதற்கு இங்கே சொல்லியிருக்கும் பொருள் நான் புதிதாகக் கூறுவதாகும். ஓவியத்துக்கும் சிற்பத்துக்கும் பொதுவாக உள்ள தத்துவம் இது என்பது என் அபிப்பிராயம். இந்தியச் சிற்ப



விளக்கம்—2: இலங்கையில் சிகிரி என்ற இடத்தில் உள்ள ஓவியம்: ஓர் அழகி.

ஓவிய ஆராய்ச்சியில் வல்லோரான டாக்டர் ஆனந்தகுமாரசாமி முதலியோர், புராதன வியாக்கியானகர்த்தர் ஒருவர் கூறியிருக்கிறபடி இதற்கு வர்ணங்கள் குழைத்துக் கூட்டும் தத்துவம் என்று பொருள் கொண்டு இதை ஓவியத்துக்கு மட்டுமே உரியது என்று கூறியிருப்பது சரியல்ல; இதுவே என் அபிப்பிராயம்.

நற்கலைகளில் எளிதில் அழியக் கூடியன ஓவியங்களேயாகும். ஆகையினால் இந்த உஷ்ண தேசத்தில் இரண்டாயிர வருஷங்களுக்கு மேலாகவே நின்று இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் பூர்வ கால மதில் ஓவியங்கள் அந்தக் கலைப் பயிற்சியில் நம்மவர்களுக்கு இருந்த ஆழ்ந்த திறமையைச் சொல்லாமலே விளக்குகின்றன.

அப்படிப் புராதன ஓவியங்கள் காணப்படும் ஸ்தலங்கள் சிற்சிலவே. அந்த இடங்களெல்லாம் விந்திய மலையின் தெற்கேயே காணப்படுகின்றன. சுருகுஜா



விளக்கம்–3: பாக் குகைகள் ஒன்றில் உள்ள ஓவியம்: கோலாட்டம் போடும் கூட்டத்திலிருந்து பிரித்து எடுத்த ஒரு பெண்.

சம்ஸ்தானத்தில் ஜோகிமாரா குகையிலும், குவாலியர்ச் சம்ஸ்தானத்தில் பாக் குகைகளிலும், நிஜாம் சம்ஸ்தானத்தில் அஜந்தா குகைகளிலும், இலங்கைத் தீவில் சிகிரி என்ற ஸ்தலத்திலும், புதுக்கோட்டைச் சம்ஸ்தானத்தில் சித்தன்ன வாசலிலும், சென்னை நகரின் அருகேயுள்ள காஞ்சீபுரத்திலுமே பழைய மதில் ஓவியங்களைக் காணலாம். தஞ்சையிலும் மதனபள்ளியினருகே ஒரு ஸ்தலத்திலும் சிற்சில ஓவியங்கள் இருப்பதாகக் கேள்வியே யொழிய வேறில்லை. நாடெங்கும் இந்தக் கலை பரவிச் செழித்தமையால் இன்னும் அநேக இடங்களில் புராதன ஓவியங்களைக் காணக்கூடும். இந்தக் கலையின் உணர்ச்சி விருத்தி அடைந்தால் மேன்மேலும் புதிதாகக் கண்டு பிடிக்க இடம் உண்டு என்பதில் ஐயமில்லை.

முன் கூறிய இடங்களில் காணும் புராதன மதில் ஓவியங்களிற் சிலவற்றை எடுத்து எல்லை வரி விளக்கங்களாக இங்கே திரட்டிக் காட்ட முயன்றிருக்கிறேன். அவை தேர்ந்தெடுக்கப்பெற்றவைகளல்ல. பரவியிருந்தபோதிலும் அவைகளின் ஒற்றுமையைக் காட்டுவதற்காகவும் அவைகளை வரைந்த புராதன ஓவிய வல்லோரின் மேலான நோக்கங்களையும் போக்கையும் காட்டுவதற்காகவுமே அவை திரட்டப்பட்டன. புராதன மதில் ஓவியங்களின் குணதிசயங்களை விளக்கிக் காட்டும் பொருட்டுக் கூட்டிய இந்த ஓவியத் திரட்டு அவைகளை முழுவதும் காணவேண்டுமென்ற ஊக்கத்தை அளிக்குமென்றும், நம் நாட்டினர் அநேகர் அந்த ஓவியங்கள் காணப்படும் ஸ்தலங்களுக்குச் சென்று கண்ணும் மனமுமாரக் காண அவாக் கொள்ளச் செய்யுமென்றும் கூறலாம். இப்படிப் போய்ப் பார்ப்பதனாலே ஓவிய ருசியும் அறிவும் ஏற்படக் கூடும்.

ஜோகிமாரா குகையானது மத்திய மாகாணத்தில் உதயபுரி என்ற கிராமத்தின் அருகிலுள்ள ராமகர் குன்றத்தில் உள்ளது. இங்கே காண்பவைகள் உலக ஓவியங்களிலேயே மிகப் புராதனமானவை என்று தீர்மானிக்கப் பெற்றுள்ளன. அவைகளைப்பற்றிய சிறு விவரம் உண்டேயொழிய ஒருவரும் அவற்றை எடுத்தெழுதிக் காட்டியதில்லை. அவைகளைப் பார்க்கும் பாக்கியம் இதுகாறும் நான் பெற்றவனல்ல. ஆகையினால் இங்கே கூட்டிய திரட்டில் ஒன்றேனும் அங்கே உள்ளதன்று. அதற்குச் சமீபத்திலுள்ள எவரேனும் ஓர் ஓவியர் அங்கே சென்று அவைகளை எடுத்து வரைந்து காட்டுவாரானால் அவர் செயல் மிகவும் மெச்சக் கூடியதாகும்.

ஒரு நூற்றாண்டுக்குமுன் கண்டு பிடித்த அஜந்தா குகைகள் மிகவும் பிரசித்தம் உடையன. அநேகர் அங்கே காணும் ஓவியங்களை அவரவர்கள் சாமர்த்தியத்துக்கு ஏற்ப எடுத்து வரைந்துள்ளார்கள். நிஜாமுடைய அரசாங்கத்தாரே ஒரு சிறந்த திரட்டு வெளியிட்டிருக்

கிறார்கள். கண்டு பிடித்த காலத்தில் தென்பட்டவைகளிலேயே ஒரு சிறு பாகந்தான் இப்பொழுது அங்கே காணப்படுவது மிகவும் பரிதாபமான நிலை. 'விக்கிரக ஆராதனை செய்யும் பாமரர்கள்' ஆயிரக் கணக்கான வருஷங்களாகக் காப்பாற்றி வந்தவைகளை 'நாகரிகக் காட்டு மிராண்டிகள்' ஒரு நூற்றாண்டில் அழித்தது வியப்பல்லவா?

பாக் குகைகள் குவாலியர்ச் சம்ஸ்தானத்தில் குஜராத்துக்கும் மால்வாபுரிக்கும் இடையேயுள்ளன. இங்கே சிறந்து விளங்கிய ஓவியங்களில் சிலமட்டுந்தான் இப்பொழுது இங்கே காணலாம். அசித்குமார் ஹால்தர் என்ற ஓவிய நிபுணர் இங்கே காணப்படுவனவற்றைத் திறமையாய் வரைந்து அச்சிட்டுள்ளார்.

சிகிரி என்பது இலங்கையிலுள்ளது. அந்தத்தீவின் அரசாங்கத்தினரால் நன்கு காப்பாற்றப்பெற்று வருகிறது. இங்கே காணும் ஓவியங்கள் நூதனமானவைகளா யிருப்பினும் இந்திய தேசத்தில் காணும் ஓவியங்களுடன் மிக ஒத்திருக்கின்றன. கொழும்பில் நடத்திய காட்சிச்சாலையில் இந்த ஓவியங்களின் நல்ல பிரதிவரைகள் வைக்கப்பெற்றிருக்கின்றன.

சித்தன்னவாசல் புதுக்கோட்டைக்கு வடமேற்கே பத்து மைலுக்கு அப்பாலுள்ள ஒரு குக்கிராமம். அதன் அருகேயுள்ள ஒரு மலைச் சாரலின் செங்குத்தான பாறையில் குடைந்த ஒரு சிறு மண்டபத்தில் அங்குள்ள ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவைகளைக் கண்டுபிடித்த கவுரவம் டி. ஏ. கோபிநாத ராயரையும் இவைகளை எல்லோருக்கும் உடனே தெரியப்படுத்திய டூப்பிரியேல் அவர்களையும் சாரும். அங்கே காணும் ஓவியங்கள் முழுவதையும் நான் எடுத்து வரைந்துள்ளேன். அவற்றில் சிலவற்றை அச்சிட்டு வெளியாக்கியும் இருக்கிறேன்.

காஞ்சீபுர மதில் ஓவியங்கள் அவ்வூரின் மேற்கே பாழடைந்த பழைய கைலாசநாதர் கோயிலில் காணப்படுகின்றன. டூப்பிரியேல் தீர்மானத்துடன் சென்று அங்கு



விளக்கம்–4: அஜந்தாவில் உள்ள ஓவியம்: ஒரு கன்னிப் பெண்.

அவைகளைக் கண்டுபிடித்தது மிகவும் பாராட்டத் தக்கது. கண்டுபிடித்த சில நாளுக்கு முன்பாகவே நான் அங்கே சென்று கண்ட ஓவியங்களை எடுத்து எழுதியதுண்டு. 'கலைமகளில்' அவை வெகு விமரிசையாக அச்சிடப்பட்டுள்ளன. தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டால் அவ்விடத்தில் இனியும் அநேக ஓவியங்களைக் கண்டுபிடிக்கலாம். அப்படிச் செய்ய நல்ல காலம் கூடிய சீக்கிரத்தில் உண்டாகுமென்று நம்புகிறோம்.

முதல் விளக்கம் சித்தன்ன வாசலில் காணப்படும் நூதனம் பொருந்திய ஓர் ஆண்தலை. ஆத்மிக நோக்கம் பொருந்தியிருப்பதோடு மித்திரத்துவமும், தத்துவஞானமும், அமரிக்கையும் பொருந்திய முகமலர்ச்சி இருப்பதால் யாவரும் விரும்பி நம்பக்கூடிய உருவாக அமைந்துள்ளது. மக்களும் மன்னர்களும் ஒருமை வாய்ந்த நடையையும் பாவத்தையும் முற்காலத்தில் பெற்றிருந்தமையால் இது மன்னரின் உருவோ மக்களில் ஒருவரின் உருவோ என்று உறுதியாகச் சொல்லக்கூடவில்லை. இந்த உருவம் கூட்டத்திடையே விளங்கி நிற்கும் ஒருவரது முகம்;

இந்த முகத்தில் காணும் காது வளர்ப்பு, கன்னியாகுமரி முதல் ஹரித்துவாரம் வரையில் காணும் ஓவியங்களிலும் சிற்பங்களிலும் காணப்படுகிறதனாலேயே ஒரே நாகரிகம் இந்தத் தேசத்தில் எங்கும் வியாபித்திருந்தது என்பது விளங்கும்.

இலங்கையில் சிகிரி என்ற இடத்தில் காணும் ஓவியங்கள் மிக்க விசித்திரமாக இருப்பதோடு வேறு உலகுக்கே நம்மை அழைத்துச் செல்லக்கூடிய புதுமை வாய்ந்துள்ளன. இங்குள்ள இரண்டாவது விளக்கம் அவைகளில் ஒன்றைக் காட்டுகிறது. இந்தக் காலத்தில் மோட்டார் வண்டிகளில் சென்றுலன்றி அசைய முடியாத கொழுத்துருண்ட வடிவங்களையே பார்க்கும் நம் கண்களுக்கு இந்த உருவங்களின் மகிமை லேசாய்ப் புலப்படாது. பவழக்கொடியினையும், மின்னற்கொடியினையும் போன்ற உருவைக் கொண்ட இந்த ஓவியங்கள் பார்க்கப் பார்க்க நம் உள்ளத்தைப் பூரிக்கச் செய்யும். கனத்த ஆபரணங்களிட்டுப் பூங்கொடி போன்ற வாட்டத்தினை உடைய இந்த உருவங்கள் சிம்மள மாதரின் சீர்தூக்கிய உருவேயன்றி வேறில்லை. சிறைப் பட்டிருந்தும், சீதா தேவி தன் சிறந்த கருணையால், ராவணனுடைய தீவில் தோன்றிய மாதருக்குக் கொடுத்த வரத்தின் மகிமையால் இந்த உருவங்கள் அமைந்தனவோ என்று எண்ண இடம் உண்டு.

மூன்றாவது விளக்கம் பாக் குகைகளிலுள்ளவற்றில் ஒன்று. அவ்விடம் காணும் ஓவியங்கள் வெகு எளிய முறையில் மிகச் சாமர்த்தியமாக வரையப்பெற்றுள்ளன. இங்கே காட்டியிருக்கும் உருவம் அதன் கூட்டத்தினின்றும் தனித்தெடுக்கப்பட்டுள்ளது. இது அதிக சிலாக்கியமான அமைப்பு உள்ளது. கோலாட்டம் போடும் வட்டத்திலுள்ள ஒரு மாதின் உருவம் இது. மோவாய்க்கட்டையின் வில்போன்ற மெல்லிய வரையானது கன்னத்தின் வரையாக மறைந்து வளைந்து அலை அலையாகச் செல்லும் தலையிலுள்ள அழகிய வரையை அடைந்து படிப்படியாயுள்ள வரைகளின் உதவியால் கீழே இறங்கிக் கழுத்தின் வளைவுடன் புணர்ந்து அவளது தோள்களினின்றும் தொங்கும் உடையின் விரிந்த வரைகளாகச் செல்லுகின்ற விமரிசை பேரானந்தத்தைக் கொடுக்கிறது. முகத்தின் இருப்பும் சாய்வும், கோலாட்டக் கழியின் தாளத்தை அநுசரித்திருப்பதோடுகூட நடனத்தின் போக்கையும் சங்கீதத்தின் அணியையும் நன்கு விளக்குகின்றன. பிரகாசமான கண்களின் பிரியமான பக்கப் பார்வை, அவளது மெல்லிய மேனியைத் தெளிவாய்க் காட்டுகிறது. சிறு சிறு எல்லை வரைகளின் உதவியால் இந்தச் சிறந்த முகவுருவைக் காட்டக்கூடிய திறமை மேலான ஓவியர்க்கன்றி வேறு யாருக்கு உண்டு? மேனாட்டு வீனஸின் முகங்களையும் மடோனாக்களின் முகங்களையும் ஒருங்கு கூட்டித் திரட்டி நிறுத்தினும் இந்த மங்கையினுடைய முகவுருவின் லட்சணத்துக்கு ஈடாகாதென்றே சொல்லலாம்.

நான்காவது விளக்கத்தில் அஜந்தாவிலிருந்து காட்டியுள்ள உருவமானது, சிறுவயதுள்ள ஒரு மங்கையின் குணாதிசயங்களை நன்கு புலப்படுத்திப் பார்ப்பவரின் மனத்தைக் கவரச் செய்யும். கெஞ்சிக் கேட்கும் கண்களும் வாயும், வணங்கிய அமைப்புப் பொருந்திய அவளது உடலின்அமைப்புடன் ஒத்துள்ளன. உடலுடன் கூடிய பிரகிருதியானது, உடலுடன் கூடிய புருஷனுடன் சர்வகாலமும் விளையாடி மயக்கிப் புருஷன் தனது உண்மை இயல்பைச் சற்று நேரமேனும் மறந்து தானும் பிரகிருதியோ என்று கருதும்படி செய்யும் உலக லீலையை இது விமரிசையாகக் காட்டுகிறது.

இவைகளைப்போன்ற ஓவியங்கள் பலவற்றை இந்த இடங்களிலெல்லாம் நம் முன்னோர்கள் அமைத்துள்ளார்கள். நம் சோம்பலை நீக்கி அந்நியர் கூறுவதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் நாமே ஓவியப் பெருமையைக் கண்டறிய வேண்டியது நம் தேச முன்னேற்றத்துக்கு மிகவும் அவசியம்.

# என் தமிழ் ஆசிரியர்கள்

## விநோபா

பதினைந்து வருஷத்துக்கு முன்பு நடந்த சம்பவம். என்னை நாகபுர்ச் சிறையிலிருந்து வேலூர்ச் சிறைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கே சேர்ந்ததும், அதிகாரி எனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். யாத்திரை செய்து வந்ததால் தலையெல்லாம் புழுதி. முதலில் க்ஷவரம் செய்துகொள்ள ஒரு நாவிதர் வேண்டும் என்றேன். உடனே ஒருவர் வந்து க்ஷவரம் செய்தார். அவரிடம் முதலில் தமிழ் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். வேலூர் சேர்ந்ததும், முதலில் நடந்த காரியம் க்ஷவரம்; இரண்டாவது நடந்தது தமிழ் மொழிப் பயிற்சி. பிறகு தான் ஆகாரம் கொண்டேன்.

எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தவர் மூன்று குருமார்கள்: முதலாவது, வேலூர்ச் சிறையில் நாவிதர்; இரண்டாவதாக, சென்னையில் ஒரு நாயக்கர்; இப்போது அவர் சட்டசபையிலோ பார்லிமெண்டிலோ இருக்கிறார். மூன்றாவதாக, கல்லிடைக்குறிச்சி யக்ஞேசுவர சர்மா.

நான் வேலூர்ச் சிறைக்கு வந்தபோது, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இந்த மொழிகளையும் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். 'இவர் ஏன் தென்னாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்கிறார்?' என்று மற்றவர்கள் சந்தேகித்தார்கள். என்னுடன் சில வியாபாரிகளும் இருந்தார்கள். தென்னாட்டில் வியாபாரம் செய்வதற்காகவே பாஷைகளை இப்படி நான் கற்றுக்கொள்வதாகக்கூட எண்ணிவிட்டார்கள்! ஆமாம், உண்மையே. வியாபாரத்துக்காகத்தான் கற்றுக்கொண்டேன்; அன்புக்கடை விரித்து வியாபாரம் செய்யவே கற்றுக்கொண்டேன்! ஆனால் இன்று பல வருஷங்களுக்குப் பிறகு, இங்கே இந்தப் பூதானத்தின் மூலம் அன்பு வியாபாரத்துக்காக வருவேன் என்று அப்போது எண்ணவில்லை.

—'சர்வோதயம்', தஞ்சாவூர்.

இந்தப் பிரச்னை ஒவ்வொரு பெற்றோருக்கும் ஏற்படுவதுண்டு; வழி என்ன?

# குழந்தையும் துக்க வீடும்

## மேரி மார்கரெட் கெர்ன்

என் பெரிய பெண்ணுக்கு ஐந்து வயசாயிருக்கும்போது நாங்கள் எங்கள் கிராமத்துக்குப் போயிருந்தோம். அங்கேதான் என் கணவரின் பெற்றோர்கள் இருந்தார்கள். நாங்கள் போயிருந்த சமயம் எங்கள் மாமா இறந்துபோனார். என் கைக் குழந்தைக்கு நான்கு மாதந்தான் ஆகியிருந்தபடியால், நான் அந்தச் சாவுக்குப் போக முடியவில்லை. ஆனால் என் கணவர் தம்முடன் பெண்ணையும் அழைத்துப் போக விரும்பினர்.

''என்ன? இந்தப் பச்சைக் குழந்தையையா இதற்கெல்லாம் அழைத்துப் போவார்கள்? ரொம்ப நன்றாயிருக்கிறதே!'' என்றேன் ஒரே கலவரத்தோடு.

''ஏன் கூடாது? அவளுக்கு மாமாவை நன்றாகத் தெரியும். நான் சிறியவனாக இருந்தபோது உறவினர் யாராவது இறந்து போனால், அதற்குப் போய்த்தான் வருவது வழக்கம்'' என்றார் கணவர்.

''நான் போவது வழக்கமில்லை. எனக்குப் பதினைந்து, பதினாறு, வயசான பிறகுதான் என் பெற்றோர்கள் என்னைத் துக்க வீடுகளுக்கு அழைத்துப் போகலாம் என்று நினைத்தார்கள்.''

என் கணவர் என்னை ஒரு விதமாய்ப் பார்த்தார். ''நீங்கள் பட்டணத்தில் இருந்ததால், அப்படி இருந்திருக்கும். இது கிராமாந்தரமில்லையா? ஏன், சாவுக்குப் போய் வருவதில் என்ன தப்பு?'' என்றார்.

எனக்கு அதற்கு ஒன்றும் சரியான சமாதானம் சொல்லத் தெரியவில்லை. ''ஐந்து வயசுக் குழந்தையின் உள்ளத்தில் இந்த மாதிரி சம்பவங்கள் எப்படிப் படுமோ, யார் கண்டார்கள்? ஏதாவது தவறான எண்ணம் ஏற்பட்டு விடப் போகிறதே என்றுதான் யோசிக்கிறேன்'' என்று கூறி முடித்தேன்.

இதற்கு அவர் கூறிய பதில் எனக்கு இன்றும் நினைவிருக்கிறது: ''தவறான எண்ணமா? என்ன தவறான எண்ணம்? சாவு வீட்டில் எவரும் தவறாய் நடக்க மாட்டார்கள். மாமா போனதைப்பற்றியும் அவர் குணத்தைப்பற்றியும் எல்லாரும் பேசுவதைக் கேட்டால்தான், அவளுக்கும் மாமா போய்விட்டார் என்பது நன்றாகப் புரியும்.''

என் கணவர் கூறியது சரி என்றுதான் எனக்குப் பட்டது. ஆயினும், 'சின்னக் குழந்தை! துக்கம் விசாரிக்கப் போகும்போது எதற்குப் போவது?' என்றே நினைத்தேன். ''ஏன், அவளுக்கு இன்னும் கொஞ்சம் வயசாகட்டுமே! அப்புறம் அழைத்துக்கொண்டு போனால் போகிறது'' என்றேன்.

''இன்னும் கொஞ்சம் வயசானால் மட்டும் எல்லாம் புரிந்துவிடுமோ? நான் நினைப்பதையும் நீ நினைப்பதையும் சேர்த்து வைத்துப் பார். அப்போது உனக்கே தெரியும் யார் நினைப்பது சரி என்று. சாவைப் பற்றிச் சாதாரணமாய் நினைக்க வேண்டும்.''

அவர் கூறியது உண்மையாக இருக்கலாம் என்றுதான் எனக்குத் தோன்றியது. ஆயினும் நான் குழந்தையாக இருக்கும்போது இந்தமாதிரி சமயங்களில் என்னை அழைத்துப் போக வேண்டாம் என்று என் பெற்றோர்கள் கருதினர்கள். அவர்களுக்கு உண்மையாக அதுதான் சரி என்று பட்டது. நான் ஒரு சாவுக்கும் போனதே இல்லை. ஆனால், 'சாவு என்றால் என்ன? செத்துப் போனவர்கள் எப்படி

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: பிப்ரவரி '57), சிக்காகோ-39, இல்லினாய்ஸ், யு. எஸ். ஏ.

இருப்பார்கள்? மற்றவர்கள் என்ன செய்வார்கள்?' என்ற விஷயங்களை யெல்லாம் தெரிந்துகொள்ள எனக்கு ஆவல் இருந்தது என்பது எனக்கு ஞாபகம் இருக்கிறது. என் கணவர் கூறியதைக் கேட்ட பிறகு, 'அவர் பெண்ணை அழைத்துப் போனால் போகட்டும்' என்று பேசாமல் இருந்துவிட்டேன். என் கணவரும் தம் தீர்மானப்படியே அவளை அழைத்துக்கொண்டுதான் சென்றார். ஆனால் அவர் செய்தது சரிதான் என்று எப்படித் தீர்மானம் செய்வது?

எனக்கு மூன்று குழந்தைகள். முதலாவதும் மூன்றாவதும் பெண்கள். நடுவில் பிள்ளை. சில மாதங்களுக்கு முன்பு எங்கள் பந்துக்களில் ஒரு சாவு நேர்ந்தது. அதற்குச் சிறிய குழந்தைகளை அழைத்துப் போவதைப்பற்றி எங்கள் ஆசாரியரை விசாரித்தேன். "உங்கள் சின்னப் பெண்ணை இந்தமாதிரி இடங்களுக்கு நீங்கள் அழைத்துப் போவீர்களா?" என்று கேட்டேன்.

"செத்துப் போனவர்கள் அவளுக்கு நன்றாய்த் தெரிந்தவர்களாயிருந்தால், சிலசமயம் அழைத்துப் போவதுண்டு" என்றார் அவர்.

'செத்துப் போனவர்கள் தெரிந்தவர்களாயிருந்தால்!' - இதே வார்த்தைகளைத்தான் என் கணவரும் கூறினார். நன்றாய்த் தெரிந்தவர்கள் என்றால், குழந்தைகளை அழைத்துப் போகலாம் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் குழந்தையின் மனசுக்கு எப்படி இருக்கும்? ஐந்து வயசுக்குமேல் பத்து வயசுக்குட்பட்ட குழந்தைகள் சாவைக் கண்டு என்ன எண்ணுவார்கள் என்பதைப்பற்றி உள்ள புத்தகங்களை எடுத்துப் பார்த்தேன். சுமார் ஐந்து வயசுள்ள குழந்தைகளுக்குச் சாவைப்பற்றி மனத்தில் ஒன்றுமே தோன்றுவதில்லை. அவர்கள் அதை வெகு சாதாரணமாய் நினைக்கிறார்கள். ஆறு வயசுக்குப் பிறகு உறவினர்களோ வேண்டியவர்களோ இறந்துபோனால் கொஞ்சம் புரியத் தொடங்குகிறது. எட்டு ஒன்பது வயசில் அறிவு இன்னும் கொஞ்சம் வளர்ந்ததும், 'எல்லாரும் ஒருநாள் செத்துப் போகவேண்டியதுதான்' என்ற விஷயம் அவர்களுக்குப் புலப்படுகிறது. பத்து வயசில் 'செடி முளைத்து வளர்ந்து மரமாகிக் கொஞ்ச காலத்துக்குப் பிறகு இலை உதிர்ந்து பட்டுப்போவதுபோல் தான் பிறப்பும் இறப்பும்' என்று தெரிந்துகொள்ளுகிறார்கள்.

என் சிறிய பெண்ணை ஒரு சமயம் நான் இந்தமாதிரி ஒரு சம்பவத்துக்கு அழைத்துச் சென்றிருந்த போது, அவள் என்ன செய்கிறாள் என்று கவனித்தேன். அவள் பேசாமல் அடக்கமாய் இருந்தாள். அவள் மனசில் ஒரு கலவரமும் உண்டாகவில்லை. 'அதென்ன? இதென்ன?' என்று என்னிடம் மெதுவாய்க் கேட்டுத் தெரிந்துகொண்டாள். வெகு நாட்களுக்குப் பிறகுகூட, அங்கே போய்விட்டு வந்ததைப் பற்றி வெகு சாதாரணமாய்ப் பேசுவாள். என் பிள்ளைக்கு 9 வயசு. அவனுக்குத் தன் தங்கையைக் காட்டிலும் இன்னும் கொஞ்சம் புரிந்திருந்தது. நடப்பதை யெல்லாம் கலவரம் சிறிதும் இல்லாமல் பார்த்துக் கொண்டு சாவதானமாக இருந்தான். பெரியவர்களான நாம் நினைப்பதுபோல், பொதுவாய்க் குழந்தைகள் சாவைக் கண்டு பெரிய குழப்பமும் பீதியும் அடைவதில்லை என்ற விஷயம் எனக்கு விளங்கிற்று. என் பெரிய பெண்ணும் மிகவும் சகஜமாகவே இருந்தாள். தன் வயசுள்ள பெண்கள் சிலர் சாவுக்குச் சென்றே அறியாதவர்களா யிருப்பதைப் பார்த்து, அவளுக்குத் தான் அப்படி இல்லாமல் இருப்பதைப் பற்றித் திருப்தியாகவே இருந்தது.

சாவுக்குப் போவது இருக்கட்டும். 'அதைப்பற்றிக் குழந்தைகளிடம் எப்படிச் சொல்லுவது?' என்ற கவலை என்னை வாட்டியது. அதைக் குறித்துப் பல பெரியவர்களிடம் கேட்டேன். 'அதெல்லாம் குழந்தைகளுடைய சுபாவம், நாம் பேசும் விதம் இவற்றைப் பொறுத்தது' என்று அவர்கள் பதில் கூறினார்கள். "சாவு என்றால் ஏதோ மிகவும் பயங்கரமானது என்று பெரியவர்கள் நினைப்பதாலேயே குழந்தைகளும் அதைப்பற்றிக் கலவரம் அடைகிறார்கள்" என்று டாக்டர் நார்மன் வின்ஸெண்ட் பீல் என்ற மத

போதகர் அபிப்பிராயப் படுகிருர். பெற்ருேர்கள் சாவைச் சகஜமான தாக நினைத்தால், அவர்களுடன் கூட இருக்கும் குழந்தைகளும் அதைச் சாதாரண நிகழ்ச்சியாகவே கருதுவார்கள். செத்துப்போவ தைப்பற்றிக் குழந்தையின் மன சில் சரியாகப் படும்படி எடுத்துக் கூறுவது, பெற்ருேர்களுக்கு ஒரு பெரும் பிரச்னைதான். 'சாவு நடந்த வீட்டுக்குக் குழந்தைகளை அழைத்துப் போவதா, வேண் டாமா' என்ற கேள்வி பெரிதில்லை. 'வாழ்வைப் போலச் சாவையும் சகஜமாய் ஏற்றுக்கொள்ள வேண் டும்' என்று பெற்ருேர்களே தெரிந்துகொள்ளவேண்டும்! அது தான் முக்கியம். அப்போது குழந்தைகளுக்கும் அதைப்பற்றிப் பயமே ஏற்படாது.

ஆனல் அதற்காகச் செத்தவர் வீட்டுக்குக் குழந்தைகளைக் கட்டா யப்படுத்தி அழைத்துச் செல்லுவது சரி அல்ல; வரப் பிரியப்படாத குழந்தையை அழைத்துச் செல்லா மல் இருப்பதுதான் நல்லது. எந்த வயசுக் குழந்தையா யிருந்தாலும், அப்படிப்பட்ட இடத்துக்கு அழைத் துப் போவதைப்பற்றி நான் இப்போதெல்லாம் சந்தேகப்படுவ தில்லை. சாவு என்ருல் என்ன என் பதை எடுத்துக் கூறி, அதை அவர் கள் சகஜமாய் நினைக்கும்படி செய் வதை ஒரு பெரும் பொறுப்பாகவே நாங்கள் கருதுகிருேம். 'சாவு, வாழ்வு இரண்டும் உலக நியதிக்கு உட்பட்டவை' என்ற உண்மை அவர்களுடைய மனசில் பட்டுவிட் டால், பிறகு அவர்களுக்குப் பயம் எப்படி உண்டாகும்?

## ஆண் - பெண் பகட்டு

வுட்ரோ வில்ஸன் என்ற பழைய அமெரிக்க ஜனதிபதி ஒரு காலத்தில் ப்ரின்ஸ்டன் யூனிவர்ஸிட்டி யின் தலைவராக இருந்தார். மாணவி ஒருத்தியின் தாய் அவரிடம், ''இதை ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கும் கலப்புக் கல்லூரியாகச் செய்துவிடுங்கள்'' என்று யோசனை சொன்னுள்.

''எதற்காக?''

''ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் என் னவோ பிரமையோடு பார்க்கிருர்களே, அந்தப் பிரமையை ஒழிப்பதற்காகத்தான்.''

''அன்புள்ள அம்மணி, என்ன வந்தாலும் சரி என்று, அந்தப் பிரமையைத்தான் நாங்கள் விடாது பாதுகாத்து வர விரும்புகிருேம்'' என்ருர் வுட்ரோ வில்ஸன். —டாக்டர் ரேமாண்டு ஃபாஸ்டிக்

## குடும்பம் தொடங்குகிறது

ஒரு மனிதனுக்கு முதல் குழந்தை பெண்ணுகப் பிறந்தது. அதற்குப் பதினுலு வயசான பிறகே, அவ னுடைய மனைவி மறுபடியும் கர்ப்பந் தரித்தாள். இந்த விஷயத்தைப்பற்றி அந்தத் தகப்பன் தன் நண் பர்களுக்கு இப்படித் தகவல் தெரிவித்தான்:

''குழந்தைகளைப் பார்த்துக்கொள்ள ஒரு தாசியைத் தயார் செய்துவிட்டோம். இப்போது நிம்மதியாகக் குடும்ப விருத்தி வேலையில் முனைந் திருக்கிருேம்.''

—மார்ஸிலீன் காக்ஸ், 'லேடீஸ் ஹோம் ஜர்னல்.'

# ஏழைகளின் குடை

## பிலோ இருதயநாத்

மிகப் பழமையான குடிசைத் தொழில்கள் பல உண்டு. அவற்றில் சிலவற்றை வளர்த்தால் மிக நவீன முறையில் அவை வலுக்க வழியுண்டு. அப்படிப்பட்ட ஒன்று இது.

ஒரு தொழிற்சாலையை நிர்வகிக்க வேண்டுமானால், அதற்குப் பொருள் வேண்டும். உடனே பலன் தரும் தொழிலென்றும், பல மாதங்களுக்குப் பின்பு பலன் தரும் தொழிலென்றும் தொழில்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். காலையில் முதல் போட்டு ஆரம்பித்தால், மாலையில் பலன் தரும் தொழிலும் உண்டு.

நாள், வாரம், மாதம், வருஷம் இப்படி வெவ்வேறு கால அளவில் பலன் தருபவையாக இந்தக் காலத்திலே தொழில்களைப் பல வகையாகப் பிரிக்கிறார்கள். வாரத்திலோ மாதத்திலோ பலன் தரும் தொழில்களில் ஒன்று 'தாழங் குடை'த் தொழில்.

சமீபத்தில் சைதாப்பேட்டைத் தாலூகாவைச் சேர்ந்த ஒக்கியம் துரப்பாக்கம் கிராமத்தில் உள்ள பேட்டை என்ற சிற்றூருக்குச் சென்றேன். அந்தப் பேட்டையில் நான் இதற்கு முன்பு காணாத ஒரு குடிசைத் தொழிலைக் கண்டு பிரமித்துப் போனேன்.

இந்த ஏழைகள் செய்யும் தாழங் குடைகளை, ஆயிரக்கணக்கில் லாரிகளில் ஏற்றுமதி செய்கிறார்கள். அதைக் கண்ட நான், ''என்ன, இத்தனை தாழங் குடைகளா செலவாகின்றன?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

★



தாழம் பூவைப் பெண்கள் தலையிலே அழகாய்த் தைத்துக் கொள்கிறார்கள்.

காப்பிரைட்: சுதேசமித்திரன் (தமிழ்: 27-10-'56), சென்னை.



குடையின் அளவுக்கு மூங்கில் பத்தைகளை வெட்டிச் சீவிச் சட்டம் கட்டுகிறார்கள்



நல்ல ஓலைகளையும் மட்ட ஓலைகளையும் வேறுபடுத்தித் தனித் தனி வட்டமாக அடுக்குகிறார்கள்

''ஒவ்வொரு வருஷமும் சுமார் ஐம்பதாயிரம் குடைகளுக்குமேல் செலவாகின்றன. ஆனால் இந்த வருஷத்தில் சற்று அதிகமாகவே செலவாகும். சென்னைக்கு அடுத்து இந்தப் பேட்டையைத் தவிர மற்ற எந்த இடத்திலும் இந்தத் தொழிலைச் செய்வதில்லை. ஆனால் சில ஊர்களில்மட்டும் பனை ஓலைக் குடைகள் செய்கிறார்கள். பர்மா, மலேயா இந்த இடங்களில் மட்டும் ஒருவித அகலமான ஓலையால் குடை செய்து, அதையே தொப்பிபோல் தலையில் அணிந்து கொள்வதும் உண்டு. ஆனால் தாழை ஓலைகளால் இந்த விதமான குடைகளை இங்கேதான் செய்கிறார்கள்.'' என்று பதில் கிடைத்தது.



ஓலைகளை வாரிச் சீவி ஒழுங்குபடுத்துகிறார்கள்

இந்தக் குடையை ரெயில்வே லஸ்கர்களுக்கு ஐயாயிரமும், சென்னைக் கார்ப்பொரேஷனுக்குச் சுமார் ஐயாயிரமும் வாங்குகிறார்கள். சில்லறையிலும் சில ஆயிரம் குடைகள் ஒரு வருஷத்திலே செலவாகின்றன.

பேட்டை வாசிகளில் ஒருவர், ''இந்தக் குடையை 'நாலணாவுக்குக் கொடுக்க முடியுமா?' என்று வீதியிலே சிலர் விலை கேட்கிறார்கள். இதை எவ்வளவு சிரமத்துடன் இந்தப் பேட்டைவாசிகளான நாங்கள் செய்கிறோம் என்பதை நீங்களே நேரில் இன்று கண்டால் நன்மையாக இருக்கும்; பத்திரிகைகளிலும் எழுதுவதற்கு உதவியாக இருக்கும்'' என்று கூறினார்.



ஓலைகளைப் பாய்போல் தைக்கிருர்கள்

தாழம் பூ என்ருல், 'பாம்புகள் வாழும் இடம்' என்று நமக்கெல்லாம் ஞாபகம் வரும். இப்படிப்பட்ட பல தாழங் காடுகளுக்குச் சென்று, தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், தலையில் வைத்துக்கொள்ளும் பூவோடு அதன் ஓலைகளையும் சுமை சுமையாகக் கட்டிக்கொண்டு வந்து, காயவைக்கிருர்கள். பிறகு சுமார் ஏழு முதல் ஒன்பது மணி நேரம் ஓலைகளைத் தண்ணீரில் ஊற வைக்கிருர்கள். அவை நிமிர்ந்தபின் நிழல் காய வைக்கிருர்கள். காய வைத்த தாழம் ஓலைகளின் இருபுறமும் உள்ள முள்ளை நகத்தால் நேராக வகிர்ந்தும், நடு முள்ளை மட்டும் கத்தியால் கிழித்தும் எடுத்துவிடுகிருர்கள். முள்ளைக் கிழிக்கும்போது அவர்களுக்குக் கத்தியாலும் முள்ளாலும் பல காயங்கள் ஏற்படுவதுண்டு. முள் நீங்கிய ஓலைகளைச் சிறுமிகளோ பெரியவர்களோ நல்ல ஓலைகளாகவும் மட்டமான ஓலைகளாகவும் தனித்தனியே எடுத்து, தனித்தனியான வட்டமாக ஒன்றின் மேல் ஒன்று வைத்து, பெரிய வட்டமாகச் சுற்றுகிருர்கள். நல்ல ஓலைகளைமட்டும் உறுதியான ஈச்சம் ஈர்க்கால் பாய் வடிவாகத் தைக்க வேண்டும். ஓலை தைக்கும் பணியைச் சாதாரணமாகப் பெண்களே செய்கிருர்கள்.

ஓலையை ஒழுங்குபடுத்தும் வேலை முடிந்ததும், மூங்கில் கொம்பை ஐந்து துண்டுகளாக வெட்டவேண்டும். எந்த அளவுக்குத் தாழங் குடைகள் வேண்டுமோ அந்த அளவுக்கு இப்படி அவற்றை வெட்டி, வட்டமாக வளைத்துக் கட்டுகிருர்கள்.

பிறகு 'கசங்கு' என்ற ஈச்ச மட்டையைக் கொண்டு, கைப்பிடிக்குப் பக்கத்திலே கட்ட வேண்டும். இரண்டரைச் சாண் மூங்கில் துண்டுகளைப் பத்தையாக்கி நடுத் துவாரத்தில் கெட்டியாகச் செருகி,



பூர்த்தியாகி விற்பனைக்குச் செல்லும் குடை

குடை அளவுக்கு வட்டமாக வரும் படி 'நடுக்கட்டு' என்று நாரால் கட்டுகிறார்கள். அப்புறம், மத்தியில் தலைக்கட்டும் ஓரத்தில் ஒரு கட்டும் கட்டி, பிறகு குடை அளவுக்கு வெளியில் நீண்டிருக்கும் குச்சிகளை அளவாக வெட்டி விடுகிறார்கள்.

கடைசியில் முற்றிய மூங்கிலைப் பன்னிரண்டு பாகம் கவை கவையாகப் பிளந்து, அதைக் குடையின் நடுவில் செருகி, நடு மூங்கில் கைப்பிடியின் காலைக் குடையுடன் சேர்த்து மேல் புறம் மடித்துச் செருகி உறுதியாகக் கட்டி விடுகிறார்கள். கட்டிய பிறகு, ஓலையில்லா மூங்கில் குடைச் சட்டத்தின்மேல் முதலில் மட்டமான துண்டுத் தாழம் ஓலைகளைக் குடையின் மூங்கில் சட்டத்துடன் சேர்த்துத் தைக்க வேண்டும்.

ஒரு வட்டம் துண்டு ஓலைகளைத் தைத்தபின், பாய்போல் தைத்த நல்ல ஓலையைக் குடையின் மேல் மூடியாக அமைத்து, அதையும் ஊசியால் ஆழமாகத் தைத்துக் குடையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்தக் குடையை இவ்வளவு சிரமத்துடன் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வதால், இது ஏழைகளுக்கு மழைக் காலத்தில் சிறந்த குடையாக உதவுகிறது; சிறந்த குடிசைக் கலையாக வழங்குகிறது.

இந்தக் குடிசைத் தொழில், நல்ல முறையில் முன்னேற்றம் அடையத் தக்க வசதிகளை ஏற்படுத்தி, இந்தப் பேட்டைவாசிகளை உற்சாகப்படுத்தினால், இன்னும் சில ஆண்டுகளுக்குள் பிற தொழில்களைப்போல், இது மிகவும் வளரும். தவிர, இதை மற்ற நாடுகளில் இருப்பதைப்போல் மடக்கும் ஓலைக் குடையாகவும் ஓலை விசிறியாகவும் செய்வார்கள். சீனா, மலேயா நாடுகளில் தயாராகும் ஓலைக் குடைகளுக்கும் மடக்கு ஓலை விசிறிகளுக்கும் இணையாகக் கட்டுவதற்கு நம் இந்திய மக்களுக்கும் திறமை உண்டு என்பது நிச்சயம்.

## இரண்டு காதலர்கள்

கை டி மொப்பஸாங் என்ற பிரபல பிரெஞ்சுக் கதாசிரியரின் வாழ்விலே எத்தனையோ காதல் புயல்கள் அடித்ததுண்டு.

ஒரு சமயம் அவர் காதல் கொண்ட ஒரு பெண்ணைப் பாரிஸ் நகர வைத்தியர் ஒருவரும் காதலித்தார்.

ஒரு நாடகக் கொட்டகையில் இரண்டு காதலர்களும் சந்தித்தார்கள்.

''இந்தப் பேரழகி உங்கள் அசட்டு உளறலைக் கேட்டுக் கேட்டு நோயுறும்போது, இவளை நான் குணப்படுத்துவேன்'' என்றார் வைத்தியர்.

''இந்தப் பேரழகி உங்கள் மருந்தைத் தின்று தின்று சாகும்போது, இவளை நான் சிரஞ்சீவியாக்குவேன்'' என்றார் ஆசிரியர். —'பிக்சர் போஸ்ட்'

## பொது டெலிஃபோன்

**ஒருவன்:** எங்கே போயிருந்தாய்?

**தோழன்:** பொது டெலிஃபோன் பெட்டிக்குள் புகுந்து, என் காதலியுடன் பேசிக்கொண்டிருந்தேன். யாரோ ஒரு பெண் டெலிஃபோனை உபயோகிக்க வேண்டும் என்றாள். நாங்கள் வெளியே வர வேண்டியதாயிற்று.

—'கொலம்பியா ஜெஸ்டர்'

தன் சொந்த இனத்தின் பாட்டை விட்டு மற்றோர் இனத்தின் பாட்டையும் ஒரு பறவை கற்குமோ!

# பாடும் பறவை

## ஹ்யூ எம். ஹாலிடே

பறவைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் சமீபத்தில் சில புதிய விஷயங்களைக் கவனித்திருக்கிறார்கள். பாடும் பறவைகள் விநோதமான சில பாஷைகளை-வேறு இனத்தைச் சேர்ந்த பறவைகள் பாடும் ஸ்வரம் முதலியவற்றைத்தான் -கற்றுக்கொள்கின்றன. அதோடு, அங்கங்கே உலகில் இருக்கும் பல பிரதேசங்களுக்கே உரிய விசேஷ உச்சரிப்பு, அழுத்தம் இவைகளைப் பழகிக்கொள்கின்றன. பறவைகளின் மொழிகூட மக்களின் மொழிகளைப்போல் எப்போதும் சூழ்நிலையைப் பொறுத்து மாறிக்கொண்டே போகிற மாதிரிதான் தோன்றுகிறது.

பறவைகள் பாடுவதிலிருந்து அவை இன்ன பறவைகள் என்று அடையாளம் கண்டுகொள்ளப் பழகியவர்கள்கூடப் பல சமயம் அவை புதுவிதமாகக் கூவுவதைப் பார்த்துக் குழம்பிவிடுகிறார்கள். இன்ன பறவைதான் இப்படிப் புதுவிதமாகக் கூவியது என்று கண்டுபிடித்ததும் கவனித்தால், அது ஏற்கனவே அவர்களுக்குப் பழக்கமான பறவையாகத்தான் இருக்கிறது. சமீபத்தில் மெடோ - லார்க் என்ற வகைப் பறவை டோரண்டோவுக்கு மேற்கே சில மைல் தூரத்தில் வழக்கமாகக் கூவும் விதத்தோடு, கார்டினல் என்ற பறவையைப் போல இரண்டு ஸ்வராவளிகளைப் பாடிக்கொண்டிருந்தது. கூட்டில் இருந்த மெடோ-லார்க் குஞ்சுகளைச் சிவப்பு இறக்கை கொண்ட ப்ளாக்-பேர்டின் கூட்டுக்கும், ப்ளாக்-பேர்டின் குஞ்சுகளை மெடோ-லார்க்கின் கூட்டுக்கும் மாற்றிப் பார்த்ததில் தங்களை வளர்த்த பெரிய பறவைகளைப் போலவே குஞ்சுகளும் பாடுவது தெரிந்தது.

டாக்டர் வெஸ்லி ஈ. லான்யன் என்பவர் அரிஜோனு சர்வகலாசாலையில் பிராணிநூல் புரொபஸர். அவர் சமீபத்தில் ஒரு கட்டுரையில் தாம் நாலு ஆண்டுகளாகக் கிழக்கு, மேற்குப் பிரதேசம் இரண்டிலும் வாழும் மெடோ-லார்க்குகளின் இயல்புகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். மேற்கத்தி லார்க்கின் குஞ்சுகளைக் கிழக்கத்தி லார்க்குகளின் கூட்டுக்கும் அதேமாதிரி கிழக்கத்தி லார்க்குகளின் குஞ்சுகளை மேற்கத்தி லார்க்கின் கூட்டுக்கும் மாற்றினாராம். வளர்க்கும் பறவைகள் பாடுவதுபோலவே வளர்ப்புக் குஞ்சுகளும் பாடின. இதிலிருந்து சற்று அழுத்தமாக ஸ்வரம் பாடினால், அது வளர்ப்புக் காரணமாகக் கற்றுக்கொண்டது என்று முடிவு செய்தார். ஆனால் ஒன்றை ஒன்று அழைக்கும் ஸ்வரம் மட்டும் அதனதன் பாரம்பரியத்தைப் பொறுத்து அமைந்திருப்பதாகவே சொல்ல வேண்டியிருக்கிறது. அதிகமாக ஆராயப் போனால் குழம்பிப் போகத்தான் நேரும்.

சில சமயம் காக்கை இனத்தைச் சேர்ந்த ப்ளூ-ஜே என்ற துறுதுறுப்பான பறவை இயல்பான தன் குரலுக்கு மாறான சில ஒலிகளை வெளியிடும். சிவப்புத் தோள்பட்டையுடைய பைரி (ரெட்-ஷோல்டர்டு ஹாக்) ஒன்றுதான் ப்ளூ-ஜேயைப் போலவே கூவும். அதைத் தவிர வேறு எதுவும் இந்தமாதிரி கூவுவதாகத் தெரியவில்லை. இருந்தாலும் ஓர் ஆண்டுக்கு முன் எரிண்டேல் என்ற இடத்தைச் சேர்ந்த ராய் ஐவர் என்பவர் தம் கையாலேயே தனியாக ப்ளூ-ஜே ஒன்றை வளர்த்தார்; துளிக்கூட அந்தப் பறவையின் இனத்தோடு சேரவிடாமல் வளர்த்தார்; வேறு இனப்

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகா (ஆங்கிலம்: 6-1-'57), கல்கத்தா.



ஓரியோல்



ஆண்ட் த்ரஷ்



கரித்தலை க்ராஸ் பீக்

பறவைகளோடு அது பழகி வந்தது. அவைகளைப் போலவே பாடவும் பதிலுக்குக் கூவவும் ஆரம்பித்து விட்டது.

இப்போது ஓர் ஆண்டு கழித்து இந்த ப்ளூ-ஜே, கார்டினல் என்ற பறவையைப் போலவே இரண்டு ஸ்வராவளிகளைப் பாடுகிறது; மாலை நேரம் க்ராஸ் பீக் என்ற பெரிய அலகுடைய பறவை கத்துவதுபோல் கத்துகிறது; ராபின் குருவி திகில்கொண்டு கூவுவது போலக் கூவி இயல்பாக ராபின் துணுக்குத் துணுக்காய்ப் பாடுவது போலப் பாடுகிறது; பால்டிமோர் ஓரியோல் என்ற பறவையைப் போல் ஸ்வராவளி பாடுகிறது; இங்கிலீஷ் ப்ளாக்-பெர்டு என்ற பறவை போல் சீட்டி அடிக்கிறது; கிட்டத்தட்ட மனிதர் உச்சரிப்பதுபோல் சில ஒலிகளைச் செய்து காட்டுகிறது. தனியே கிடந்து அவரிடம் கொண்டு சேர்க்கப் பெற்றது, இந்தப் பறவை. தாய் தந்தையோடு பழகவே வாய்ப்பு ஏற்படாததால் அவைகளிடமிருந்து கூவும் விதத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், பொதுவாக ப்ளூ - ஜேக்கு உரிய எல்லா ஸ்வராவளிகளையும் அது பாடுகிறது. இது பாரம்பரியத்தால் வந்தது என்றே கொள்ள வேண்டும்.

மிஸ்டர் ஐவர் செல்லமாக வளர்த்த ராபின் குருவி ஒன்று இருக்கிறது. இது மனிதர்களோடு மட்டுமே பழகியது; ராபினுக்கு இயல்பான ஸ்வராவளி எதுவுமே இதற்குத் தெரியாது; இதுதான் விநோதமாக இருக்கிறது. மனிதர்கள் சீட்டி அடிப்பது போலவே கூவுகிறது. மற்றொரு சமயம், த்ரஷ் என்ற இனத்தைச் சேர்ந்த ஐரோப்பிய ப்ளாக்-பெர்டு ஒன்றை யாரோ கொண்டு வந்து கொடுத்தார்கள் அவரிடம். அது 'விட்-பூர்-வில்' என்று கூவும் பிரசித்தமான கரிக்குருவி போலவும், இன்னும் பலவிதமாகவும் கத்தியது. இந்த வகை ப்ளாக் - பெர்டு இப்படிப் பல பறவைகளைப் போல அபிநயிக்கும்.

ரோஜா நிற மார்புள்ள பெரிய அலகுள்ள கீழ்நாட்டுக் குருவியும்

தலை கறுப்பாக இருக்கும் பெரிய அலகுள்ள மேல்நாட்டுக் குருவியும் பாடுவது ஏறக்குறைய ஒரேமாதிரிதான் இருக்கும். இருந்தாலும் இவைகளில் இரண்டு வகையின் குஞ்சுகளும் தாம் எந்த வகைத் தாய்ப் பறவையோடு வளர்கின்றனவோ அதேமாதிரி பாடக்கற்றுக்கொண்டுவிடும். 'கோணல் மூக்கு ராபின்' என்று ஒரு குருவி இருந்தது. மூக்கில் ஏதோ அடிபட்டுக் கோணிவிடவே இப்படிப் பெயர் வைத்திருந்தார்கள் அதற்கு. அது மற்ற ராபின்களைப் போலப் பாடினாலும் அவைகளைவிட உரக்கவும், நன்றாகவும், நீண்ட நேரம் விடாமல் சீட்டியடிக்கும். அதைத் தொடர்ந்து மென்மையாகச் சில நேரம் பாடும். இதைப்போல் ஒரு ராபின் பாடுவதென்றால் பிரமாதந்தான்! எங்கோ கற்றுக்கொண் டிருக்க வேண்டும். இருந்தாலும், பலவகைப் பறவைகளிடமிருந்து கற்றதை அது தொகுத்துப் பாடியது என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்னொரு ராபின் வழக்கமாக 'டட்-டட்-டட்' என்று கூவுவதோடு நீண்டு கீச்சிட்டுப் பாட ஆரம்பிக்கும். அப்போது மரங்கொத்திக் குருவி ஒன்று 'நொங்' 'நொங்' என்று ஒரே மாதிரி கூவ ஆரம்பித்துவிட்டால் போதும்; தானும் அதைப்போலவே கூவத் தொடங்கிவிடும்; அப்புறம் ஓயவே ஓயாது. பாடும் பறவைகளில் ஒன்றுக்குத் தன்னைவிட மிகவும் மட்டமான குரலுடைய மற்றோர் இனப் பறவையைப் போல் கூவ வேண்டும் என்று குஷி பிறந்துவிட்டது என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.



கொண்டை லார்க்



ராபின்

பறவையின் குரல் ஒலி, மனிதர்களுடையது போல் தொண்டைக் குழியிலிருந்து தோன்றுவதில்லை. அதன் தொண்டைக்குக் கீழ்க் காற்றுப் பை இரண்டாகப் பிரியும் அடிப்பாகத்திலிருந்துதான் குரல் ஒலி கிளம்புகிறது. இதற்கு 'ஸிரிங்க்ஸ்' என்று பெயர். கிரேக்கப் பழங்கதையில் ஸிரிங்க்ஸ் என்ற யட்சகன்னிகை ஒருத்தி வருகிறாள். அவள் டயானா (சந்திரன்; கிரேக்க புராணத்தில் சந்திரன் பெண் தெய்வம்!) என்ற தேவியை வழிபடுபவள்; மகா பக்தை. காட்டில் வசிக்கும் ஸடைர் என்ற புருஷாமிருகங்களுக்கும் வனதேவதைகளுக்கும் இந்த யட்சகன்னிகையிடம் மிகுந்த அன்பு. பான் என்ற தேவன் இவளை அணைத்துக்கொள்ள வந்தானாம். ஆனால் அணைத்துக்கொண்டதும் பார்த்தால், குழல்போல் அமைந்த 'ரீட்' என்ற நாணல் வகையைச் சேர்ந்த புதர்களை அணைத்ததாகத் தெரிந்ததாம். அப்போது அவன் பெருமூச்சு விட்டானாம். உடனே அந்த நாணற் குழல்களில் அது பாய்ந்து உருக்கமான இன்னிசை கேட்டதாம்.

பான் அந்த இன்னிசையில் ஈடுபட்டு நாணற் புதரிலிருந்து ஏற்றத் தாழ்வான பல குழல்களை எடுத்துப் பக்கத்தில் பக்கத்தில் வைத்துக் கட்டி ஒரு வாத்தியம் தயாரித்தான்; அந்த யட்சகன்னிகையின் மேல் வைத்த மதிப்புக் காரணமாக அந்த வாத்தியத்துக்கு 'ஸிரிங்க்ஸ்' என்று பெயர் இட்டான். பாடும் பறவைகளின் காற்றுப் பை அடிப்பாகத்தில் உள்ள இந்த உறுப்புத்தான் இப்படி அவைகளின் குரல் ஒலி கிளம்புவதற்குக் காரணம்;

இந்த 'ஸிரிங்க்ஸ்' என்ற உறுப்பில் இருக்கும் 'மெம்ப்ரேன்' என்ற தசை நார்களுக்குள் காற்றுப் பாயும்போது அவை துடிக்கும்; ஏழு அல்லது ஐந்து இரட்டைத் தசை நார்கள் இப்படி அமைந்திருக்கின்றன. இந்தப் பறவைகளின் அலகும் நாக்கும் இந்தமாதிரி ஸ்வரம் வெளிப்படத் துணையாக இருக்கின்றன.

இந்தப் பாடும் பறவைகளில் பல வகை உண்டு. ஈ பிடிக்கும் வகை, சில உருக்கமான ஸ்வரங்களையே பாடும். மற்றப் பறவைகளைப்போல் அபிநயிக்கும் வகையைச் சேர்ந்தவை: ஸ்டார்லிங் குருவி (இது திருட்டுப் பறவை), மாக்கிங் - பெர்டு என்ற ஏளனம் செய்யும் பறவை - இன்னும் இப்படிச் சில வகைப் பறவைகள். இன்ன இடத்தைச் சேர்ந்தவை என்று சொல்லக் கூடிய இன்னும் ஏராளமான பாடும் பறவைகளும் உண்டு. அந்த அந்தப் பிரதேசத்துக்குப் போய் வருவதால் குரல் மாறுபாடுகள் ஏற்படுவதுண்டு. சில பிராந்தியங்களோடு சம்பந்தப்பட்ட உச்சரிப்புக்களையும், குறிப்பிட்ட இடத்துக்கே உரிய சில தன்மைகளையும் இவைகளிடம் காணலாம்.

தெற்குப் பிரதேசத்தில் குளிர் காலத்தில் அமெரிக்கக் கண்டத்தின் வேறு பகுதிகளிலிருந்து வரும் மற்ற வகைப் பறவைகளோடு இவை பழக நேரிடும். ஆனால் பெரும்பாலான பறவைக் குஞ்சுகள் கூட்டில் இருக்கும்போதுமட்டும்பாடும்; ஆரம்ப தசையில் மற்றப் பிரதேசங்களுக்குப் பழக்கமான உச்சரிப்புக்களைக் கற்க அவைகளுக்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. இதனுல்தானே என்னவோ, வருஷம் முழுவதும் ஒன்றை ஒன்று கூவி அழைக்கும் போது எழுப்பும் ஒலி, பாடும் சமயம் ஸ்வரம் மாறுகிற மாதிரி அவ்வளவு மாறுவதில்லை.

குளிர்காலத்தில் அமெரிக்க வளைகுடாக் கரைப் பகுதியில் மூன்று வகையான மெடோ - லார்க் என்ற பறவைகளை ஏராளமாகக் காணலாம். சில நிபுணர்கள் அவை தனித் தனி இனத்தைச் சேர்ந்தவை என்கிறுர்கள். ஆனுல் சகஜமாக ஊர் பார்க்க வருகிறவர்களுக்கு அவை எல்லாமே ஒரே மாதிரிதான் தோன்றும். தெற்குப் பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூர் மெடோ - லார்க் மேற்கத்தி லார்க்குகளோடும் கிழக்கத்தி லார்க்குகளோடும் கலந்து பழகும். ஆனுல் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் போது ஒவ்வொன்றுக்கும் உள்ள வித்தியாசம் குரலில் நன்ருகத் தெரியும்.

மேற்கத்தி மெடோ-லார்க் சமவெளிகளில் எங்கும் பாடித் திரியும். சில சமயம் அது பாடுவது கிழக்கத்தி ஆலிவ் நிற முதுகுள்ள த்ரஷ் என்ற குருவி பாடுவதுபோல் இருக்கும்; ஒரு ஸ்தாயியிலிருந்து இன்னொரு ஸ்தாயிக்கு மாறும் போது புல்லாங்குழலின் இசை போலவே இருக்கும். கிழக்கத்தி மெடோ-லார்க் பல்லவி பாடுவது போல் அடிக்கடி ஒரு ஸ்வராவளியைப் பாடும். அதற்கும் மேற்கத்தி மெடோ-லார்க்கின் ஸ்வரத்துக்கும் உள்ள வேறுபாடு தெளிவாகத் தெரியும். ஒரு நாள் சாயங்காலம் பசும்புல் வெளி ஒன்றில் அமர்ந்து நான் இளவேனில் காலத்து ஒலிகள் பல காற்றில் மிதந்து வருவதைக் கேட்டுக்கொண் டிருந்தேன். அப்போது மேற்கத்தி மெடோ-லார்க் ஒன்று ஒரு சிறு பள்ளத்தாக்கின் அருகில் முன்னிட்டு நிற்கும் மேட்டில் இருந்துகொண்டு இருட்டுகிற வரையில் வெகு ஜோராகச் சீட்டியடித்துப் பாடிக்கொண் டிருந்தது.

மேற்கே இப்படிப் பாடும் பறவைகள் இருப்பதுபோல் கிழக்கிலும் உண்டு. மேற்கில் சில பறவைகள் பாடும் ஸ்வராவளிகளும் கிழக்கே இருப்பவர்கள் கேட்டுப் பழக்கமானவை. சில சமயம் நமக்கு ஏற்கனவே பழக்கமானது என்று எண்ணிக்கொண் டிருக்கும் பறவை திடீரென்று புது விதமாகக் கூவிப் பாடுவதைக் காணலாம். ஒரே ஸ்வராவளியாக இருந்தாலும் அதைப் பாடும் முறையில் வேறுபாடு இருக்கும். நீண்டு ஒலித்துக் கொண்டாவது இருக்கும்; இல்லாவிட்டால் மூக்கு ஸ்வரமாக அடங்கிப் போகும். சில சமயம் இன்ன விதந்தான் என்று சொல்ல முடி

யாதபடி ஸ்வர மாறுதல்கள் இருக்கும்.

புல்தரையில் அமர்ந்து கவனித்தால் நமக்குப் பழக்கமான கவிஞர்களின் பாடல்கள் சில கேட்கும். தொலேவில் உள்ள சில நாட்டில் வாழும் மக்கள், கவிஞர் இந்தப் பறவைகள் பாடும் ஒலியைச் சொல்லும் உணர்ச்சியும் கொண்ட பாடலாக எப்படி அருமையாக அமைத்திருக்கிருர் என்றுதானே நிச்சயமாக எண்ணுவார்கள்? -இப்படியெல்லாம் நினைத்து ஆச்சரியப்படுவோம்.

நான் தங்கியிருந்த சில பிரதேசங்களில், சாதாரண ராபின் குருவி இதுவரையில் பாடிக் கேட்டிராத விதமாக ஏதோ வெளி நாட்டுப் பறவைபோல் பாடிக் கேட்டிருக்கிறேன். மரங்களின் உச்சியிலும் புதரிலும் இன்னும் இப்படிப் பல விநோதமான பறவை யொலிகளைக் கேட்டிருக்கிறேன். அவை எங்கிருந்து வருகின்றன என்று நெருங்கிக் கவனித்தபோது குரல்மட்டுமே புதுமையாக இருந்ததே யொழிய நமக்குப் பழக்கமான பறவைதான் இப்படிப் பாடியது என்று தெரிந்தது.

சில ஆண்டுகளுக்கு முன் பத்து, பன்னிரண்டு வெள்ளைக் கொண்டைக் குருவிகள் (வொயிட் க்ரௌண்டு ஸ்பாரோ) ஓர் இள மரத்தின் மேல் அமர்ந்து மொத்தமாகச் சேர்ந்து பாடுவதைக் கேட்டேன். அப்போது இந்தக் காட்சி அபூர்வமாகவும் விநோதமாகவுந்தான் எனக்குப் பட்டது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதியில் வாழும் நாம் இந்தக் குருவிகளை, குளிர்ப் பிரதேசத்திலிருந்து இவை வடக்கே தொலேவில் தங்கள் கூடுகளை நோக்கிப் பறந்து போகும்போது தான் பார்க்க முடியும். அப்பாலும் பல சமயம் இந்த வெள்ளைக் கொண்டைக் குருவிகள் தனியே பாடிக் கேட்டிருக்கிறேன். பறவை ஆராய்ச்சியில் தேர்ந்த பழைய நிபுணர் ஒருவர் இவை பாடுவதை ஒரு வாக்கியமாக அமைத்திருப்பதைக் கவனித்ததில் அது சரியாகத் தான் அமைந்திருந்தது. "மோர் வெட் வெட்டெர் வீ, சீ, ஸீ" என்று சொல்லி, சீட்டியடித்துப் பாருங்கள்; அப்படியே இருக்கும். வடமேற்கே தொலே தூரத்தில் இந்தக் குருவிகள் சர்வ சாதாரணமாக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இந்தக் குருவி பாடும்போது ஒரு நாள் அங்கே இருந்த சிவப்பிந்தியன் ஒருவனை, "அது என்ன, அப்பா, பாடுகிறது?" என்று கேட்டேன். அவன், "அதுவா? 'ஆண்டவனே, எனக்கொருவேலே தா' என்கிறது" என்ருன். அந்தப் பக்கம் விசாரித்ததில் அவன் சொன்னது போலவே பொதுவாக எல்லாரும் சொன்னுர்கள். பிறகு கொஞ்ச நாள் வான்கூவர் தீவில் போய்த் தங்கினேன். அப்போது அருகில் அடுக்கியிருந்த மரத் திம்மைகளின் மேல் இருந்தபடி, விடாமல் இந்த மாதிரி வெள்ளைக் கொண்டைக் குருவி ஒன்று பாடிக்கொண்டேயிருந்தது. இரவில் கூட அது பாடுவது கேட்டது; ஆனுல் இப்போது இன்னும் ஓர் அசை அதிகமாகக் கூட்டி, "ஓ ஆண்டவனே, எனக்கொரு வேலே தா" என்றது!

## சுலபமான பரிகாரம்

பாரிஸ் நகரிலே ஒரு மனிதன் தன் மனைவியிடம் காரைக் கொடுத்து ஓட்டும்படி சொன்னுல், அவன் நோக்கம் இந்த இரண்டில் ஒன்ருகவே இருக்கும்: (1) அவனுக்குப் புதிய காரோ, புதிய மனைவியோ பெற ஆசையா யிருக்கலாம்; (2) இரண்டுமே பெற ஆசையாயிருக்கலாம்.

—ஜாக் பில்ஸ் (பி. பி. ஸி. பேச்சில்).

# வீட்டுக்காரிக்கு வேலை

★

இங்கிலாந்தில் 'கிரேட் நார்த் ரோடு' என்ற பெரிய வடக்கு ரஸ்தாவில் ஓர் இடத்தில் 'ராம் ஜாம் இன்' என்ற ஒரு சத்திரம் இருக்கிறது. கோச்சு வண்டி சவாரி நடந்துகொண்டிருந்த பழங் காலத்தில் ரஸமான ஒரு சம்பவம் அங்கே நடந்தது.

ஒரு சமயம் ஒரு பிரயாணி அந்தச் சத்திரத்துக்கு வந்து ஒரு வார காலம் தங்கினர். சத்திரத்து அம்மாளுக்குப் பிரயாணியிடம் மிகுந்த நம்பிக்கை விழுந்து விட்டது.

''அம்மா, உங்களிடம் ஒரே பீப்பாயில்தானே சாராயம் இருக்கிறது. அதிலேயே ஒரு பக்கமிருந்து இனிப்பு மதுவும், மறு பக்கமிருந்து கசப்பு மதுவும் தருவிக்கும் தந்திரம் எனக்குத் தெரியும். உங்களுக்குச் சொல்லித் தரட்டுமா?'' என்ருர் பிரயாணி.

''சொல்லித் தாருங்கள்'' என்ருள் அம்மாள்.

''சரி'' என்று அந்தப் பிரயாணி பீப்பாயில் ஒரு பக்கம் ஓர் ஓட்டை போட்டார். அம்மாளின் வலது கைக் கட்டை விரலால் அதைக் கெட்டியாக அடைத்துக்கொள்ளச் செய்தார். பிறகு அதற்கு எதிரே மற்ரேர் ஓட்டை போட்டார். அம்மாளின் இடது கைக் கட்டை விரலால் அதையும் அடைத்துக்கொள்ளச் செய்தார்.

இப்படியாகப் பீப்பாயை அம்மாள் கட்டியணைத்துக்கொண்டு, சாராயத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்க, உள்ளே புகுந்தார் பிரயாணி. கையில் அகப்பட்ட நகை, பணம் ஆகியவற்றையெல்லாம் சுருட்டிக்கொண்டு, அம்மாளிடம் வந்து, தொப்பியைத் தூக்கி, குறும்புத்தனமாய்ச் சலாம் வைத்து, ''போய் வருகிறேன்'' என்று சொல்லிக் கிளம்பி விட்டார்.

—'ஃபீல்டு', லண்டன்.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டும் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

**ராஜா, ஆறுமுகநகரி.**

உடம்பில் அதிகமாக ரோமம் வளர்வது சிலருக்கு இயற்கை. இதை நீக்க முடியாது. ஆண் பிள்ளைக்கு இது அழகென்றே கருதலாம்.

**என். ஏ. சலம், பெருந்துறை.**

(1) 5 அடி 4 அங்குலம் உயரம். வயசு 20. ஆண். எடை 110 அல்லது 120 பவுண்டு வரை இருப்பது நல்லது. நம் நாட்டில் இதற்குச் சற்றுக் குறைவாகவேதான் பெரும்பாலும் எடை இருக்கிறது.

(2) ஜலதோஷம் பிடித்தால் மூக்கு ஜவ்வில் அதிக ரத்தம் சுரக்கும். இந்த ஜவ்வுக்குச் சளி உற்பத்தி செய்யும் ஆற்றல் இருக்கிறது. அதிக ரத்தம் சுரக்கும்போது அதிகச் சளி உண்டாகும். மூக்கில் வந்து சேரும் கிருமிகளையும் தூசியையும் வெளியாக்க, சளி உபயோகமாக இருக்கிறது.

**ராமமூர்த்தி.**

முதியோர் கேட்கும் கேள்விகளுக்கு விடை கூறுவது கஷ்டமில்லை. ஆனால் சிறுவர் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லுவது கஷ்டம்; தோல்வியைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். இந்தச் சிறுவன் கேட்கிறான், "வாழைக் கறையை எப்படி நீக்குவது?" என்று. அவரைக் காயைப் பறித்து மடியில் போட்டுக்கொண்டால் வெள்ளை வேஷ்டியில் கறை ஏற்படும். இதை நீக்க முடிவதில்லை. இது போன்றதே வாழைக் கறையும். இதில் இருக்கும் டான்னின் என்னும் பொருள், வர்ணத்தைத் துணியில் அழுத்தமாய்ப் படியும் படி செய்ய உதவுகிறது. வாழைக் கறையை ஏன் போக்க முடியாது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**டி, பார்த்தசாரதி.**

கைகால்களில் அதிக வேர்வை உண்டாவதற்குப் பரிகாரம் ஒன்றும்



இல்லை. குளிர்ந்த நீரில் நீராடினால் ஒரு வேளை இது குறையலாம். சிலருக்கு இந்த வேர்வை இயற்கை.

**ஆறுமுகம், திருப்பூர்.**

15 வயதுச் சிறுவனுக்கு அடி வயிறு பருக்கிறதென்று கவலை.



இதற்குப் பரிகாரம் சூரிய நமஸ்காரம், தண்டால் ஆகியவை. தொந்தி விழுவது ஓர் அழகு என்று சிலர் எண்ணுவார்கள்.

**பெரியசாமி, கணபதிபாளையம்.**

(1) 'சந்திரனின் கிரணம் உடம்பில் படும்படி உறங்குவது மூளைக்கு நன்மையா, தீமையா?' என்று இவர் கேட்கிறார். ஐரோப்பியப் பாமர மக்கள் சந்திரனுக்கும் மூளைக் கலக்கத்துக்கும் உறவு உண்டென்று நம்புகிறார்கள். அதன்படி பார்த்தால் சந்திரனின் கிரணம் படும்படி உறங்குவது மூளையை ஒரு வேளை கலக்கிவிடலாம். ஒன்றுமட்டும் கவனிக்கத் தக்கது: அதிகத் தண்மைக்குக் காரணமான இந்தக் கிரணங்கள் கபக் கோளாற்றை எழுப்பக்கூடும்.

(2) 'எருமைப் பால் குடிப்பதால் உடம்புக்குக் கெடுதலா, நன்மையா?' என்பது இவருடைய மற்றொரு கேள்வி. யாருக்கு? முதியோருக்கா, குழந்தைக்கா? குழந்தைக்கானால் சாதாரணமாய் ஒத்துக்கொள்ளாது. சில குழந்தைகளுடைய ஜீரண சக்தி நன்றாயிருந்து எருமைப் பாலையும் ஜீர்ணம் செய்யும். எருமைப்பால் குடிப்பதால் எருமைபோல் புத்தி உண்டாகும் என்று கேலியாய்ச் சொல்வதுண்டு. கழுதைப்பாலுங் கூடக் குழந்தையின் உடம்பையும் மூளையையும் பாதிக்காது.

**மனோகரன், கோம்பை.**

பெனிசிலினுக்குக் குணமாகும் நோய்களை விவரமாகத் தெரிந்து கொள்ள டாக்டர் சேஷாத்திரிநாதன் இயற்றியிருக்கும் 'பென்சிலின்' என்னும் நூலைப் படிக்க வேண்டும். அதை வெளியிட்டிருப்பவர்: கிறிஸ்தியன் லிட்டரச்சர் ஸொஸைட்டி, பார்க் டவுன், சென்னை.

**பாலாஜி, திருப்பத்தூர்.**

கறந்த பாலைக் காய்ச்சாமல் அப்படியே குடிப்பதால் க்ஷயரோகம் பற்றிக்கொள்ளும் என்று இவர் அஞ்சுகிறார். நியாயந்தான். ஆனால் நம் நாட்டில் மாடுகள் க்ஷயரோகத்துக்கு வசமாவது மிக மிகக் குறைவு. ஆகவே, கறந்த பாலை அப்படியே குடிக்கலாம். ஆனால் கறக்கும் பாத்திரம், மாட்டின் மடி, கறப்பவனின் கை எல்லாம் தூய்மையாக இருக்க வேண்டும்.



**வைரக்கண்ணன், மாங்குடிக் குப்பம்.**

உங்களுக்கு ரத்தக் கொதிப்பு இருப்பதாக யார் சொன்னார்கள்? ரத்தக்கொதிப்பு என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? இந்த விவரங்களைத் தெளிவாக எழுதினால் பரிகாரம் சொல்ல முடியும்.

**ராமஸ்வாமி, பேராம்பட்டு.**

சென்ற மார்ச் 'மஞ்சரி'யில் விடை காணலாம். மீசை முளைக்காமலே ஆண் பிள்ளைத்தனம் தோன்றலாம் என்று அதில் சொல்லியிருக்கிறது.

**ஐயம்பெருமாள், அரக்கோணம்.**

பாதங்களில் வேதனை தோன்றக் காரணம் என்ன என்று தீர விசாரித்து வைத்தியம் செய்து கொள்ள வேண்டும். வேலூர்,

சென்னை போன்ற இடத்துப் பெரிய ஆஸ்பத்திரியில் வந்து கேட்டுக் கொள்வது நலம்.

**கிருஷ்ணமூர்த்தி, ஹைதராபாது.**

உடம்பில் சில இடங்களிலும் உதடுகளிலும் வெண்மையான புள்ளிகள் தோன்றியிருப்பதற்கு இவர் மருந்து வேண்டும் என்கிறார். போஷாக்குச் சத்துக் குறைகள் இதற்குக் காரணமாயிருக்கும் என்பது தற்போதுள்ள வைத்திய அபிப்பிராயம்.

**அண்ணாமலை, கட்டுக்குடிப்பட்டி.**

நல்ல தேகப்பயிற்சி, நல்ல நூல்கள் படிப்பது, குளிர்ந்த நீரில் நீராடுவது, ஆரோக்கியமான உணவுகளைச் சாப்பிடுவது ஆகியவற்றால் தேகவலிமை பெறலாம்.

**சேஷாத்திரி, தியாகராயநகர்.**

(1) தொண்டைக்கும் காதுக்கும் தொடர்பு இருக்கிறது. டான்சில் சதையில் அழற்சி ஏற்படுவது கிருமிகளாலே. டான்சில் அருகில் ஒரு குழாய் காதுக்குள் செல்கிறது.




1. வெளிக்காது. 2. மத்தியக் காதுக்கும் மூக்குக்கும் இடையிலுள்ள குழாய். 3. வெளிக் காதுக்கும் உள் காதுக்கும் இடையே உள்ள சுவர். 4. உள் காதும் நரம்பும்.

சீழ் டான்சிலிலிருந்து காதுக்குச் சென்று அங்கிருக்கும் சுவரைத் தொளைத்துக்கொண்டு வெளிக் காதில் வந்து சேரும். சில வேளை காதின் உட்புறமிருந்து சீழ் மூளை




1. டான்ஸில் என்னும் சதை.
2. காதையும் மூக்கையும் சேர்க்கும் குழாய்.
3. நாசித் துவாரம். 4. வாய்.
5. அடினுயிட் என்னும் சதை.

யையும் பற்றிக்கொள்ளக் கூடும். டான்சிலை நீக்கிய பிறகு திரும்பவும் வளராது.

(2) 'டிஃப்தீரியா' என்னும் நோய் வெகுவாகக் குழந்தைகளின் தொண்டையில் புண் தோற்றுவிக்கும். புண் படர்ந்து சுவாசக் குழாயை அடைக்கக்கூடும். 'டிஃப்தீரியா' ஒருவகைக் கிருமியால் தோன்றும் நோய். இந்தக் கிருமி ஒருவகை நச்சுப் பொருளைச் சுரக்கும். இந்த நச்சு இருதயத்தையும் வேறு சில தசைகளையும் தாக்கித் தளர்த்திவிடக்கூடும்.

### விஷயம் வேறு

முரட்டு ஸோல்ஜர் ஒருவர் ஸலூனில் நுழைந்தார். அவரை உற்றுப் பார்த்தார் நாவிதர். ''முன்னே உங்களுக்கு நான் க்ஷவரம் செய்திருக்கிறேனே, ஸார்?'' என்று கேட்டார்.

''இல்லை. என் முகத்தில் உள்ள இந்தக் காயத் தழும்புகள் போன யுத்தத்தில் போர்முனையில் ஏற்பட்டவை'' என்று சாவதானமாக ஸோல்ஜர் பதில் அளித்தார். —'ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன்'

# கல்வியின் கருத்து

## எமர்சன்

உலகப் பேரறிஞர்களில் ஒருவர் இந்த அமெரிக்க ஆசிரியர். இவருடைய கட்டுரைகளில் ஆழ்ந்த கருத்தும் உன்னத தத்துவமும் அடங்கியிருக்கும். 'இயற்கை', 'அரசியல்', 'கல்வி', 'அநுபவம்' என்ற நான்கு தலைப்புக்களில் இவர் எழுதிய கட்டுரைகளை, அறிவும் கல்வியும் அநுபவமும் மிகுந்த **ஸ்ரீ ரா. நாராயணன்** மொழிபெயர்த்திருக்கிறார். தெளிந்த தமிழ். அவருடைய மொழிபெயர்ப்பிலிருந்து சில பகுதிகளை இங்கே எடுத்துத் தந்திருக்கிறோம்.

கல்வி என்னும் பதத்தை எவ்வளவு சாதாரணமாக உணர்ச்சியற்று வழக்கில் தினசரி உபயோகப்படுத்துகிறார்கள்! இதைப் பார்க்கையில் எதிர்காலத்தைப்பற்றிச் சிறிது பயப்படத்தான் வேண்டியிருக்கிறது. கல்வியைப்பற்றி ஒரு கட்டுரை, அதைப்பற்றி ஒரு மகாநாடு, ஒரு சொற்பொழிவு - இவைகளைப்பற்றி நினைத்தாலும் கேட்டாலும் நம் ரத்த ஓட்டமே நின்றுவிட்டதுபோல் கொட்டாவி விடத் தோன்றுகிறது. கல்வியைச் சட்டம் திருத்த முற்பட்டால், நமக்கு உற்சாகம் ஏற்படுவதில்லை. கல்வி மனிதனைப்போல் பரந்ததாயிருக்கவேண்டும்; மனிதனிடமுள்ள அம்சங்களை வளர்த்து ஒளியுறச் செய்ய வேண்டும். அவன் புத்திக் கூர்மையுள்ளவனாக இருந்தால், அதன் கூர்மையை மேலும் தீட்டி அதை வெளிக்கொண்டு வரவேண்டும். கூர்மையான சிந்தனையால் மனிதர்களைப் பாகுபாடு செய்யும் திறனுள்ளவனாக இருந்தால், அதை மேலும் கூர்மையாகச் செய்ய வேண்டும். சமூகத்தை ஒன்றுபடுத்தும் தன்மையுள்ளவனாயிருந்தால், அவனுடைய அறிவுத் திறனை இந்த வேலையில் ஊக்குவிக்க வேண்டும். உற்சாகம் உள்ளவனாகவோ, இளகிய மனசுள்ளவனாகவோ, பரந்த உள்ளம் படைத்தவனாகவோ, திறமை மிக்க தொழில் நுட்பம் தெரிந்தவனாகவோ, வலிமை வாய்ந்த தளகர்த்தனாகவோ, சக்தி வாய்ந்த நண்பனாகவோ, சாமர்த்தியம் மிக்க பயனுள்ள இனிய போக்குள்ள சாதுரியப் பேச்சுத் திறன், தீர்க்க தரிசனம், பலரைக் கூர்ந்து பார்க்க வல்லமை இவற்றில் எந்தச் சிறப்பேனும் வாய்ந்தவனாகவோ இருந்தால், அவன் பணி சமூகத்துக்குப் பெரிதும் தேவையாயிருக்கும். மனிதனின் கற்பனைத் திறனைக் கல்வி வளர்க்க வேண்டும். இயற்கையை உட்புகுந்து பார்க்காமல் ஏன் மேலோட்டமாகப் பார்க்க வேண்டும்? இயற்கையை விஞ்ஞானக் கண் கொண்டு பார்ப்பதும் மேலோட்டப் பார்வைதான். கவிதை உள்ளத்துடன் பார்த்தால்தான், இயற்கையை உட்புகுந்து பார்க்க முடியும்.

மக்களின் பண்பாடு புலன்களுக்குப் பணிந்துவிட்டது. இப்படிப் புலன் வசமாவது, ஆண்மைக்கு

மூலம்: எமர்சன் கட்டுரைகள் (மொழிபெயர்ப்பு நூல்: தமிழ்).
வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், ஆயிரம் விளக்கு, சென்னை-6.
விலை ரூபாய் ஒன்று.

அழகல்ல. பரந்த வெளியையும் ஆத்மாவையும் மறந்துவிட்டால், பிரத்தியட்சப் பொருள்களும் அறநெறி உணர்வும் மட்டும் நம்மைத் தீரர் ஆக்கிவிட முடியாது. நம் மாதிரியே வளரும்படி நம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறோம். அவர்களுடைய ஆசைப்படி உயர நாம் அவர்களுக்குப் போதிப்பதில்லை. அவர்கள் கம்பீரமான இயல்புள்ளவர்கள் என்று நம்பி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில்லை. ஏதோ சில உண்மைகளை அவர்கள் தெரிந்துகொண்டு அவைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும், கணக்கில் தேர்ச்சி பெறவும், மொழியில் வல்லமை அடையவும் நாம் பயிற்சியளிக்கிறோம். அவர்களைக் கணக்கர்களும் வக்கீல்களும் எஞ்சினீர்களும் ஆக்கப் பார்க்கிறோம். திறமை உள்ள, சிரத்தை மிக்க, பரந்த உள்ளம் படைத்தவர்களாக அவர்கள் திகழ்வதற்கான பயிற்சிகளை நாம் அளிப்பதில்லை.

வாழ்க்கை லட்சியத்துக்கு ஏற்றதாக இருக்கவேண்டும் கல்வியின் மகத்தான குறிக்கோள். கல்விக்கு அறநோக்கு வேண்டும். அது தன்னம்பிக்கை புகட்ட வேண்டும்; இளைஞனைத் தன் திறமையைத் தானே வளர்த்துக்கொள்வதில் சிரத்தை கொள்ளச் செய்யவேண்டும். தன் இயல்பை அறிந்துகொள்வதில் அவன் ஆவல் கொள்ள வேண்டும்; அவன் மனத்துக்கு என்ன சக்தி இருக்கிறது என்பதை அவன் அறிய வேண்டும். அவனிடம் நிறைந்த சக்தி இருக்கிறது என்று அவனுக்குக் கற்பித்து, ஆண்டவன் சந்நிதியில் பரவசம் அடையும் பேராற்றலை அவன் பெறும்படி செய்யவேண்டும் அப்போதுதான் கல்வி, ஆண்டவனுடன் ஒன்றுபட்டு இயங்கும். தனக்காகவே உழைக்கும்போது மனிதன் ஒரு துரும்புபோல் இருக்கிறான்; ஆனால், அவன் அன்பு, நீதி போன்ற அறங்களை எடுத்துரைப்பவனாக மாறியவுடன், ஆண்டவனைப் போல் ஆகிவிடுகிறான். அவன் சொல் எல்லா நாடுகளிலும் செலாவணியாகிறது! எல்லா மனிதர்களும்-அவனுடைய பகைவர்கள்கூட - அவனுடைய நண்பர்களாக அவன் சொல்லுக்குச் செவி சாய்க்கிறார்கள்.

முந்திய தலைமுறையினரும் பிந்திய தலைமுறையினரும், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளுவதில்லை. 'இளையவனுக்கு எவ்விதக் குறிக்கோளும் கிடையாது; அவனிடமிருந்து பயனுள்ள காரியம் எதையும் எதிர்பார்க்க முடியாது' என்று முதியவர் நினைக்கிறார். 'எதையும் புரிந்துகொள்ள முடியாது; கல் மண்டை உள்ளவரிடம் எதையும் விளக்கிக் கூறிப் பயனில்லை' என்று இளமை முறுக்குள்ளவன் கிழவரைப்பற்றி நினைக்கக் கூடும். இளையவன் எதிர்காலத்தை உற்று நோக்கிப் பெரியவரிடம் சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டும். அவன் ஆத்திரம் கொண்டு சலிப்புற்றுப் பெரியோர்களை அசட்டுத்தனமாக மட்டந் தட்டாமல் இருக்கவேண்டும்.

இயற்கை அன்னை புதிதாக ஒரு மனிதனைச் சிருஷ்டிக்கையில், அந்த மனிதன் உலகில் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாளோ அதில் அவனுக்கு முன் கூட்டியே ஆர்வத்தை உண்டாக்கிவிடுகிறாள். இந்தப் புதிய சிருஷ்டி என்ன செய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். இந்தப் புதிய சிருஷ்டியை உண்டாக்கும்போது இதனிடமிருந்து இயற்கை அன்னை என்ன எதிர்பார்க்கிறாளோ? உலகம் என்ற இந்தத் தோட்டத்தில் தோன்றிய இந்தப் புதிய மனிதன் இதிலுள்ள பிராணிகளின் பெயர்களை வகுக்கலாம்; விண்ணிலுள்ள தேவதைகளை அறியலாம்.

இந்தப் புதிய சிருஷ்டியைப் பிறர் தங்கள் மொழிகளாலும் கருத்துக்களாலும் பாழ்படுத்தாமல் இருப்பதற்குப் போதிய பாதுகாப்புக்களை ஆண்டவன் அளித்திருக்கிறான். அவற்றைக் களங்கப்படுத்த முதியோர் விரும்புகிறார்கள். இந்தப் புதிய சிருஷ்டி தங்கள் எண்ணப்படியும் தங்கள் மாதிரியும் நடந்துகொள்வதற்கான முயற்சிகளை

ஓயாது செய்து வருகிருர்கள். பெற்ருேர்களிடத்தில் கீழ்த்தரமான ஒரு சுய மதிப்பு இருப்பதஞல், தங்கள் குழந்தை தங்கள் மாதிரியே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிருர்கள். ஆனுல், இந்த நோக்கத்தைக் குழந்தை ஈடேறச் செய்வதே இல்லை. 'தாயைப் போல் சேய்' என்கிற கோட்பாட்டை நிலைநாட்ட விரும்புவோமாஞல், குழந்தைகள் இயற்கை அறிவுப் போக்கின்படி வளராமல் சாதாரணமாகவும் மந்த புத்தி உள்ளவர்களாகவுந்தான் வளர்வார்கள். சிறுவனின் இயல்புக்கு மாருக அவன் தந்தை அவனைத் தம் கருத்துப்படி நடக்கக் கட்டாயப்படுத்துவதைப் பார்த்தால், என் மனம் வேதனை அடைகிறது. மக்களைத் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து இன்பமாக வளர விட்டுவிடலாகாதா? மற்ருெருவனை உன் மாதிரியே வளரும்படி செய்விக்க ஏன் முயற்சி செய்கிருய்? உன் மாதிரி நீ ஒருவன் இருப்பதே போதுமே!

துருக்கியரின் ஆலயச் சுவர்களில் கிரேக்கர்கள் தங்கள் சிற்பக்கலையின் மேன்மையைத் தீட்டியிருந்தார்களாம். சுவர் ஒரே மாதிரி இருப்பதற்காகத் துருக்கியர் அதன் மீது வெள்ளையடித்தார்களாம்! சிறுவர்களின் தன்மையையும் அவர்களுடைய மேதையையும் அறியாமல் அவர்கள் எல்லாரும் ஒரே மாதிரி திகழும்படி செய்யும் முயற்சியும் இப்படித்தான் இருக்கிறது. இளமையே நீடித்து மனிதர்களாக வளரும்படி குழந்தைகளை விட்டு விடுவோம். அப்போதுதான் அவர்கள் திறமை மிக்கவர்களாகவும், தீரச் செயல் புரிவதற்கேற்றவர்களாகவும் வளர்வார்கள்.

கல்வியின் ரகசியம் மாணவனை மதிப்பதுதான். மாணவன் எதைத் தெரிந்துகொள்ள வேண்டும், அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் திட்டம் செய்யலாகாது. அதன் ரகசியம் அவனுக்கு மட்டுந்தான் தெரியும். நீங்கள் தலையிட்டுத் தடை விதித்து அவனைத் துன்புறுத்திக் கட்டி மேய்க்கப் பார்த்தால், அவனுடைய சுய அறிவு விசாலம் அடையாது; அவனுடைய குறிக்கோளை அவன் அடைய முடியாது. குழந்தையை மதியுங்கள். இயற்கையில் புதிய சிருஷ்டி எப்படி மலர்கிறது என்று காத்திருந்து பாருங்கள். இயற்கை புதுமைகளை விரும்புகிறதே ஒழிய, செய்ததையே திருப்பிச் செய்வதை விரும்புவதில்லை. ஆகவே, குழந்தையை மதியுங்கள்; நீங்கள் அவனுடைய பெற்ருேர் என்பதை அதிகம் நினைத்து அவதிப்படாதீர்கள். அவனுடைய தனிமையில் நீங்கள் தலையிட்டுக் கெடுக்காதீர்கள்.

## கும்பலோடு கூச்சல்

சார்லஸ் லாம்ப் என்ற பிரபல ஆங்கில ஆசிரியருக்கு நாடக மேடைமீது மோகம் விழுந்தது. வெகு சிரமப்பட்டுத் தம்முடைய நாடகம் ஒன்றை ஒரு கொட்டகையில் நடிக்கச் செய்தார். ஒரே தோல்வி.

நடிப்பு நடந்த முதல் இரவிலே - அதுவேதான் கடைசி இரவும்; அந்த இரவிலே - சபையோரெல்லாம் கேலி செய்து 'உஸ்' 'உஸ்' என்று பெருங் கூச்சல் போட்டார்கள். அந்தக் கூச்சலிலே ஆசிரியரும் மும்முரமாய்க் கலந்துகொண்டார்.

அப்புறம் இதைப்பற்றி அவரிடம் யாரோ கேட்டார்கள்; ''நான்தான் ஆசிரியன் என்று ஜனங்கள் கண்டுபிடித்து விடக்கூடாதே என்று பயந்துதான் அப்படிக் கூச்சலிட்டேன்'' என்ருர் லாம்ப்.

—டி. எஸ். மாத்யூஸ்

# புலன் கடந்த நெறி

★

இன்பத்துக்கு வழி காணப் புறநோக்கில் இன்று பலர் மனோராஜ்யங்களைப் படைக்கிறார்கள். அக நோக்கில் விதிகள் வகுத்த பல முன்னோர் களில் ஒருவர் லாவோட்சே (கி. மு. 604). அவருடைய அறிவுரைகளை விளக்குகிறார் அறிஞர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

வேத காலத்துச் சான்றோர்கள் அக உயிர்த் தத்துவங்களைத் துருவி ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்கள் கண்ட உண்மைகள் உபநிஷத்துக்களிலும் கீதையிலும் இதிகாச புராணங்களிலும் கோயில் கொண்டிருக்கின்றன. இன்று எழுந்துள்ள வினாக்களையும் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். ஆயுத பலத்தால் யாதும் பயனில்லை என்ற பேருண்மை, விசுவாமித்திரரின் வீர வாழ்விலிருந்து நமக்கு நன்கு புலனாகிறது. ஆத்ம சக்தியின் வடிவாய் நின்ற வசிஷ்டர் மூலம் நவீன நாகரிகத்தின் குழப்பத்தை அகற்றுவதற்கு நமக்கு ஒரு மாமருந்து கிடைக்கிறது. பிரகலாதன் தன் தகப்பனையே எதிர்த்து நிற்கிறான். அறத்தைக் கருதி ஒரு தனி மனிதன் அரசாங்கத்தோடு போராடலாம் என்ற உண்மை இதனால் ஏற்படுகிறதன்றோ? தனித்த மனிதனின் வளர்ச்சிக்காகவே அரசாங்கம் இருக்கிறது, அரசாங்கத்துக்காக மனிதன் இல்லை என்ற தத்துவமும் பிரகலாதனின் தூய வாழ்வால் திகழ்கிறது. சாத்துவிக எதிர்ப்பு (Passive Resistance) என்ற தத்துவத்தின் மூலத்தைப் பிரகலாதனிடத்தில் நாம் காணலாமன்றோ? பாரதப் போர் நிகழ்வதற்கு முதல் நாளிலேயே விதுரன் தன் மாபெரும் வில்லை முறித்து எறிந்துவிடுகிறான். அந்த வில்லின் பேரொலியில் தற்காலத்தினர் போர்க்கருவிகளைப் பற்றிச் சிந்திக்கிற கேள்வி வெடித்தெழக் கேட்கிறோம். போர் வேண்டாம் என்று முரசடிக்கிற குழுவுக்கு ஒரு விடிவெள்ளியாய் விதுரன் விளங்குகிறான். ஆயுத ஒழிப்புத் திட்டம் (Disarmament) அவசியம் வேண்டுமென்ற தத்துவத்தின் மூலத்தை விதுரனிடம் பார்க்கிறோமன்றோ?

இப்போது கிளர்ந்தெழுகிற பிரச்னைகளின் வேர் வேதத்தில் ஆழ்ந்து கிடக்கிற உண்மையை எவரும் மறுக்க முடியாது. வேதத்தில் தென்படுகிற தத்துவங்கள்தான் இதிகாச புராணங்களாய்ப் பூத்திருக்கின்றன. பார்க்கப் போனால் பதினெட்டுப் புராணங்களும் பதினெட்டுக் கற்பனை உலகங்கள் என்று சாற்றிவிடலாம்.

வேதம், உபநிஷதம், கீதை முதலிய நூல்களில் பரந்துகிடக்கிற தத்துவங்களைச் சீன தேசத்தில் அரும்பிய டாவோ சமயத்தில் (Taoism) பார்க்கிறோம். இங்கிருந்து அந்த நாட்டுக்குக் கருத்துக்கள் சென்றனவா? அல்லது அந்த நாட்டிலேயே முளைத்தனவா? வேத காலத்துச் சான்றோர்களின் அகக் கண்முன் மிதந்து வந்த லட்சியங்களும் கனவுகளும் சீன நாட்டுப் பெரியோர்களுக்கும் உதயமாகியிருக்கலாம். இந்தச் சர்ச்சைக் காட்டில் புக வேண்டியதில்லை. எந்த நாட்டுத் தேனாக இருந்தால் என்ன? அதைப் பருகுவதே வண்டினம் போன்ற உத்தம ரசிகர்களின் கடன்.

சீன நாட்டில் நீண்ட காலமாகத் திகழ்ந்து வருகிற மதங்கள் மூன்று: கன்ஃப்யூஷியஸ் கண்ட நெறி,

டாவோ வகுத்த பாதை, புத்த மதக் கொள்கை-இந்த மூன்றுந் தான் அந்த நாட்டுச் சமயக் கழனிகளில் தோன்றிய பயிர்கள்.

லாவோட்சே (Laotze), காயு (Kau) மரபில் தோன்றிய வேந்தனான டிங் (Ting) பட்டத்துக்கு வந்த மூன்றாம் வருஷத்தில் உதயமானார் என்று தோன்றுகிறது. கி. மு. 604-ஆம் ஆண்டில் இவர் பிறந்தார் என்று சரித்திர ஆசிரியர்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

கன்ஃப்யூஷியஸை விட இவர் ஐம்பது வயசு மூத்தவர். இந்தச் சான்றோர்கள் ஒருவரையொருவர் சந்தித்து உரையாடினதாகத் தெரிகிறது. ஆனால் கன்ஃப்யூஷியக் கொள்கை பெரும்பாலும் நல்லொழுக்கத்தைப்பற்றியே பேசுகிறது. 'உலக ஒழுக்கத்துக் கப்பால் ஒரு தெய்வ நெறி இருக்கிறது; அதைப் பின்பற்றினால் புகலரும் சாந்தமும் இன்பமும் மனிதன் அடைவான்' என்பதை லாவோட்சே வற்புறுத்துகிறார்.

'டாவோ' என்ற சொல்லுக்குப் பாதை என்பதுதான் பொருள். அது அந்தப் பரம்பொருளையும் சுட்டும். அதனால்தானே எல்லாவிதமான சலனங்களும் ஏற்படுகின்றன. இதே கருத்தைத்தான் நாம் உபநிஷதங்களில் காண்கிறோம். லாவோட்சேயின் அடிச் சுவட்டைப் பின்பற்றிய காவாங்க்ட்சே (Kawng-jze), அதைப் பெரு நெறி என்கிறார். ஆண்டவனைச் சித்திரிக்குமிடத்துத் 'தவ நெறிக்கு ஓர் பெருநெறியை' என்று திருமங்கை மன்னர் மொழிகிறார். அது இங்கே நோக்குதற்குரியது. அதைத் 'தத்' என்ற சொல்லால்தான் குறிக்க வேண்டும். பகவான், ஆண்டவன், கடவுள்- என்ற சொற்களால் அதைச் சித்திரிக்கக் கூடாது. சீன மொழியில் 'டை' (Ti) என்ற சொல்லுக்குக் கடவுள் என்பது பொருள். 'ஷாங் டை' (Shang Ti) என்ற சொல்லுக்குத் தெய்வநாயகன் என்பதுதான் பொருள். டாவோ என்பதற்குக் கடவுள் என்ற பொருள் தருவது சரியன்று. மண்ணும் விண்ணும் தோன்றுவதற்கு முன்பே 'அது' இருந்தது. அதிலிருந்துதான் எல்லாம் தோன்றின.

அது அநாதியா யிருக்கிறது. நியூடன் தோன்றுவதற்கு முன்பே பூமிக்கு எல்லாவற்றையும் ஈர்க்குஞ் சக்தி இருந்திருக்கிறது. அந்தச் சக்தி அவன் நுண்ணறிவு வட்டத்துக்குள் மிதந்து வந்தது. அவன் அதைப் படைத்துவிடவில்லை. அதை உணர்ந்தான். வேதத்தில் காணும் உண்மை, விண்ணில் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. வெளியிலே சென்றுகொண்டிருந்த புலன்களை அடக்கிய காரணத்தால், சான்றோர்களின் அகச் செவியில் அந்த உண்மை ஒலித்தது. அந்தக் காரணம் பற்றியே வேதத்துக்குச் சுருதி என்று பெயர் வந்தது. 'கேட்கப்பட்டது' (சுருதம்) என்பதுதான் 'சுருதி' என்ற சொல்லுக்குப் பொருள். இதைக் கொண்டே வேதம் 'எவரும் செய்ததல்ல (அபௌருஷேயம்)' என்று மொழிந்தார்கள்.

லாவோட்சே கண்டு பிடிப்பதற்கு முன் இந்த லாவோ தத்துவம் இருந்திருக்கிறது. அந்தக் கொள்கையை இவர் பரப்பத் தொடங்கினார். உதாரணமாக, சங்கரர் அத்வைத மதத்தைக் கண்டுபிடித்துவிடவில்லை. கௌடபாதர் தந்த கொள்கையைத்தான் அவர் உலகங் கேட்க முரசடித்தார். அத்வைத மதத்துக்கேற்ற ஓரளவு ஆதாரம் உபநிஷதங்களில் கிடைக்கிறது என்பதில் யாதோர் ஐயமும் இல்லை. மற்றைய மதங்களுக்குந்தான் அதில் அங்கங்கே சான்றுகள் இருக்கின்றன. அவரவர் மதங்களுக்குப் பிரமாணம் வேண்டித் தங்கள் தர்க்க பலத்தைக் கொண்டும் இலக்கண வலுவைக் கொண்டும் உபநிஷத வாக்கியங்களில் தங்களுக்கு மாறுபட்டவற்றுக்கெல்லாம் திரித்துப் பொருள் கூறத் தொடங்கிவிட்டார்கள். இப்படித் திரிக்கிற முறையை மூன்று ஆசாரியர்களிடத்திலும் காண்கிறோம். உண்மை எங்கே

கரந்து நிற்கிறதோ? யாருக்குத் தெரியும்!

உலக உற்பத்தியை நோக்குமிடத்து, நம் இதிகாச புராணங்களில் காண்கிற முறையைத்தான் லாவோ தத்துவத்திலும் பார்க்கிறோம். பிறப்பு, இறப்பு இவற்றைக் கண்டு அந்தச் சான்றோர்கள் அஞ்சவில்லை. லாவோட்சேயின் மரணத்தைக் குறிக்கிற காவாங்ட்சே இப்படி மொழிகிறார்:

''என் குருநாதர் தக்க காலத்தில் உதயமானார்; அவர் வந்தது போலவே மறைந்தார். இந்த விஷயத்தில் துன்பத்துக்கும் இடமில்லை; உவகைக்கும் இடமில்லை.''

''தோன்றினது மறையும்; இதைக் கண்டு பண்டிதர்கள் துன்புற மாட்டார்கள்'' என்று கீதையும் சாற்றுகிறதன்றோ?

மேலும், எல்லாக் குணங்களும் நிறைந்த பொன் உலகத்தில் புல், பூண்டு, விலங்கு, பறவை, மனித இனம் எல்லாமே வித்தியாசமின்றிச் சேர்ந்து வாழ்ந்தன. 'காக்கை, குருவி எங்கள் சாதி' என்று பாரதியாரும் பண்ணிசைத்துப் பாடுகிறாரன்றோ?

லாவோட்சே அடக்கத்தைத்தான் (Humility) ஒரு பெரிய அறமாகக் கொள்கிறார். 'அடக்கமுடையார்க்கே இவ்வுலகம்' என்று ஏசுநாதர் தம் மலைப் பிரசங்கத்தில் இயம்புகிறாரன்றோ?

'நீரைப்போல நீ வாழ்வாயாக.' நீர் எல்லோருக்கும் பயனை அளிக்கிறது. ஆனால் அது மேலே வர விரும்பவில்லை. அதன் இயற்கை, ஆழத்தில் கிடப்பதே. நீரைப் போல மிருதுவான பொருள் இல்லை; ஆனால் பலமுள்ள பொருள்கள் யாவற்றையும் அது அறுத்துத் தள்ளிவிடுகிறதன்றோ? அமைதியுள்ளவன், அடக்கமுள்ளவன், வறுமையையே தனக்கு அணிகலமாகக் கொண்டவன்-இவன்தான் உலகத்தை ஆள்வான். ஆனால் இத்தகைய மனப்பண்பை மாந்தர்கள் கடைப்பிடிப்பதில்லை. தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிறவன் - 'தன்னைத் தாழ்த்திக்கொள்ளுகிறேன்' என்ற நினைவும் அற்றவன்தான்-அந்த டாவோ நெறியில் நிற்கிறவன் ஆவான்.

'பேசாமலே செயலை ஆற்றுகிற உத்தமன், கர்மாவில் அகர்மாவைப் பார்க்கிறவன் அகர்மாவில் கர்மாவைப் பார்க்கிறவன்தான் ஞானி' என்று நம் கீதை முழங்குகிறது. இதே தத்துவத்தைத்தான் லாவோட்சே தருகிறார்.

'தீங்கிழைத்தவர் மீதும் அன்பு கொண்டு வெற்றி கொள்ளுவதுதான் அறம்' என்று அவர் உபதேசம் செய்கிறார். ஏசுநாதருக்கு முந்தியே இத்தகைய அறிவுச் சுடர் கொளுத்தியவரைப்பற்றி நாம் வியப்புறாமல் இருக்க முடியுமோ?

டாவோ கொள்கையில் எல்லாம் மாறுபாடாய்த் திகழ்கின்றன. 'மௌனிதான் உயர்ந்த சொல் வன்மை உள்ளவன்; சும்மா இருப்பவனே அரும் பெரும் செயலைச் செய்கிறவன்; தன்னடக்கம் உள்ளவனே தரணியெல்லாம் ஆளுகிற சான்றோன்.'

லாவோட்சே என்ற சொல்லுக்குக் கன்ஃப்யூஷியஸ் ஒரு பொருள் தருகிறார். 'அந்தச் சொல் பண்டைய ஞானி என்ற பொருளைத்தான் தரும். லாவோட்சே ஒரு பழைய ஞானி; எல்லாவற்றையும் அறிந்த சான்றோன்' என்ற பொருள்படத்தான் கன்ஃப்யூஷியஸ் கூறுகிறார்.

'சும்மா இருந்தால் எல்லாவற்றையும் மனிதன் அடைய முடியும்' என்று லாவோட்சே கூறுகிறார். 'சும்மா இருக்கின்ற திறமரிது' என்று தாயுமானவரும் மொழிகிறாரன்றோ?

டாவோ கொள்கையைப் புறக்கணிக்கிறபோதுதான், ஈகை, ஒழுங்கு இவைபற்றியெல்லாம் பேசத் தொடங்குகிறோம். ஆண்டவன் அருளொளி எங்கும் பாய்கிறபோது, ஈகைக்கு இடம் இல்லை. இரக்கத்துக்கு இடம் இல்லை; சிறியவர் பெரியவர் என்ற பேச்சுக்கும் இடம் இல்லை. யார் யாரைக் கண்டு இரங்குவது? எல்லாம் ஆண்டவன் மயமாய்த் திகழ்கிறபோது அமைதிதான் மனிதனுக்கு அணிகலம்; சாந்தந்தான் அவன் பூணும் ஆப

ரணம். போரில் அடைகிற வெற்றி வெற்றி ஆகாது. கொலையில் திளைக்கிறவன் ஆண்டவன் கோயிலை அணுக முடியாது. எல்லா ஆறுகளும் கடலில் போய்ப் புகுகின்றன. அதைப்போலவே எல்லாம் அந்த டாவோவை அடைகின்றன. மீனினம்போல அந்த அருள் வெள்ளத்தில் மனிதன் திளைக்கவேண்டும். அது சொற் கடந்தது; எவன் அதைத் தெரியும் என்று சொல்லுகிருனே, அதை அவன் உணர்ந்தானில்லை; தெரியாது என்று சொல்லுகிறவனே தெரிந்தவன் ஆவான். இதே கருத்தைத்தான் நம் வேதாந்த நூல்களில் பரக்கக் காண்கிறோம். செயலற்ற-பேச்சற்ற-நிலையில் தான், எல்லாவற்றையும் முடித்தவனுகிறுன். செய்தவன் அவனே யாவான்.

சான்றோன் சாந்த நிலையை அடைகிருன். அவனிடமிருந்து பற்பல அருட்சக்திகள் அவனை அறியாமலே உலகமெல்லாம் வழிந்தோடிக் குவலயத்தையே புனிதமாக்குகின்றன. ராம கிருஷ்ண பரமஹம்ஸரும் ரமண ரிஷிகளும் நமக்குப் பெருஞ் சான்ருய் நிற்கிருர்களன்ருே?

லாவோட்சேயின் அடிச்சுவட்டைக் காவாங்கட்சே பின்பற்றினர் என்பதை முன்பு கண்டோம். இவருடைய உபதேசங்களும் நம் சிந்தையைக் கவராமல் போகா.

டாவோ கொள்கை சொற் கடந்தது. மோன வடிவிலே அதை நாம் உணர முடியும். எல்லாம் ஓய்ந்த நிலையில்தான் அது தோன்றும். 'தன்னை ஒரு கருவியாய் அமைத்துக்கொண்டு சும்மா கிடப்பவனே முதிர்ந்த ஞானி. அவனை நெருப்புச் சுடாது; நீர் நனைக்காது, ஆழ்த்தாது' என்றெல்லாம் அவர் சொல்லுகிருர். 'அந்த ஆத்மாவை ஆயுதங்கள் கொல்ல மாட்டா; தீ வாட்டாது; காற்று உலர்த்தாது' என்று கீதையும் சாற்றுகிறதன்ருே? நிறைந்த அறிஞனுக்குக் கீதை ஓர் இலக்கணம் வகுத்திருக்கிறது. அதே இலக்கணத்தைத்தான் இவரும் வகுக்கிருர். 'அந்த ஞானி எல்லாவற்றையும் சமனுய்ப் பார்க்கிருன். லாபம்-நஷ்டம், இன்பம்-துன்பம் எல்லாம் அவனுக்கு ஒன்ருய்த் திகழ்கின்றன. உலக அலைகள் மோதினுல்தான் என்ன? அவன் இமயம்போல் கலங்காமல் நிற்கிருன். பிறப்பு அவனுக்குச் சந்தோஷத்தை நல்குவதில்லை. இறப்பு அவனுக்கு யாதொரு துன்பத்தையும் அளிப்பதில்லை. தூக்கத்திலிருந்து விழித்தெழுவதைப் போல் பிறப்புத் தோன்றுகிறது. 'கண்ணை மூடுகிருேம், பிறகு விழித்தெழவே' என்று அமைதியாய் இந்த ஆசிரியர் மொழிகிருர்.

பெற்ருேர்களுக்கு ஒருவன் தன் கடமையைச் செலுத்திவிட முடியும். பெற்ருேர்கள் என்று பாராது அன்பு காட்டுவது மிகவும் கடினம் என்கிருர். 'நீர்-நுமது', 'தான்-தனது', 'என்-எனது' என்பதையெல்லாம் வேர் முதல் மாய்க்கிறவனே டாவோ நெறியில் நிற்கிறவன். தன்னை ஒரு கருவியாக அவன் ஆக்கிக்கொள்ளுகிருன். அந்தக் கருவியை ஆண்டவன் பயன்படுத்திக்கொள்ளுகிருன். பயன்படுத்திக்கொள்ளுகிற பொறுப்பு ஆண்டவனைச் சார்ந்தது.

காவாங்கட்சே இறக்கும் தறுவாயில் இருந்தபோது அவருக்கு ஒரு பெரிய சமாதி கட்டுவதாக அவருடைய மாணுக்கர்கள் சொன்னுர்கள். ''எனக்கு விண்ணும் மண்ணும் சவப்பெட்டியாய் அமையட்டும்; சூரியனும் சந்திரனும் சின்னங்களாய்த் திகழட்டும்; மீன் கணங்களும் கோளங்களும் அணிகலனுய் மிளிரட்டும்; உலகமெல்லாம் எனக்கு ஒப்பாரி வைக்கட்டும்-இதை விட உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்ருர்.

''காகங்களும் கழுகுகளும் தங்கள் உடலைத் தின்னுமே' என்று அவர்கள் கேட்டார்கள்.

''பூமியில் புதைத்தால், புழுக்கள் என்னைத் தின்ன மாட்டாவோ? காகங்கள்-கழுகுகள்-இவற்றின் வசமிருந்து பிடுங்கிப் புழுக்களுக்குக் கொடுப்பதால், நீங்கள் ஓர

வஞ்சனைக்காரர் ஆகிவிடுவீர்கள். என் சவத்தைச் சும்மா விட்டு விடுங்கள்'' என்று அவர் சொன்னர்.

உடலைப் போற்ருத உத்தமர்கள் இவர்கள்தான் என்று சொல்லி விடலாம். இந்த இரண்டு சான்றேர்களின் கொள்கைகளையும் பார்த்தால், நம் நாட்டு வேதாந்தக் கொள்கைகள் போலக் காட்சி அளிக்கின்றன.

'எல்லாவற்றையும் வாசுதேவ மயபாகப் பாருங்கள்' என்று அந்த மாயோன் கூறியது நம் மனத் தகத்தை விட்டு அகலுமோ? விலை மகளிடத்திலும் தேவியின் தூய உருவத்தைப் பார்த்த ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதாரம் செய்த நாடன்ருே நம் நாடு? இந்த உலகத்தை அவன் உறையும் கோயி லாக நாம் எப்போது காண்போம்; எல்லா ஜீவராசிகளும் அவன் நட மாடும் கோயில் என்பதை எப் போது உணர்வோம்?

### மந்திரியின் பொய்

சர்க்கார் மந்திரி எவரும் ஒரு பொய் சொல்ல முடியாது. ஒன்று, அவர் பொய்யே சொல்லக்கூடாது; அல்லது, நூற்றுக்கணக்கான பொய்களைச் சொல்ல வேண்டும்.

—க்ளேமாங்ஸோ, (பிரபல பிரெஞ்சுப் பிரதமமந்திரி).

### ரெலட்டிவிட்டி விளக்கம்

ரெலட்டிவிட்டிக்கு ஐன்ஸ்டீனே சொல்லிய விளக்கம் இது:

அழகி ஒருத்தியோடு ஒரு மணி நேரம் நீ உட் கார்ந்துகொண்டு இரு; அது ஒரு கணம் என்றே உனக் குத் தோன்றும். இதை விட்டுச் சூட்டடுப்பின் மேலே ஒரு கணம் உட்கார்; அது ஒரு மணி நேரமாய் உனக் குத் தோன்றும்.

இவ்வளவுதான், ஐயா, ரெலட்டிவிட்டி என்பது. இதில் உனக்குச் சந்தேகம் வந்து சோதனை செய்ய விரும்பினல், நான் தயார். அழகியோடு நான் உட் கார்கிறேன்; அடுப்பிலே நீ உட்கார்.

—டேல் கார்னீஜி, 'வெல்-நோன் பீப்பிள்.'

### குழந்தை வளர்ப்பு

என் சிநேகிதி ஒருத்தி தன் குழந்தையை ஒரு கிண்டர்கார்ட்டன் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் போனுள்.

''இந்தக் குழந்தை இரவிலே படுக்கையை நனைப்பதுண்டா?'' என்று கேட்டாள் நிலையத் தலைவி.

''இல்லவே யில்லை'' என்று ஆத்திரத்துடன் பதில் சொன்னுள் தாய்.

''அப்படியா? இங்கே வேண்டாம், இந்தக் குழந்தை. இதை நீங்கள் அடக்கி வளர்த்திருக்கிறீர் கள்'' என்று மறுத்துவிட்டாள் நிலையக்காரி.

—ஜீன் ஹீல், 'ஈவினிங் ஸ்டாண்டர்டு.'

# திருஷ்டத்யும்னன் பிறப்பு

★



துருபதன் இள வயதில் துரோணருக்குப் பாதி ராஜ்யம் கொடுப்பதாக வாக்களித்திருந்தான். அதைத் துரோணர் தம் படிப்பு முடிந்தவுடன் அவனிடம் கேட்டார். அதற்குத் துருபதன் அவரை இகழ்ந்து அப்படிக் கொடுக்க மறுக்கவே, துரோணர் அவன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சமயம் பார்த்திருந்தார்.

கௌரவரும் பாண்டவரும் அஸ்திரவித்தையில் முழுத் தேர்ச்சி அடைந்திருக்கும் சமயத்தில், அவர்கள் துருபதனை உயிருடன் பிடித்துத் தம்மிடம் கொடுக்க வேண்டும் என்று விரும்பினார் துரோணர். "இதுவே எனக்கு நீங்கள் கொடுக்கும் குருதட்சிணை" என்றும் கூறினார்.

அதைக் கேட்டுத் துரியோதனன், தர்மபுத்திரர் முதலியோர் துரோணரோடு பாஞ்சாலம் சென்றார்கள். பாண்டவர்கள் தம் ஆசிரியருடன் ஊருக்கு வெளியே இருந்தார்கள். கௌரவர் வீரம் பேசிக்கொண்டு கர்வத்துடன் துருபதனை எதிர்த்தார்கள். பலவாறு போரிட்டார்கள். முடிவில் துருபதனிடம் தோற்றுவிட்டார்கள். பிறகு பாண்டவர்கள் ஆசிரியரை வணங்கி ஆசி பெற்றுப் போருக்குப் புறப்பட்டார்கள். அர்ஜுனன் திறமையுடன் போரிட்டுத் துருபதனை உயிருடன் பிடித்தான். பிறகு அனைவரும் துருபதனை ஆசாரியரிடம் கொண்டு வந்தார்கள். துரோணர் பாதி ராஜ்யத்தைத் தாம் எடுத்துக் கொண்டு பாதியை அவனுக்கே திருப்பிக் கொடுத்தார். முன் போலவே நட்புடன் இருக்க வேண்டும் என்று அவனிடம் கூறினார். துருபதனும் அதை ஏற்றுக் கொண்டு வாழலானான்.

துரோணரிடம் தோல்வியுற்ற நாள்முதல் துருபதனுக்குத் தூக்கமில்லை. அவமானம் அவனைக் கவ்விக்கொண்டது. பெருமூச்சு விட்டான். தனக்குக் குழந்தைகள்

**ராமாயணத்தைப்போல் பிரசித்தமானது பாரதம். பாண்டவர், கௌரவர் வரலாற்றை மட்டும் அல்ல; கீதை மொழிந்த கண்ணனின் கருணைச் செயல்களையும் இதில் காணலாம்.**

இல்லாததை எண்ணி வருந்தினான். உறவினரில் துரோணரை எதிர்த்து நிற்க ஒருவரும் இல்லாததால் அவரை இகழ்ந்தான். துரோணரை வெல்லக் கூடிய புதல்வன் வேண்டும் என்று தீர்மானித்தான். அதற்கு என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டு பூமி முழுவதும் சுற்றினான். கங்கைக் கரையில் ஓர் அந்தணரின் ஆசிரமத்தைக் கண்டான். அங்கு யாஜர், உபயாஜர் என்று இரண்டு முனிவர்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் வேத அத்தியயனம் செய்து வந்தார்கள்; கச்யப கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் அரசன் சென்றான். அவர்களுடைய பலத்தை அறிந்தான். தம்பியான உபயாஜரிடம் தனிமையில் சென்று வணக்கத்துடன் நின்றான். முனிவர் அரசனுக்குப் பாத்தியம், அர்க்கியம் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்தார். அரசன் வந்த காரியத்தையும் கேட்டார்.

அதற்குத் துருபதன், ''துரோணரைப் போரில் கொல்லக் கூடிய புதல்வன் எனக்கு வேண்டும். தாங்கள் என் விருப்பத்தைப் பூர்த்தி செய்தால் கோடிக்கணக்கில் பசுக்களைக் கொடுக்கிறேன்'' என்றான். இதைக் கேட்டு முனிவர், ''துருபதா, எனக்கு உன் பசுக்கள் வேண்டாம். யாருக்கு அவை வேண்டுமோ அவரிடம் செல்'' என்று கூறிவிட்டார். இவ்வாறு பலர் முன்னிலையில் அவர் மறுத்தாலும் துருபதன் ஒரு வருஷ காலம் அவருக்குப் பணிவிடை செய்து வந்தான். ஒரு நாள் உபயாஜர் மனம் இரங்கி அரசனிடம், ''அரசே, என் தமையனார் யாஜர் என்பவரிடம் நீர் போகலாம். அவருக்கு எப்பொழுதும் பொருள்களில் ஆசை உண்டு. சிறு வயதிலேயே அவருடைய ஆசையை நான் உணர்ந்திருக்கிறேன் அவர் நிறைவேற்றி வைப்பார்'' என்றார்.

அரசன் தன் நிலையை நினைத்து வருந்தினான். ஆயினும், வேறு கதி



இல்லாமல் யாஜரிடம் சென்ருன். முறைப்படி பூஜித்து வணங்கினுன். "முனிவரே! நான் தங்களுக்குப் பதினுயிரக் கணக்கில் பசுக்களைக் கொடுக்கிறேன். துரோணரின் பகையினுல் நான் எரிந்து போகிறேன். நான் உம்மைச் சரணம் அடைகிறேன். என்னைத் தாங்கள் எப்படியாவது காப்பாற்ற வேண்டும். இப்பொழுது துரோணரை எதிர்ப்பதற்கு க்ஷத்திரியர் இல்லை. அவர் பிரம்மஞானிகளில் சிறந்தவர். அஸ்திர, சஸ்திர வித்தைகளிலும் நிகரற்றவர். அவர் எதிரில் என்னுடைய க்ஷத்திரிய பலம் எம்மாத்திரம்? அதனுல் நான் அவரைவிடச் சிறந்த தங்களை அடைந்திருக்கிறேன். துரோணரைக் கொல்லக்கூடிய பிள்ளை எனக்குப் பிறக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சி செய்யுங்கள்.

உடனே யாஜர், "அரசே, கவலை வேண்டாம். நான் உமக்கு நீர் விரும்பும் புதல்வன் பிறக்கும் கர்மாவைச் செய்துவைக்கிறேன். எழுந்திரும். தாமதியாமல் பொருள்களைச் சேர்த்து வையும்" என்று கூறிக் கர்மாவை ஆரம்பித்து விட்டார். தமையனுக்காக அந்த யாகத்தை நடத்தி வைக்க உதவியாக உபயாஜரும் வந்து சேர்ந்தார். யாகம் நடந்துகொண்டிருந்தது. பிரதான ஹோமம் செய்யும்பொழுது உபயாஜர் அரசனை நோக்கி, "அரசே, உமக்கு எத்தகைய புதல்வன் வேண்டும் என்று இப்பொழுது கருதுகிறீரோ அத்தகைய புதல்வன் பிறப்பான்" என்ருர். துருபதன், 'துரோணரைக் கொல்லக்கூடிய புதல்வன் பிறக்க வேண்டும்' என்று நினைத்துக்கொண்டான். யாஜர் ஹோமம் செய்தார். உபயாஜர் மந்திரம் ஜபித்தார். உடனே அக்கினியிலிருந்து தேவர்களுக்கு ஈடான ஒரு குமாரன் தோன்றினுன். அக்கினி ஜ்வாலை போல் விளங்கியது அவன் உடல். தலையில் கிரீடமும் உடலில் கவசமும் தரித்திருந்தான். அவன் கையில் கத்தியும், அம்பும் வில்லும் துலங்கின. வெளியே வந்தவுடன் அவன் தேரில் ஏறிக்கொண்டு புறப்பட்டான். அப்பொழுது ஓர் ஆகாயவாணி கேட்டது: "இவன் துரோணருக்குச் சிஷ்யனுகவும் யமனுகவும் இருப்பான். பாஞ்சால மன்னரின் பயத்தைப் போக்குவான். அந்த வம்சத்தின் புகழை வளர்ப்பான். துரோணரைக் கொல்வதற்காகவே இவன் பிறந்திருக்கிருன்."

பிறகு முனிவர் இரண்டாவது ஹோமம் செய்தார். அப்போது யாக குண்டத்தின் நடுவிலிருந்து ஓர் அழகிய குமாரி தோன்றினுள். தாமரை இதழ்போன்ற கண்களும் சுருண்ட கருங்கூந்தலும் படைத்த அவள் மனிதவடிவம் கொண்ட தேவமாதைப்போல் தோன்றினுள். அவள் கூந்தலிலிருந்து நீலோத்பலப் பூவின் மணம் வீசியது. அவளுக்கு ஒப்பானவள் உலகில் இல்லை. அவள் பிறந்தவுடன், "பெண்களில் சிறந்த இவள் க்ஷத்திரிய வம்சத்தை அழிக்கப் போகிருள். தேவர்களின் காரியத்தை நிறைவேற்றுவதற்காகவே பிறந்திருக்கிருள். க்ஷத்திரியர்களுக்கிடையே இவளால் பெரும் பீதி ஏற்படப் போகிறது" என்று அசரீரிவாக்கு ஒன்று கேட்டது. உடனே பாஞ்சால மக்கள் சிங்கம் போல் கர்ஜித்தார்கள்.

இப்படித் தோன்றிய இரண்டு குழந்தைகளையும் துருபதன் மனைவி பார்த்தாள். யாஜ முனிவரிடம், "இந்தக் குழந்தைகள் என்னையே தாயாக ஏற்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அரசனுக்காக வேண்டி முனிவரும், "அப்படியே ஆகட்டும்" என்ருர். அந்தணர்கள் திருஷ்டத்யும்னன் என்று அந்த வாலிபனுக்குப் பெயரிட்டார்கள். தைரியத்துடன் பிறர் எதிர்க்க முடியாமல் இருந்ததால் இந்தப் பெயரை அவனுக்குச் சூட்டினுர்கள். அந்தப் பெண்ணை அவள் நிறத்துக்கு ஏற்றபடி, "கிருஷ்ணு" என்று அழைத்தார்கள்.

திருஷ்டத்தியும்னன் வேத அத்தியயனத்தில் கரை கண்டான். விதியை வெல்ல முடியாது என்று கருதி, துரோணர் தம் புகழுக்கு இழுக்கு வராதபடி அவனுக்கு எல்லா அஸ்திர வித்தைகளையும் ஒளிக்காமல் கற்பித்தார்.

அரசர் மாளிகைக்குள்ளும் குடிசைக்குள்ளும் புகும் ஆடை நுட்பம் தெரியுமோ?

# உடை அணியும் கலை

ஸுவேணீ காச்யப்

வெள்ளை நிறத்துக்கே அலாதியான அழகு உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. சுத்தமான உடையில் தோன்றும் அழகும் இன்பமும் மற்ற நிற உடைகளை அணியும்போது இருப்பதில்லை. வெள்ளை ஆடை அணிந்தவர்களைப் பார்த்தால் பரிசுத்தமும் கவர்ச்சியும் இருப்பது தெரியும்.

உடை அணிவது சாதாரணமான விஷயம் என்று பலர் நினைக்கலாம். பண வசதி உள்ளவர்கள் உயர்ந்த அழகிய உடைகளையும் வசதி இல்லாதவர்கள் ஏதோ மலிவான ஒன்றையும் உடுப்பார்கள் என்று எல்லாருடைய மனத்திலும் தப்பான ஓர் அபிப்பிராயம் வேர் ஊன்றிவிட்டது. ஆனால் என் அபிப்பிராயம் வேறு. ஆடை அணிவது தனிக் கலை என்று நான் நினைக்கிறேன். எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்ட ஆடை அணிய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுவதிலேயே நம் புத்திசாலித்தனம் வெளிப்படும்.

இப்போது உடையின் நிறத்தைப்பற்றிக் கவனிப்போம். வெள்ளை உடையில் அரண்மனைக்கும் போகலாம்; ஏழையின் கூரைக் குடிசைக்கும் போகலாம். எதற்கும் தகுதியானது வெள்ளை உடை.

வெண்மையில் தனிப்பட்ட சோபை ஒன்று இருக்கிறது. வெள்ளை உடை உடுப்பதால் மென்மையும் ஒரு வித அடக்கமும் தோன்றும். வெள்ளை உடைகளை அணிவதில் பல முறைகள் இருக்கின்றன. தனியாக வெள்ளை உடைகளை மட்டுமே உடுப்பது, வெள்ளையோடு மற்ற வர்ணங்களில் உள்ள உடைகளைக் கலந்து அணிவது என்று அவற்றை இரு வகைப் படுத்தலாம்.

வெள்ளை உடை மட்டும் அணிவதைப்பற்றி முதலில் ஆராய்வோம். முழு வெள்ளை உடை அணிவதென்றால் ரவிக்கை, புடைவை இரண்டுமே வெள்ளையாக அணிவது. இதில் புடைவைக்கோ, ரவிக்கைக்கோ கரை இருக்காது. விலை உயர்ந்த துணியாய் இருந்தால் அதன் மதிப்பு நன்றாகத் தெரியும். ஆனால் இந்தத் தூய வெள்ளை உடைக்கு ஏற்ற மாதிரி நகைகளை அணிவதில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். கைகளுக்கு ஒன்றிரண்டு ஜதை வளையல்களுக்கு மேல் போட்டுக்கொள்ளக் கூடாது. கழுத்தில் மெல்லிய ஒற்றை வடச் சங்கிலியோ, நாசுக்கான நெக்லஸோ அணியலாம். பொன்வளையல்கள் போட்டுக்கொண்டிருந்தால், சங்கிலியும் தோடும்கூடப் பொன்னாகவே இருக்க வேண்டும். எல்லாம் இப்படி ஒரே மாதிரியாக இருந்தால், பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால் எல்லாவற்றையும் முத்தால் செய்தவையாகவே அணிய வேண்டும். ஆனால் இது கொஞ்சம் 'ஸ்டைல்' ஆகத் தோன்றும். மூன்றும் வகை, எல்லாம் கற்கள் பதித்தவையாகவே அணிவது. இந்த ஆடையணிகளுக்குப் பொருத்தமாகத் தலையில் வெள்ளை ரோஜாவையாவது வெள்ளையான வில்லியையாவது இரண்டு செருகிக் கொண்டால் நன்றாக இருக்கும்.

இதை விட்டால், கரை போட்ட வெள்ளைப் புடைவைகள். சாதாரணமாகப் புடைவையின் கரை எந்த நிறமாக இருக்கிறதோ, அதே நிறத்தில் ரவிக்கை அணி

மூலம்: ஆந்திர மகிளா (தெலுங்கு), சென்னை.

வார்கள். இந்த முறையில் ஒரு விதம் இன்னும் கலையுணர்ச்சியை எடுத்துக் காட்டும். புடைவையின் கரை சிவப்பானால் சிவப்பு, நீல மானால் நீலம் என்ற முறையில் பாவாடை உபயோகிப்பது மிக நன்றாய் இருக்கும். இந்தக் காலத்தில் 'ஸில்க்' புடைவைகளுக்கு 'ஸாட்டின்' பாவாடைகளை உடுப்பது வழக்கமாக இருக்கிறது. இதனால் புடைவைக்கும் ஒரு மாதிரி அழகு உண்டாகிறது. இப்படி வண்ணப் பாவாடை உடுப்பது கரையில்லாத புடைவைக்குக்கூட எடுப்பாக இருக்கும். அதில் எந்த நிறப் பாவாடை உடுக்கிறோமோ, அதே நிற ரவிக்கை போட்டுக்கொள்ள வேண்டும். இதை நன்றாய்க் கவனித்துச் செய்யவேண்டும். புடைவையை ஊடுருவி வரும் நிறத்திலேயே ரவிக்கை அணிய வேண்டும்.

அப்புறம் சாதாரணமாகப் புடைவைக் கரையின் நிறத்திலேயே வளைகள் போட்டுக் கொள்வது வழக்கம். சில சமயங்களில் அதே நிறத்தில் சங்கிலியும் தோடுங்கூடப் போட்டுக்கொள்வது உண்டு. இதற்கு உடல் நிறத்தையும் கண், மூக்கு அமைப்பையும் கவனித்து உபயோகிக்க வேண்டும்.

சில நாட்களுக்குமுன் ஓர் அம்மாள் வெள்ளை உடைக்காகப் பாவாடையையும் ரவிக்கையையும் கூடப் பச்சை நிற 'ஷேடு' வரும்படி உடுத்திருந்தாள். அதுவும் நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் மிக ஆழ்ந்த நிறமா யிருந்ததால் ரவிக்கைக்கு எடுப்பாக இல்லை. ரவிக்கை ஷேடு கொடுக்கவேண்டு மானால், இளம் வர்ணங்களைப் பொறுக்குவது நல்லது. பொருத்தமாக அமைந்திருந்தால் ஷேடு கொடுப்பது அழகாக இருக்கும்.

இவை சாதாரண காலத்தில் உடை அணியும் விதங்கள். பெரிய பெரிய விருந்துகளுக்குப் போய் ஆடம்பரமாகத் தோன்ற விரும்பினால், அதற்குச் சில முறைகள் உண்டு.

இந்தக் காலத்தில் சரிகை வேலையை மிக ஆதரிக்கிறார்கள். வெள்ளை 'ஸில்க்' மேல் பொன்னிறத்திலும் வெள்ளை நிறத்திலும் உள்ள சரிகைக் கொடிகளைத் தைத்தால் மிகவும் அழகாக இருக்கும். புடைவைக்குப் போட்ட நிறச் சரிகையிலேயே ரவிக்கைக்கும் பூப் போடவேண்டும். டிஸைன்களுக்குத் தகுந்தபடி இந்தத் தையல் அழகாக அமையும். புடைவைக்கும் ரவிக்கைக்கும் பொருத்தமான டிஸைன்களைத் தேர்ந்தெடுத்துத் தைக்கவேண்டும். எல்லாவற்றிலும் முக்கியமாக இதைத்தான் கவனிக்கவேண்டும். இப்படிச் சரிகை வேலை செய்த புடைவைகளுக்கு வெள்ளை ஸாட்டின் பாவாடைகளை உபயோகிப்பது அழகாக இருக்கும்.

சிவப்பாக இருப்பவர்கள் பொன் வண்ணப் பாவாடையும் ரவிக்கையும் உபயோகிக்கலாம். இவற்றில் பொன் வண்ணச் சரிகை வேலைப்பாடுதான் அழகைத் தரும். பொன் வண்ண ரவிக்கையிலும் சரிகை வேலை செய்யலாம். பொன் நகைகளையே அணிவது பொருத்தமாக இருக்கும். தற்காலத்தில் மணிகளையும் கற்களையும் ரவிக்கையில் வைத்துத் தைக்கிறார்கள். கூடியமட்டும் வெள்ளைநிறத் துணிகளுக்குத்தான் இவற்றைத் தைக்கலாம்.

இப்படிக் கவனத்தோடு வெள்ளை உடைகளை அணிந்தால், அழகாக இருப்பதோடு மரியாதையாகவும் பெருமையாகவும் கூட இருக்கும்.

## அன்பு மொழி

அன்பு என்பது ஒரு பாஷை. அதைச் செவிடர்கள் கேட்கலாம்; குருடர்கள் படிக்கலாம்.

—'வெஸ்டெர்ன் மெயில்'

# சீமையில் ஒரு குருகுலம்

## பெர்ஸிவல் ஸ்பீயர்

கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையில் படித்தவர் என்றாலே, அதற்கு அலாதி மதிப்பு ஒன்று உண்டு. அது நடக்கும் முறை நம் புராதன குருகுலங்களையே ஞாபகப்படுத்துகிறது.

ஆக்ஸ்ஃபோர்டு, கேம்ப்ரிட்ஜ் இந்த இரண்டு சர்வகலாசாலைகளும் பெரும்பாலும் ஒரே மாதிரிதான் இருக்கின்றன. இப்படி மொத்தத்தில் இவை ஒத்திருப்பதால் சில்லறை வித்தியாசம் இருக்கிறதா என்று அலசிப் பார்ப்பது வீண்தான். இந்த இரண்டு சர்வகலாசாலைகளும் மத்திய காலத்திலிருந்தே (கி. பி. சுமார் 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே) தடைப்படாமல் தொடர்ந்து நடந்து வருகின்றன. பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் உள்ள மற்றச் சர்வகலாசாலைகள் சமீப காலத்தில் (லண்டன் சர்வகலாசாலைபோல்) புதிதாக ஏற்படுத்திய ஸ்தாபனங்களாகவோ (பாரீஸ் சர்வகலாசாலை போல்) மாற்றி அமைத்தவையாகவோ தான் இருக்கின்றன. ஆகவே, கேம்ப்ரிட்ஜிலும் சரி, ஆக்ஸ்ஃபோர்டிலும் சரி, குறுகிய வீதிகளில் இருக்கும் அந்தக் காலத்துக் கட்டிடங்களின் தோற்றம், 14-ஆம் நூற்றாண்டில் உபயோகித்த மாதிரி கவுன் அணிந்து தற்கால விஞ்ஞானிகள் செல்வது, பழைய காலத்து ஆடம்பர உடை, பரிவாரம் இவைகளுடன் உப-அத்யட்சகர் போவது, பட்டம் வழங்கும் நாளைய நிகழ்ச்சிகள், வாரத்துக்கு ஒரு முறை நடக்கும் உபந்நியாசம், காலேஜில் தங்கி வாழும் மாணவர்களைக் கட்டுப்படுத்தும் சில்லறைத் தடை விதிகள் - இப்படிப் புதுமையும் பழமையும் இணைந்திருப்பதைக் காணலாம்.

முன் காலத்தில் அங்கே வந்தவர்கள் எல்லாரும் ராஜசபை, அரசியல், வியாபாரம், தொழில் அலுவல் இவைகளை விட்டு விலகித் தனிமையில் இருந்து கல்வி பயில்வதே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். நாளடைவில் ஆக்ஸ்ஃபோர்டு தற்கால ரீதியில் தொழில் வளம் பெருகிய நகரம் ஆகிவிட்டது. ஆனால் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையோ அதை அடுத்திருக்கும் கேம்ப்ரிட்ஜ் நகரத்தை விடச் சிறப்புற்று விளங்குகிறது; சர்வகலாசாலையைச் சேர்ந்த காலேஜ் கட்டிடங்கள் 'காம்' என்ற சிற்றாற்றின் கரையில் வரிசையாக இருப்பதைக் காணலாம்.

இங்கிலீஷ் கல்வி முறையில் முக்கியமான ஓர் அம்சம் காலேஜில் உள்ள விடுதியில் தங்கியிருந்து கல்வி பயில்வதுதான். பகல் பள்ளிக்கூடங்களில் சர்க்கார் கல்வி முறை அமலில் இருக்கிறது. அதோடு நடுத்தர வகுப்பார், சிறுவர், சிறுமியர் இரண்டு சாராரும் தங்கிப் பயில ஒரு வகைப் போர்டிங் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். அங்கே கல்விப் பயிற்சியுடன் ஒழுங்கு முறையும் கட்டுப்பாடும் இணைந்திருக்கின்றன. புதிய சர்வகலாசாலைகளிலும் இதே முறையைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இந்த முறை முன்னேறியும் வரு

காப்பிரைட்: 'மஞ்சரி'க்குப் பிரத்தியேகமாய் உதவியவர்: பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் ஸெர்வீஸஸ், த. பெ. நம்பர் 1614, சென்னை-1.

கிறது. கேம்ப்ரிட்ஜிலும் இப்படிச் சர்வகலாசாலை விடுதியிலேயே தங்கிப் படிக்கிறார்கள் மாணவர்கள்; ஆண்கள் தங்கள் விடுதியை அடுத்திருக்கும் ஆண்கள் காலேஜிலும், அப்படியே பெண்கள் தங்கள் விடுதியை அடுத்த காலேஜிலும் படிப்பார்கள்.

ஆக்ஸ்ஃபோர்டு மாதிரியே கேம்ப்ரிட்ஜிலும் ஒவ்வொரு மாணவனையும் கவனித்துக் கொள்ளத் தனித் தனி ஆசிரியர் உண்டு. அந்தத் துறையில் பழகி இருப்பதால் இவர் வயசானவராய்த் தந்தை போல் அவனுக்கு ஆதரவாக இருந்து வருவார். மாணவனுக்கு ஏதாவது சங்கடம் நேர்ந்தால் ஒத்தாசை செய்வார். தொந்தரவு தரும் மாணவனாக இருந்தால் அவனை வழிக்குக் கொண்டு வருவார். மொத்தத்தில் இவர் இதம், பதம், இங்கிதம் தெரிந்த அறிவாளியாகவும் அநுபவஸ்தராகவும் இருக்க வேண்டும். சாதாரணமான மாணவர்கள் அடிக்கடி இந்த ஆசிரியரைக் காண வேண்டியிராது; அவர்கள் சிக்கவில் மாட்டிக்கொள்வதோ, தொந்தரவு கொடுப்பதோ இல்லை—இதுதான் காரணம். அவர்கள் தங்கள் பாடம் உண்டு, ஆசிரியர் உண்டு என்று இருப்பவர்கள்.

கேம்ப்ரிட்ஜில் ஒரு காலேஜில், குறிப்பிட்ட ஒரு துறையில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவனுக்கும் படிப்பில் ஒத்தாசை புரிந்து கவனித்து வர ஒரு டைரக்டர் இருக்கிறார். மாணவர்களுக்கு வேண்டிய பாடப் பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்து மேற்பார்வை பார்க்கச் சூபர்வைஸர் வைத்திருப்பார். இந்தச் சூபர்வைஸர் வாரத்துக்கு ஒரு தரம் மாணவனோடு ஒரு மணி நேரம் இருந்து அவன் பாடத்தில் எவ்வளவு முன்னேறி யிருக்கிறான் என்று அறிந்துகொள்வார்.

ஒரு மாணவன் சரித்திரம் படிக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் காலேஜில் சேர்ந்ததும் அவனைக் கவனிக்கும் பொறுப்பேற்ற ஆசிரியர் (ட்யூட்டர்), மாணவனுடைய சொந்த விவரங்களையும் அவனுடைய உள்ள இச்சை என்ன என்பதையும் விசாரித்து அறிவார். பிறகு டைரக்டரிடம் மாணவரை அழைத்துப் போவார் இந்த ஆசிரியர். மாணவன் படிக்க வேண்டிய பாடத் திட்டம் இப்படி இருக்கும் என்று விளக்கி, இன்ன இன்ன பிரசங்கங்களைக் கேட்டால் நல்லது என்று டைரக்டர் அறிவுறுத்துவார்; பின்பு மாணவனைச் சூபர்வைஸரிடம் அனுப்புவார். சூபர்வைஸர் வாரத்துக்கு ஒரு தரம் வந்து ஒரு மணி நேரம் மாணவருடன் இருப்பார். சரித்திரம் எடுத்துக்கொண்ட மாணவன் தன்னைப் போல் இரண்டொரு கூட்டாளிகளுடன் அவரைக் காணப் போவான். கூடவே, தான் எழுதிய கட்டுரையை அங்கே படித்துக் காட்ட எடுத்துச் செல்வான். கட்டுரையைப் படித்து, அதைப்பற்றிச் சர்ச்சை நடந்த பிறகு, சரித்திரத்தில் சூபர்வைஸர் கேள்வி கேட்பார். எல்லாத் துறையிலும் இப்படியே இருக்கும் என்பதற்கில்லை. மேற்பார்வையிடும் முறை அந்த அந்தத் துறைக்கு ஏற்றபடி மாறுபடலாம். ஆனாலும், ஆசிரியரும் மாணவனும் நேரில் கலந்து நெருங்கிப் பழகும் வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற அடிப்படை நோக்கம் பொதுவாக அமைந்திருக்கும். மூன்று வருஷ காலம் இப்படிப் பழகினால் அறிவு பரந்து, ஒழுக்கம் வளர ஊக்கம் ஏற்படாமலா போகும்?

பெரும்பாலான மாணவர்கள் இப்போதெல்லாம் ஆனர்ஸ் பட்டம் பெற விரும்புகிறார்கள். இதற்கு மூன்று - சில சமயம் நாலு - வருஷ காலங்கூட ஆகிறது. இந்தப் படிப்பு முறைக்கு 'ட்ரைபாஸஸ்' (முக்காலிகள்) என்று பெயர். பழங்காலத்தில் அங்கே மாணவர்கள் முக்காலியில் அமர்ந்து பரீட்சைக்குத் தயாராக இருப்பார்களாம்; அப்போது நடக்கும் பரீட்சையில் கேட்ட கேள்விகளுக்கு வாயாலேயே பதில் சொல்ல வேண்டும். இதனால் பரீட்சைக்கும் 'ட்ரைபாஸஸ் பரீட்சை' என்று பெயர்.



கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை

இந்தப் படிப்பு முறைகளுக்குள் மிகப் பிரசித்தமாகவும் பழமையாகவும் இருப்பது கணிதந்தான். ஸர் ஐஸக் ந்யூட்டன் காலத்திலிருந்து எட்டிங்டன், ஜீன்ஸ் இவர்கள் காலம் வரை இந்தத் துறையில் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை முன்னணியில் இருந்து வருவது. இயற்கை விஞ்ஞானப் படிப்பு வகுப்பில்தான் ஏராளமான பேர் 'ஆனர்ஸ்' மாணவர்களாக இருந்திருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் இந்தத் துறை பல கிளைகளாகப் பெருகி வளர்ந்திருக்கிறது. இங்கே எல்லாவற்றையும் விட முக்கியமானது பௌதிகத் துறை. காவெண்டிஷ் லாபரட்டரியில் இதன் தலைமைக் காரியாலயம் அமைந்திருக்கிறது. இங்கேதான் முதல்முதல் அணுவைப் பிளந்து அதன் அமைப்பை ஜே. ஜே. தாம்ஸன், லார்டு ராலி, ரூதர்ஃபோர்டு முதலியவர்களின் தலைமையில் விஞ்ஞானிகள் ஆராய்ந்தார்கள்.

கீழ்நாட்டு மொழித் துறையில் பயிற்சி பெற்றுத் தேறவும் வசதிகள் உண்டு. கீழ்நாட்டுப் பண்டை மொழிகளான சீனம், சம்ஸ்கிருதம் முதல் புராதன எகிப்திய மொழி வரை எல்லாம் இங்கே கற்கலாம். இந்தத் துறையில் தேர்ச்சி பெற (ட்ரைபாஸ் என்ற பரீட்சைக்குரிய) படிப்புத் துறை ஒவ்வொன்றையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள். பரந்த ஆராய்ச்சியில் ஈடுபட விரும்பும் மாணவர் ஒரு பரீட்சைக்குரிய முதல் பகுதியையும் இன்னொரு பரீட்சைக்குரிய இரண்டாம் பகுதியையும் எடுத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் இந்தப் பரீட்சை நடக்கும். அதில் பி. ஏ., பட்டம் பெற்றதும், சூடிகையான மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள். நிபுணர்

களின் மேற்பார்வையில் மூன்று ஆண்டுகள் இப்படி ஆராய வேண்டியிருக்கும். முடிவில் பெருங்கட்டுரை (தீஸிஸ்) ஒன்று வரைந்து காட்ட வேண்டும். பிறகு டாக்டர் அவ் ஃபிலாஸஃபி என்ற பட்டம் வழங்குவார்கள். உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்து இப்படி ஆராய்ச்சியில் ஈடுபடும் 700 மாணவர்கள் இப்போது கேம்ப்ரிட்ஜில் இருக்கிறார்கள். இந்த மாணவர்களில் ஆசியச் சர்வகலாசாலைகளைச் சேர்ந்தவர்கள் 50 பேர்.

ஆனால் மாணவர் வாழ்வு என்றால் இங்கே எப்போதும் படிப்பும் ஆராய்ச்சியுமாகத்தான் கழிப்பார்கள் என்று அர்த்தமில்லை. தனிப்பட்ட அறிவு வளர்ச்சியோடு சமூகமாக ஒத்துப் பழகுவதும் இங்கே தங்கியிருக்கும் மாணவர்களுக்கு மொத்தத்தில் பரந்த அறிவும் அநுபவமும் ஊட்டுகிறது. ஒரு காலத்தில் கேம்ப்ரிட்ஜ் என்றால் பணக்காரரும், செல்வாக்குள்ளவர்களுந்தான் நெருங்க முடியும் என்ற நிலைமை இருந்தது. அவர்களில் அநேகம் பேருக்கு 'ஆனர்ஸ்' பட்டம் பெற்றாக வேண்டும் என்ற அக்கறையும் அதிகமாக இருந்ததில்லை; ஏழை மாணவன் படிப்பில் கெட்டிக்காரனாக இருந்து போதுமான ஸ்காலர்ஷிப் (உபகாரச் சம்பளப்) பணம் கிடைத்தாலொழிய அங்கே சமாளிக்க முடியாது. ஆனால் இப்போது சர்க்கார் ஸ்காலர்ஷிப்பும் சர்க்கார் நிதி உதவியும் (க்ராண்ட்) இருப்பதால் இந்தப் பரீட்சைகளில் தேறத் தகுதியானவர்கள் எல்லாரும் கேம்ப்ரிட்ஜில் சேரலாம். இப்படிச் சர்க்கார் நிதி உதவி பெற்ற மாணவர் தொகைதான் இப்போது மற்ற மாணவர் தொகையை விட அதிகம்.

முன்னெல்லாம் பெண்களைக் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையில் அநுமதிப்பதில்லை. இப்போதோ அவர்களுக்கென்று அங்கே தனித் தனிக் காலேஜ்கள் இருக்கின்றன. இருந்தாலும், தகுதியுள்ள எல்லாப் பெண்களையுமே சேர்த்துக்கொள்ளப் போதுமான வசதி இன்னும் ஏற்படவில்லை. காலேஜ் துவங்கி நடத்துவது என்றால் அவ்வளவு லேசா? எவ்வளவு பணச் செலவாகும்? ஆகவே, நிதானமாகத்தான் இவை அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

கேம்ப்ரிட்ஜில் இப்போது மாணவர் சமூகத்தில் இருப்பவர்கள், மக்களில் எல்லா வகுப்பு, இனத்தையும் சேர்ந்தவர்கள் தான். மொத்தத்தில் இவர்கள் தகுதியை அடிப்படையாகக் கொண்டு சேர்த்துக்கொள்ளப் பெற்றவர்கள். ஆனால் ஆண் பெண்களின் எண்ணிக்கைதான் பொருந்தாமல் இருக்கிறது. கல்வித் துறையைத் தவிரப் பல வகையில் பொழுது போக்க வசதி உண்டு. தற்கால ஆட்டம், விளையாட்டு வகைகளில் எல்லாம் ஈடுபடலாம். படகோட்டுவது இவைகளில் முக்கியமானது; வில்வித்தை போன்ற பழைய கலைகளைக்கூட உற்சாகமாகப் பயின்று, எல்லாக் காலேஜ் மாணவர்களுக்கும், எல்லாச் சர்வகலாசாலை மாணவர்களுக்கும் இடையே நடக்கும் பந்தயங்களில் கலந்துகொள்கிறார்கள்.

இவைகளைத் தவிர இன்னும் முக்கியமான அம்சம் கேம்ப்ரிட்ஜ் கிளப்பில் ஒருவரோடு ஒருவர் அளவளாவிப் பழகுவதுதான். அக்கம் பக்கத்து அறையில் வாழும் மாணவர்கள் பொதுவாக ஒரே படிக்கட்டு வழியாக வரும்போது பேசிப் பழகுவதால் பல வகைக் சங்கங்கள் செழித்து அமைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு காலேஜிலும் இப்படிப் பல சங்கங்களும், சர்வகலாசாலைகளில் இன்னும் அநேகம் சங்கங்களும் இருக்கின்றன. இவைகளின் மூலம் பரஸ்பரப் பழக்கம், கலை, அறிவு வளர்ச்சி, பொது நோக்கம் இப்படிப் பல துறைகளில் மாணவர்கள் சோபிக்க முடிகிறது. உயர்ந்த முறையில் அமைந்த நாடக, இசைச் சங்கங்களை இங்கே காணலாம். தேசீயக் கலைகளை வளர்க்கும் இளம் பூங்கா என்று இவைகளைச் சொல்ல வேண்டும். கவிகளும் விமரிசகர்களும் அவர்களைப் பாராட்டிப் போற்றும் ஒரு

சாராரும், சுயமாக வாரப் பத்திரிகை நடத்தும் மாணவப் பத்திரிகாசிரியர்களும் வேறு உண்டு.

இந்தச் சங்கங்களுக்குள் யூனியன் சொஸைட்டி என்ற சங்கந்தான் மிகவும் சிறந்து விளங்குகிறது. அது மாணவர் கலந்து பழகும் களப்பாகவும், அரசியல் அரங்கமாகவும் திகழ்கிறது. அதில் வாரத்துக்கு ஒரு தரம் நடைபெறும் விவாதங்கள், பேச்சுத் திறமையை வளர்க்கின்றன. அவ்வப்போது சில மாதங்களுக்கு ஒரு முறை காலேஜ் 'டெர்ம்' முடிவில் மாணவர்களில் சிலர் இளம் அரசியல்வாதிகளாகப் பிற்காலத்தில் பெயர் எடுக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

மாணவர்கள் பரஸ்பரம் தங்கு தடையின்றிச் சர்ச்சை செய்வார்கள். எப்போதும் வெவ்வேறு விதமான அலுவல்கள் இருந்து கொண்டேயிருக்கும். ஆகவே, சலிப்புத் தட்டுமோ என்ற திகிலுக்கே இடமில்லை.

அறிவாற்றலுடன் கட்டுப்பாடும் ஒழுங்கும் அமைய மாணவர் இங்கே வசித்துவருவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்தச் சர்வகலாசாலை நடைபெறுகிறது. இன்னும் ஒரு நோக்கம், பல வகை இயல்புள்ள மாணவர்கள் தனித் தனியாகவும், குழுவினராகவும், சங்கமாகவும் பழகி, நுண்ணறிவும் உள்ளூறப் பரந்த மனோபாவமும் பெற்று விளங்க வேண்டும் என்பதே. இந்த இரண்டுந்தான் இன்று கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை மாணவருடைய வாழ்வு முறையின் அடிப்படையாக இருக்கின்றன. இருந்தாலும், இது சிறிதும் குற்றங் குறையற்ற மாணவ வாழ்க்கை முறை என்று சொல்லிவிடுவதற்கில்லை. வெகு நாள் வழக்கம் காரணமாக இருந்துவரும் தொல்லைகளும் நலன்களும் இணைந்த வாழ்க்கை முறை இது. ஆயினும், முன் சொன்ன இரண்டு நோக்கமும் நிறைவேறப் பொதுவாக எல்லாரும் முயலுவதால்தான் ஒவ்வோர் ஆண்டும் கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலையிலிருந்து நுண்ணறிவும், தெளிந்த நோக்கமும் அநுபவத்தால் பண்பட்ட குணமும் கொண்ட ஆண் பெண்கள் பலர் தோன்றுகிறார்கள்.

### மேதையும் சமர்த்தனும்

மேதைக்கும் சமர்த்தனுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு: சமர்த்தனுக்கு வாரத்துக்கு வாரம் சம்பளம் கிடைத்துவிடுகிறது.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

### குழந்தையே வெந்நீர்ப் பை!

எஸ்கிமோ ஜாதியாரிடம் மகா விசித்திரமான ஒரு வழக்கம் இருந்து வருகிறது. அவர்களுடைய 'இக்லூ' என்ற பனிக்கட்டி வீட்டுக்கு யாராவது விருந்தாளி வந்து இரவிலே தங்குவதாக வைத்துக்கொள்ளுங்கள். வீட்டுத் தலைவன் தன் மனைவியை ஒரு சாக்குப் பையிலே போட்டுத் தைப்பான். விருந்தாளிக்குக் கதகதப்புக் கொடுப்பதற்காக ஒரு தலையணைபோல் அந்தப் பையை அவரிடம் கொடுப்பான்.

நியூஃபவுண்ட்லாண்டுக்கு ஒரு கனவான் போயிருந்தார். அங்கே ஒரு வீட்டுக்காரி இவருக்கு உஷ்ணம் கொடுக்கும் வெந்நீர்ப் பையாகத் தன் குழந்தையை இவருடைய படுக்கையிலே விட்டு வைத்தாளாம்!

—'இண்டோர்ஸ்'



# ஜெர்மனியில் 'சகுந்தலை'

**ஜெர்ஹார்டு ஸ்டினர்**

**1773**-இல் வெகு தூரம் உலகைச் சுற்றிப் பசிபிக் மகா சமுத்திரத்திலே உள்ள டாஹிடி தீவில், 18 வயசான ஜெர்மானிய வாலிபர் ஒருவர் வந்து தங்கினார். இப்படி இதற்கு முன் ஏதோ சில ஐரோப்பியர்கள் மட்டுமே பிரயாணம் செய்திருந்தார்கள். இந்த ஜெர்மானியர் மனசில் அந்தத் தீவில் கண்ட காட்சி அப்படியே பதிந்துவிட்டது. சொர்க்கமாகத் திகழ்ந்தது அந்தத் தீவு. அதில் வசித்த மக்களின் ஒழுக்கம், எளிமை, இயல்பான மகிழ்ச்சி எல்லாம் அவர் உள்ளத்தில், 'மனிதன் இயற்கையில் நல்ல சுபாவம் படைத்தவன். பேராசை இல்லாவிட்டால் அவன் இந்த மக்களைப் போலவேதான் இன்பமாக வாழ்ந்து வருவான்' என்ற உண்மையைத் தெளிவாக்கின. இந்த ஜெர்மானியரின் பெயர் ஜார்ஜ் ஃபார்ஸ்டர். இங்கே வந்து போன பிறகு இவருக்கு ஓர் ஊக்கம் பிறந்தது. மனித சமூகம் ஒழுங்காக நடக்க நம்மால் ஆன முயற்சியைச் செய்தாக வேண்டும் என்று அவர் அரும்பாடு பட்டார். டாஹிடி தீவு அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. ஒரு விதத்தில் பார்த்தால் இங்கேதான் ஃபார்ஸ்டருக்குப் புதிய சிந்தனை கிளர்ந்தெழுந்தது. இங்கே தங்கியிருந்த தன் பயனாக ஒரு நாட்டின்மேல் அவருக்குப் பற்றுதல் மிகுதியாயிற்று. அந்த நாட்டுக்கு அவரால் முடிந்த மட்டும் போகத்தான் பார்த்தார். ஆனால் முடியவில்லை, பாவம்; அதற்குள் இறந்து போய்விட்டார். அந்த நாடு இந்தியாதான்.

இந்தியாவின்மேல் கொண்ட அன்பு காரணமாக அதைப்பற்றிப் புதிய புதிய விஷயங்கள் ஏதாவது கிடைக்குமா என்று நூல் நிலையங்களில் தேடித் துருவிப் பார்ப்பார். 1790-இல் இவர் ஜெர்மனியிலுள்ள மெயின்ஸ் சர்வகலாசாலையில் லைப்ரேரியனாக இருந்தார். அப்போது இங்கிலாந்துக்கு வந்திருந்தார். இவரோடு அலெக்சாண்டர் வான் ஹம்போல்ட் என்ற அறிஞரும் (அப்போது ஹம்போல்ட் வாலிபர்) இருந்தார். சம்ஸ்கிருதத்திலிருந்து பிராகிருதத்தில் மொழிபெயர்த்து வெளியான ஒரு புதிய பிரசுரம் இவருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. அப்போது எவ்வளவோ முக்கிய அலுவல்கள் காரண

**மூலம்:** இன்ஃபர்மேஷன் புல்லட்டின் (ஆங்கிலம்: தி ஜெர்மன் டெமாக்ராட்டிக்



கிரேக்க இலக்கியமே சிறந்தது என்ற மோகத்தை ஜெர்மானியரிடம் அன்றே களைந்தது இந்த அற்புத நாடகம்.

மாகப் போய் வரவேண்டி யிருந்தும் அந்த நூலிலிருந்து சில பகுதிகளை இவர் ஜெர்மன் பாஷையில் மொழிபெயர்த்து, மெயின்ஸ் நகரிலுள்ள ஸாக்ஸன் லிகேஷன் (பிரிட்டிஷ் தூதர் காரியாலயத்தின்) காரியதரிசியும் எழுத்தாளருமான ஹ்யூபர் என்பவருக்கு அதை அனுப்பினார்; தம் நண்பரான ஷில்லர் என்ற ஜெர்மன் அறிஞருக்கு இந்த அருமையான பகுதியைச் சேர்ப்பிக்க வேண்டும் என்றுதான் இப்படி அனுப்பியிருந்தார். அப்போது ஃபார்ஸ்டருக்கு எவ்வளவு உற்சாகம் இருந்தது என்பது 1790 ஜுலை 23-ஆம் தேதி அவர் பெர்லின் நகரிலுள்ள ஸ்பீனர் என்ற பிரசுரகர்த்தருக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரியும்:

''கூடவே இங்கிலாந்திலிருந்து 'சகுந்தலா அல்லது விதியை நிர்ணயித்த மோதிரம்' என்ற இந்திய நாடகத்தின் மொழிபெயர்ப்பை எடுத்து வருகிறேன். ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்தது இது; 1900 வருஷங்களுக்கு முன் காளிதாஸன் என்ற பிரபல இந்தியக் கவி எழுதியது இந்த நாடகம். இதிலுள்ள சில விசேஷங்களைக் கவனிக்கும்போது இந்த நாடகத்தைப் படிப்பது அவசியம் என்று தெரியும். பெருமிதம், மன எழுச்சி, நாடகத் துறை வளரும் நிலையில் தோன்றும் எளிமையோடு அமைந்த கவிதை ஆர்வம் எல்லாம் இதில் காணலாம். என் நண்பரும் 'ரகசியத் தீர்ப்பு' என்ற நூலின் ஆசிரியருமான ஹ்யூபருடன் கலந்து நான் அந்த நாடகத்தை மொழிபெயர்த்து வருகிறேன். அதை நீங்கள் நன்ருக அச்சிட்டுக் கொடுப்பீர்களா? கவர்ச்சியாக இருக்கும் என்று தோன்றுகிறது. ஷில்லரின் 'தாலியா' என்ற பத்திரிகையில் நான் வெளியிட்டிருக்கும் பகுதியைப் பார்த்தால் இது தெரியும்.''

அதுமுதல் மிகவும் உற்சாகத்தோடு ஃபார்ஸ்டர் 'சகுந்தலை'யை மொழிபெயர்க்கலானார்; அதைப் பற்றியும் ஆராய்ந்து, தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். ஸ்பீனருக்கும் அவருக்கும் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே, மெயின்ஸ் நகரத்தில் புத்தக வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ஜோஹான் பீட்டர் ஃபிஷர் என்பவரைப் பிடித்தார். ஃபிஷர்

பிப்ரவரி '57), ட்ரேட் ரெப்ரஸண்டேஷன் அவ் ரிப்பப்ளிக், புது டில்லி.

அப்போதுதான் அச்சுத் தொழிலில் ஈடுபட்டவர்; ஏழை. ஆனல் ஃபிஷருக்கு இப்படி ஊக்கங் கொடுத்தது ஃபார்ஸ்டருக்கு அதிர்ஷ்டமாக முடிந்தது. அதே சமயம் வேறு பல நூல்களையும் வெளியிட வேண்டியிருந்தது; இருந்தாலும் 1791-ஏப்ரல் 16-ஆம் தேதிக்குள் கையெழுத்துப் பிரதியின் கடைசிப் பகுதியை அச்சகத்துக்குக் கிடைக்கும்படி அனுப்பிவிட்டார். 366 பக்கம் கொண்டு ஒழுங்காக அமைந்த ஒரு புத்தகத்தை அந்த நாளில் அவ்வளவு குறுகிய காலத்துக்குள் வெளியிட முடிந்தது என்ருல் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! (அப்படியும் அச்சகத்தார் தாமதப்படுத்திவிட்டதாக ஃபார்ஸ்டர் புகார் செய்திருக்கிருர்!) இதற்கு 4 வாரத்துக்குப் பின் 'சகுந்தலே' அச்சுப் புத்தக உருவில் தயாராகி அவர் மேஜை மேல் காட்சியளித்தது. அப்போது அவருக்கு எவ்வளவு திருப்தி தெரியுமா? ஃபார்ஸ்டரின் வாழ்விலேயே 1791 மே, 17-ஆம் தேதி விசேஷ தினமாகத்தான் இருந்திருக்கும்! இந்தப் புதிய புத்தகத்தின் பிரதியைத் தம் மாமனுரான ஹெய்ன் என்பவரிடம் கொடுத்தார்; ஜெர்மனியில் அப்போது மொழி ஆராய்ச்சி நிபுணராக இருந்த அறிஞர்களுக்கும்-ஏன், பிரபல ஜெர்மன் கவி கெடே, ஹெர்டர் போன்றவர்களுக்குங் கூட-அனுப்பிவைத்தார்.

ஜெர்மன் இலக்கிய உலகுக்கு இங்கிலாந்திலிருந்து இந்த இந்திய நாடகத்தை அவர் கொண்டு வந்து தந்து, அதோடு முகவுரையும் விரிவான குறிப்புக்களும் எழுதுவதென்ருல் அரும் பெருஞ் செயல் தானே? உலகம் சுற்றி, இயற்கை விஞ்ஞானத்திலும் பூகோள சம்பந்தமாகவும் பல விஷயங்களைக் கண்டுபிடித்து வந்த ஒருவர், அதே சமயம் பழைய இந்திய இலக்கியப் பண்பாட்டை அதுவரை அறிந்திராத ஜெர்மன் மக்களுக்கு அளித்தார் என்ருல் பாருங்கள்!

ஃபார்ஸ்டர் 'சகுந்தலே'யை ஒரு கலாசிருஷ்டியாக மட்டும் ரசிக்கவில்லை; அதிலுள்ள சிறந்த கவிதை நயங்களையும் உணர்ந்திருந்தார். 'மனித இயல்பை அறிய அது முக்கியமாகப் பயன்பட்டது' அவருக்கு (1791-மே 17-ஆம் தேதி ஹெய்னுக்கு அவர் எழுதிய கடிதத்தில் இதைக் காணலாம்).

இப்படிச் 'சாகுந்தல'த்தைக் கொண்டு வந்தது இந்திய இலக்கியப் பண்பாட்டை உணர்த்துவதாயிருக்கும் என்பது ஃபார்ஸ்டரின் கருத்து. ஏற்கனவே நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியால் ஜெர்மனியில் நடுத்தர வகுப்பாரிடையே தோன்றிய கருத்துக்களுக்கு ஆக்கம் அளிக்கக் கூடிய பெரு முயற்சியாக இருந்தது இந்த வெளியீடு. பரந்த அறிவுடையவர்கள் மனித சுதந்தரத்துக்கு ஆதரிசமாகப் பழைய இலக்கியம், இதிகாசம் இவற்றில் வரும் வீர புருஷர்களை எடுத்துக் காட்டுவார்கள். ஃபார்ஸ்டரும் இதே கருத்துள்ளவர்தான். 'சகுந்தலே' வெளிவருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஷில்லர் 'கிரேக்க நாட்டுத் தெய்வங்கள்' என்ற நூலை வெளியிட்டபோது கவுண்ட் ஸ்ட்ரால் பெர்க் என்பவர் அதைத் தாக்கியிருந்தார். அப்போது ஷில்லரை ஃபார்ஸ்டர் ஆதரித்தார். மனித லட்சியம் எவ்வளவு பரந்தது என்பதை எடுத்துக் காட்டப் பண்டைக் கிரேக்க இலக்கியத்துக்கும் முற்பட்ட இந்தியப் பண்பாட்டை விளக்கினுர். அரசியல் கிளர்ச்சியில் லட்சியவாதிகளாக இருந்து அறிவிற் சிறந்து முன்னேற்றக் கருத்துகளைக் கொண்ட நடுத்தர வகுப்பாருக்கு ஊக்கமூட்டியது இந்த ஆதரிசம்.

'சகுந்தலே'யை மொழிபெயர்த்ததற்குக் காரணம் இந்த நோக்கமே. தெளிவாகவும் இனிய முறையிலும் ஃபார்ஸ்டர் இதைத் தம் முகவுரையில் குறிப்பிட்டிருக்கிருர்.

''மனித சமூகம் எப்படி ஒழுங்காக அமையவேண்டும் என்ற கருத்து வளர்ச்சி பெற இந்த நூல் பயன்படும்'' என்ருர் ஃபார்ஸ்டர்.

இந்தியாவின் பழைய இலக்கியப் பண்பாட்டை உலக இலக்கிய ஆத

ரிசத்தோடு இப்படி இவர் இணைத்துக் காட்டியதில் உலக இலக்கியமும் வளம் பெற்றது; அதோடு மனித சமூகத்தின் லட்சியம் என்னுல், உலகம் முழுவதும் இருக்கும் எல்லா மக்களுக்கும் பொதுவான லட்சியம் என்ற கருத்தும் உறுதி பெற்றது. உலகத்தைச் சுற்றிப் பார்த்ததிலிருந்து ஐரோப்பியருடைய இனத்திமிரை எதிர்த்து இவர் வாதாடலானுர். தாம் எழுதிய 'எதிர்கால மனித சமூகத்தின் சரித்திரத்துக்கு ஒரு வழிகாட்டி' என்ற நூலிலும் பின்னும் சில விமரிசனங்களிலும் கிறிஸ்தோஃபர் மெய்னர்ஸ் என்பவரை அவரது நிறத்திமிர் வாதத்துக்காக ஃபார்ஸ்டர் கண்டிக்கலானுர். கெல்ட் என்ற இனத்தாரைப் போன்ற மக்கள் இயல்பாகவே நல்ல குணம் படைத்தவர் என்பதும், மங்கோல் இனத்தவரைப் போன்றவர் துன்மார்க்கர் என்பதும் கிறிஸ்தோஃபரின் கொள்கை. ஜெர்மனிலுள்ள கெட்டிங் என்ற ஊரில் கிறிஸ்தோஃபர் இருந்து வந்தார்.

ஃபார்ஸ்டரின் கொள்கை, கிறிஸ்தோஃபருக்கு நேர்மாறுனது. 'சகுந்தலை'யின் முகவுரையில் இதை உறுதிப்படுத்தும் முறையில் ஃபார்ஸ்டர் எழுதியிருக்கிறுர்: ''இந்த நூலைப் படித்தால், 'கங்கைக் கரையில் வாழும் கரும்பழுப்பு நிறமுடைய மக்களும், தாம் உள்ளூற அநுபவித்த நுண்ணிய உணர்ச்சிகளை, ரைன், டைபர், இல்லிஸஸ் முதலிய ஆற்றங்கரையில் வாழும் நம் மாதிரி வெள்ளையரைப் போலவே உணர்ந்தறிய முடியும்' என்பது விளங்கும்.'' இதோடு, பழுப்பு நிற மக்களின் பண்பாடு எவ்வளவு சிறந்து விளங்குகிறது என்பதற்கும் சான்றுகள் வேறு காட்டுகிறுர்.

ஃபார்ஸ்டர் சகுந்தலையைப் புத்தக உருவில் கொண்டுவருவதற்கு முன் ஷில்லர் தம் 'தாலியா' என்ற பத்திரிகையில் சகுந்தலையிலிருந்து சில பகுதிகளை வெளியிடவே, அந்த நூலுக்குச் சுமுகமான வரவேற்புக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது. ஷில்லர் இப்படி ஃபார்ஸ்டரின் மொழிபெயர்ப்பை ஆதரித்ததற்குக் காரணம் என்ன?

''பழைய உயர்வகை இலக்கியத்தின் ஆதரிசமாக, 'நல்ல பண்புகள் எல்லாம் ஒழுங்காக இணைந்த ஒரு பாத்திரம் அதில் உருவாக வேண்டும்' என்று கொள்கிறவர்கள், அந்த மாதிரி ஆதரிசத்தைப் பெண்கள் கடைப்பிடிக்கவும், ஆண் பெண்கள் பரஸ்பரம் பழகுவது இன்னபடி அமைய வேண்டும் என்ற நோக்கம் வளரவும் காளிதாசனுடைய இந்த நாடகம் துணைபுரிவதை உணரலாம்.'' - இதுவே ஷில்லரின் கருத்து. அவர் 1795-இல் வில்ஹெம் வான் ஹம்போல்ட்டுக்கு எழுதிய ஒரு கடிதத்தில், ''பழைய கிரேக்க இலக்கியம் எதிலும் பெண்களை இப்படிக் கவிநயம் தோன்ற வர்ணித்ததுமில்லை; சகுந்தலையைப் போல் நுண்ணிய காதல் வசப்பட்டு, அவளுக்குத் துளியாவது ஈடு என்று சொல்லக் கூடிய பெண்களைப்பற்றியும் அவைகளில் காணவில்லை. இதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்'' என்று குறிப்பிடுகிறுர்.

ஃபார்ஸ்டர் அனுப்பிய சகுந்தலைப் பிரதி கிடைத்ததும் முதலில் பதில் எழுதினவர் மகா கவி கெடேதான். புத்தகம் அவருக்குக் கிடைத்த இரண்டு வாரத்துக்கெல்லாம் கடிதம் எழுதினுர் கெடே. அந்தக் கடிதம் கிடைக்கவில்லை. ஆனுலும் அதில் கண்டுள்ள சின்னஞ் சிறு கவிதையிலிருந்து அந்த மகாகவி, சாகுந்தலத்தைப் பற்றிக் கொண்ட கருத்துத் தெரியும். 'இளவேனில் மலர்களும், இலையுதிர் காலத்துப் பழங்களும், கவர்ச்சியும் மகிழ்ச்சியும் திருப்தியும் ஊட்டமும், சொர்க்கமும் பூவுலகமும் வேண்டி நின்ற போது அவை யாவையும் நுகர்ந்தேன். சகுந்தலா என்று சொன்னுலே போதும். எல்லாம் இதில் அடங்கும்.' இது அந்தப் பாட்டின் கருத்து.

'சகுந்தலை'யைப் படித்துவிட்டு அந்த உற்சாகத்தில் கெடே இந்தச் சிறு பாடலைத் தம் நண்பர் ஜேகோபிக்கும் அனுப்பியிருந்தார். சில மாச காலங் கழித்துக் கெடே

ஃபார்ஸ்டருக்குச் 'சகுந்தலை'யின் ஆங்கிலப் பதிப்பை அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே ஃபார்ஸ்டரும் ஒரு வருஷ காலம் கெடேயே வைத்துக் கொண்டிருக்கும்படி சொல்லி அதைக் கொடுத்தார். இதிலிருந்து கெடே காளிதாசனுடைய சிருஷ்டியை எப்படி ரசித்தார் என்று தெரியும். கெடேக்கு இந்த நாடகம் எவ்வளவு ஊக்கம் அளித்தது என்பதற்குக் கீழ்க்கண்ட விவரம் ஒரு சான்றாகும்: 'சகுந்தலை'யில் சூத்திரதாரன் முன்னுரையாகச் சொல்வதை மாதிரியாக வைத்துக்கொண்டு தம் 'ஃபௌஸ்ட்' என்ற நூலின் முன் பகுதியில் 'நாடக அரங்கில் முன்னுரை' என்று எழுதியிருக்கிறார். 1821-இல் கெடே 'இந்தியக் கவிதை'யைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். 'சகுந்தலை'யை ஆதாரமாகக் கொண்டு எழுந்த தம் கருத்துக்களையே இதில் வெளியிட்டிருக்கிறார். கெடேக்குச் 'சாகுந்தலம்' என்றால் அவ்வளவு பிரியம். அதில் 'இயற்கைச் சூழ்நிலை'யை அப்படியே கவி சித்திரித்திருந்ததுதான் இதற்குக் காரணம். பெண்களின் கற்புநிலை, கள்ளங் கவடில்லாமல் அவர்கள் ஆண்களுக்கு இணங்கிப் போவது, ஆண்களின் மறதி, தாய்மையின் உருவாகத் தனித்து உறைவது, குழந்தை தன் தந்தையையும் தாயையும் இணைக்கும் இணைப்பின் உறுதி - இவைகளைத்தான் அவர் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த 'உண்மையான மனித இயல்பு'களையே பின்னும் மேம்படுத்திக் ''கவி நயத்தால், சொர்க்கம், பூலோகம் இவற்றின் நடுவே பயன் தரும் மேகம் போல் இருந்து வரும் அற்புத உலகிலே கதா பாத்திரங்களைக் கொண்டு செல்லுகிறார் கவி. தேவர்களும் தெய்வ மாதர்களும் இதற்குத் துணையாக இருக்கிறார்கள். அப்போது இயற்கையிலேயே அபூர்வமான ஒரு நிகழ்ச்சி நேர்கிறது'' என்று கெடே கூறுகிறார்.

118 பக்கம் விளக்கங்களுடன் அகர வரிசையில் ஃபார்ஸ்டர் வெளியிட்டிருந்த இந்த மொழிபெயர்ப்பை முக்கியமாக விக்டென்பெர்க் போன்ற அறிஞர்கள் பாராட்டினார்கள். ஃபார்ஸ்டரின் இந்த நூல் நேர் மொழிபெயர்ப்பாக இராததாலும், அப்போது 'சகுந்தலை' பற்றிய ஆராய்ச்சியின் தரம் சரியாக இராததாலும், இதில் சிற்சில குறைகள் இருந்திருக்கத்தான் வேண்டும் என்று தெரிகிறது. ஆனாலும் 1833-ஆம் ஆண்டில் பெர்னாடு ஹிர்ஸல் 'சாகுந்தல'த்தைச் சம்ஸ்கிருதத்திலிருந்து நேராக மொழிபெயர்த்து வெளியிடும் வரையில் ஃபார்ஸ்டரின் மொழிபெயர்ப்பு முக்கியமானதாக இருந்தது. இதைத் தொடர்ந்து ஜெர்மன் மொழியில் சாகுந்தலம் சம்பந்தமாகப் பல நூல்கள் வெளிவந்தன; மூல பாடம் பற்றி இந்திய மொழி நிபுணர்கள் வெளியிட்ட ஆராய்ச்சிக் கருத்துக்களுக்குரிய மதிப்பை அந்த நூல்களில் அளித்திருப்பதையும் காணலாம்.

ஃபார்ஸ்டர் காளிதாசனை ஜெர்மன் இலக்கிய உலகத்துக்கு அறிமுகப்படுத்தியதால் இந்தியப் பண்பாட்டைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்து சிறந்த பயன் விளைய வாய்ப்பு ஏற்பட்டது. சம்ஸ்கிருத மொழியைப் பயில ஒரு புது முறைக்கு இது வழி வகுத்தது. ஃபார்ஸ்டரின் 'சகுந்தலை'யைப் படித்ததால் பல அறிஞர்கள் இந்திய இலக்கியத்தை அறிய முடிந்தது; அதோடு ஜெர்மனியில் இந்திய மொழி ஆராய்ச்சி வளரவும் இவர்கள் காரணமாக விளங்கினார்கள். இவர்களில் 'இந்தியர்களின் மொழியும் அறிவுக் களஞ்சியமும்' என்ற நூலை எழுதிய ஃப்ரெடரிக் வான் ஷ்லெகல் என்பவரும், சம்ஸ்கிருத மொழியில் முதல் ஜெர்மானிய புரொபஸராக இருந்த ஆகஸ்ட் வில்ஹெம் வான் ஷ்லெகல், வில்ஹெம் வான் ஹம்போல்ட் ஆகியோரும் முக்கியமானவர்கள்.

உருவத்தைக் கொண்டு உள்ளத்தை அளக்க முடியுமோ, இல்லையோ; அப்படியும் ஒரு சாஸ்திரம் உண்டு.

# பெண் எப்படி?

**கே. ஏ.**

நண்பரே, உங்களுக்குக் கல்யாணம் நடந்து முடிந்து விட்டதா? நடந்திராமல், கல்யாணம் செய்துகொள்ள வேண்டிய தீர்மானத்துக்கு வந்து துரதிருஷ்டம் நேர்ந்துவிட்டால், நான் ஒரு வழி சொல்லுகிறேன்; கேட்டுக் கொள்ளுங்கள்.

நீங்கள் அவசியம் பெண் பார்க்கப் போவீர்கள். அப்போது பெண்ணின் முகத்தில் ஒளி வீசும் அழகைக் கண்டு மயங்கிப் போய்ச் சம்மதம் கொடுத்து விடாதீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணைவியாய் வரப்போகும் கன்னிகையின் தலையெழுத்து அவள் நெற்றியின் மூலம் தெரிவதைக், காட்டிலும் அவள் பாதத்தின் மூலந்தான் உங்களுக்கு அதிகமாகத் தெரியும்.

பெண் பார்க்கும் படலத்தில் முன்னேற்பாடாக, எந்தச் சமயத்திலும், கையோடு ஸ்கேல்போல் அங்குலம் பொறித்த ஒரு நாடாவையும் கொண்டு போங்கள். அவள் கையால் கொண்டு வந்த டீயோ, காபியோ அருந்திய பின்பு 'அவளுடைய காலின் அளவை எடுத்துத்தான் தீருவேன்' என்று பிடிவாதம் செய்யுங்கள். ஏனென்றால், இத்தாலி தேசத்துச் சாமுத்திரிக லட்சணம் படித்த ஒருவர் அப்படிச் செய்யச் சொல்லுகிறார். அவர் அதற்கு ஆதாரமாய் ஒரு சாஸ்திரத்தையும் காண்பித்திருக்கிறார். அதுதான் பாத சாமுத்திரிகம். இது நமக்கு என்றும் புதிசு அன்று. நம் நாட்டுச் சாமுத்திரிக சாஸ்திரமுந்தான் பாதத்துக்கும் தலையெழுத்துக்கும் தொடர்பு உண்டு என்று கூறுகிறது.

''நீங்கள் மணந்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட பெண்ணின் சுண்டுவிரல் நிலத்தைத் தொடாமல் இருந்தால், அவள் அகில உலகத்தின் மீதும் அன்பு செலுத்தும் ஜாதியைச் சேர்ந்தவளாய் இருக்கவேண்டும்'' என்று நம் நாட்டுச் சாமுத்திரிக சாஸ்திரம் சொல்லுகிறது. ''நீங்கள் தன்னலம் மட்டுமே கருதியவராய்-அவளுடைய அன்பில் பங்குதாரர்களாயிருப்பவர்களை அநுமதிக்கும் விசால புத்தி இல்லாதவராய்-இருந்தால் நீங்கள் அவளை மணக்காமல் இருப்பதே மேல்'' என்று அது நமக்கு ஆலோசனை சொல்லுகிறது.

''கால் கட்டைவிரலுக்கு அடுத்த விரல் நடுவிரலைக் காட்டிலும் நீளமாக இருந்தால், வீட்டின் எஜமான் நாம்தான் என்று இறுமாந்து விடாதீர்கள். நீங்கள் எவ்வளவுதான் உங்களை வீட்டின் எஜமானாக நினைத்திருந்தாலும் அதை மறந்துவிடுங்கள். வீட்டின் தலைமைப் பொறுப்பு அம்மாளிடம் சரண் புகுந்துவிடும். நம் நாட்டு மற்றச் சாஸ்திரங்களைப்போல் பாத சாமுத்திரிகமும் கணக்கு வழக்கில்லாமல் பெருகியிருக்கிறது. இத்தாலியச் சாமுத்திரிக நிபுணர் பாதத்தின் விரல்களை விட்டுவிட்டு அதற்கு மேல் காலோடு இணையும் புறங்கால் பகுதியைக் கொண்டு பெண்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் முறையைச் சொல்லுகிறார்.

அவருடைய நூலில் சொன்னபடி உங்கள் வாழ்க்கைத் துணைவி

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

ஆகப் போகும் பெண்ணின் புறங்கால் பகுதி (கணைக் காலுக்கு அடுத்து விரல் தொடங்கும் வரையில்) மூன்றிலிருந்து நாலு அங்குல நீளம் வரை இருந்தால், நீங்கள் சற்று விழிப்புடன் இருக்க வேண்டும். அவள் ஸிண்ட்ரெல்லா ஜாதியைச் சேர்ந்தவள். அப்படியென்றால், மாற்றாந்தாயின் மகளைப் போன்றவள். அவள் நூற்றுக்கு நூறு - ஏப்ரல் 1 - ஆம் தேதியிலிருந்து வழங்கும் ரீதியில் நூறு நயா பைஸா அளவு-பெண்மை நிறைந்தவள்.' அதனால் என்ன; நல்ல தாச்சு' என்று நீங்கள் சொல்லலாம். இருங்கள்; கொஞ்சம் பொறுங்கள். விஞ்ஞானிகள், 'பெண்கள் நூற்றுக்கு நூறு பெண்ணாகவே இருப்பது சாத்தியம் இல்லை' என்கிறார்கள். ஆகவே, குறைந்த அளவில் பெண்ணாக இருக்கும் போதே அவர்கள் நம்மை எப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறார்கள், பார்த்தீர்களா? இன்னும் நூற்றுக்கு நூறு பெண்ணாயிருப்பவர்களைக் கட்டிக்கொண்டால், நம் கதி என்ன ஆகும்? இந்த வகைப் பெண்கள், அறுபது நாழிகை நேரத்திலும் காதல் பித்தத்திலேயே மூழ்கி இருப்பார்களாம். இதை விட ஆபத்து வேறு என்ன வேண்டும்?

அடுத்தபடியாக நாலு முதல் ஐந்து அங்குல நீளம் உள்ள பாதங்கள் உண்டு. அவற்றை அவர், 'ரதி தேவியின் பாதங்கள்' என்று சொல்லுகிறார். அவள் எப்போதும் ஆடவனை மயக்கும் முயற்சியில் இருப்பாள் என்று நமக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அவள் மனசு, இல்லாளாக இருக்க வேண்டும் என்றே விரும்புமாம்.

பின்பு ஐந்தங்குல நீளத்துக்கு மேற்பட்ட பாதங்கள் இருக்கின்றன. இந்தப் பாதங்களுக்குப் 'பிரம்மாண்ட பாதம்' என்று பெயர். இந்தப் பாதங்களைப் பெற்றவள் 'ஸ்ரீமத் கம்பீர' ஜாதியைச் சேர்ந்தவள். இவளுடைய எண்ணத்தின் ஆழம் புலப்படாது என்பது அந்த இத்தாலிய நிபுணருடைய தீர்மானம். இதுவும் சற்று அபாயந்தான். நீங்கள் இவர்களுடைய கருத்தின் ஆழத்தை எட்டக்கூடிய உயரம் இருந்தால், இவர்களை மணப்பதில் தடை இல்லை. இல்லாவிட்டால் நீங்கள், காலமெல்லாம் நீந்தி நீந்திக் கை சோர்ந்து ஒரு நாள் முழுகிவிட நேரிடும்.

## அற்புத நடிகர்

நெப்போலியன் சக்கரவர்த்திக்கு மிகவும் பிடித்தமான நடிகர் டால்மா என்பவர். ஒரு துப்பாக்கிச் சண்டையில் செத்து விழவேண்டிய ஒரு பாத்திரத்தை இந்தக் கீர்த்தி பெற்ற நடிகர் ஒரு நாள் நடித்துக்கொண்டிருந்தார்.

எதிரி பல முறை கொக்கியை அமுக்கியும் அவனுடைய துப்பாக்கியில் வேட்டுக் கிளம்பவேயில்லை. அந்த நடிகனுக்கு ஒன்றும் தோன்றவேயில்லை. அவனுக்கு ஒரே எரிச்சலாய்ப் போயிற்று. கிட்ட வந்து டால்மாவை ஓர் உதை விட்டான்.

நடிகர் டால்மா சற்றும் நிதானம் இழக்கவில்லை. ''ஹா தெய்வமே! அவன் ஜோட்டின் நுனியிலே விஷம் அல்லவா தோய்த்திருக்கிறான்'' என்று அலறியபடி சாய்ந்துவிட்டார்.

—லெஸ்டர் ஹர்ஸ்ட், 'காரொனெட்'.

# சீனு - இந்தியா வைத்த பெயர்

**ஜகத் நாராயண்**

பாரதக் கலைச் செல்வத்தையெல்லாம் மட்டும் அல்ல, அது வைத்த பெயரையும் ஆசையோடு ஏற்ற புராதன நாடு சீனு.

முன் காலத்தில் சீனர்கள் தங்கள் நாட்டைச் சீனு என்று சொல்வதில்லை. சீன சாம்ராஜ்யத்தை தீன் - ஹீ அல்லது சொர்க்கத்துக்கு அடியில் இருக்கும் நாடு (பூதலம்) என்றுதான் அழைத்து வந்தார்கள். அப்போது அரசாங்க உத்தரவுகளில் சீனுவைத் 'தீன்-சௌ' அல்லது 'சொர்க்க ராஜ்யம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறது. சீனக் குடியானவர்கள் தங்கள் ராஜ்யத்தைச் 'சுங்-காவ் தீ-ஜின்' என்றும், தங்களை 'நடு நாட்டு மக்கள்' என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

கி. பி. 249 - இல் சின் என்ற அரச வம்சம் அந்த நாட்டில் சிறந்தோங்கி யிருந்தது. அப்போது இருந்த அரசன் தன்னைச் சின்-ஷே ஹுவாங் - டே (சீனுவின் முதல் சக்கரவர்த்தி) என்று அழைத்துக்கொண்டான். அந்த நாளில் நம் நாட்டு மக்கள் சீனுவுக்கு அடிக்கடி போய் வருவது வழக்கம். இவர்கள் அதுமுதல் அந்த நாட்டைச் சீனஸ்தானம் என்றும், மகா சீனஸ்தானம் (சீனப் பெரு மக்கள் வாழும் நாடு) என்றும் வழங்கத் தொடங்கினர்கள். அராபியர்களும் இந்தியாவில் கேட்டறிந்த இந்தப் பெயராலேயே 'அல் ஸீன்' (ஸீனே என்று இன்றும் வழங்கி வரும் சொல் இதிலிருந்து வந்ததுதான்) என்று குறிப்பிடலானுர்கள். இப்படியே கிரேக்கரும் 'தீனே' என்று அந்த நாட்டைக் குறிப்பிடலானுர்கள். இப்போது இஸ்தாம்புல் என்று வழங்கும் கான்ஸ்டாண்டிநோபிள் அந்த நாளில் கிழக்கு ரோமர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அப்போது வழங்கிய 'சீன ஸ்தானம்' என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து 'சீனிஸ்தா' என்று ரோமர்கள் இந்த நாட்டைக் குறிப்பிடலானுர்கள். இதுவே லத்தீனில் 'ஸீனு' என்று வழங்கலாயிற்று.

அந்த நாளில் இந்தியா பிற நாடுகளுக்கும் இடங்களுக்கும் வைத்த பெயர்கள் இன்றும் அப்படியே வழங்குவதைக் காணலாம். உதாரணமாக, எகிப்தில் உள்ள நைல் நதியின் பெயர் 'நீல' (நீல நிறம்) என்ற சம்ஸ்கிருதச் சொல்லிலிருந்துதான் வந்தது. கங்கையை 'நீல தாரை' என்பார்கள் நம் நாட்டில். இந்தியாவிலிருந்து போன விபாபாரிகளும் பிரயாணிகளும் எகிப்திலுள்ள பிரபல நதிக்கும் இதே பெயரை இட்டார்கள். அந்தக் காலத்தில் எகிப்தில் இந்த நதிக்கு ஹைஃபாஸிஸ் என்று பெயர் உண்டு. சீனு 'சீனஸ்தானம்' என்ருனது போல் கோட்டான் என்ற நாட்டை 'குஷஸ்தான்' என்று வழங்கலானுர்கள். ஹிந்துகோ என்று இன்று வழங்கும் ஹிந்துகுஷ், சித்திரகோட், நாகர்கோட் என்பவை போல் ஹிந்துகோட் (இந்துக்களின் கோட்டை) என்று ஆயிற்று.

கி. பி. 695 - இல் ஐ - சிங் என்ற சீன அறிஞர் நாலந்தா சர்வகலாசாலையில் (குருகுலத்தில்) 30 ஆண்டுகள் படித்தவர். தம் நாட்டுக்குத் திரும்பும் சமயம் பிரிவுபசாரத்தின்போது தம்முடன் படித்தவர்களிடம் சொன்னது இது:

மூலம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ் (ஆங்கிலம்: 10-3-'57), புது டில்லி.

''இந்தியாவில் ஐந்து பகுதிகளிலும் வாழ்கிற மக்களில் யாருக்குத்தான் சீனஸ்தானம் என்றால் தெரியாது!'' என்றாராம். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் அதற்குச் சுமார் 1000 ஆண்டுகளாகவே - கி. மு. 4 - ஆம் நூற்றாண்டிலிருந்து - இருந்து வந்த நெருங்கிய உறவையே அவர் குறிப்பிட்டார்.

கி. மு. 3 - ஆம் நூற்றாண்டில் இந்தியாவும் சீனாவும் தனித் தனியே பலமான இரண்டு சாம்ராஜ்யங்களாக விளங்கின. மௌரிய வம்ச அரசர்கள் இந்தியாவையும், சின் வம்ச அரசர்கள் சீனாவையும் ஒரு குடைக்கீழ் ஆண்டு வந்தார்கள். அந்தக் காலத்திலும் குஷான அரசர்களான முதலாம், இரண்டாம் கட்ஃபிசஸ், கனிஷ்கன் இவர்கள் ஆண்டபோதும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் பொதுவான எல்லை இருந்து வந்தது. கனிஷ்கன் காலத்தில் இந்திய எல்லை வட இந்தியாவிலிருந்து மத்திய ஆசியாவிலுள்ள கோபி பாலைவனம்மட்டும் பரவி யிருந்தது; இந்தோ - ஸிதியர்கள், பார்த்தியர்கள், சோக்தியர்கள், கோட்டான் மக்கள் வாழ்ந்த பகுதிகள் எல்லாம் இந்தியாவைச் சேர்ந்தவை. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜெர்மன் அறிஞர் ஒருவர் இவர்களை இந்தோ-சீன இனத்தவர் என்கிறார். இந்த நாடுகளில் சம்ஸ்கிருதமும் பாலியும் பொது மொழியாக இருந்தன. யார்க்கண்டு, ஸாமர்க்கண்டு, பராஷர், கோட்டான் இந்த இடங்கள் இந்தியப் பண்பாட்டின் பிரதான நிலையங்களாகவும், இந்தியரும் சீனரும் இணையும் எல்லையாகவும் விளங்கின.

இந்த எல்லைப்புற மாகாணங்களிலிருந்தும் காஷ்மீரத்திலிருந்தும், அப்போது இந்தியாவின் தலைநகரமாக இருந்த பிஷாவர் என்ற புருஷபுரத்திலிருந்தும் இந்தியப் பண்பாடு என்னும் பேரூற்று ஒன்று கிளம்பிச் சீனா முழுவதும் பரவி, ஜப்பான், கொரியா வரை எட்டியது. அதே சமயம்-கி. பி. முதல் ஐந்து நூற்றாண்டுவரை - தென் கிழக்கு ஆசியப் பகுதியில் இந்தியரும் சீனரும் கடல் மார்க்கங்களில் நெருங்கிப் பழக நேர்ந்தது. இந்தியர்கள் பலர் சீனாவின் தென்கிழக்கு எல்லையிலும் ஜாவா, சுமாத்ரா, போர்னியோ, மலாயா, சயாம், தாய்லந்து இந்த நாடுகளிலும் குடியேறினார்கள். கம்போடியா என்று இப்போது வழங்கும் காம்போஜம், யவத்வீபம், சிரீவிஜயம், சீன எல்லையில் சம்பா இந்த இடங்களில் இந்திய அரசர்கள் ஆளத் தொடங்கினார்கள்.

கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு வந்த சீன யாத்திரிகர்கள் இந்த நாடுகளில் இந்தியப் பண்பாட்டின் பிரதான நிலையங்களாக விளங்கிய இடங்களை இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்: ''அரண்கள் கொண்ட சிரீவிஜயம் என்ற நகரில் 1000-க்கு மேற்பட்ட பௌத்த பிட்சுக்கள் வாழ்கிறார்கள். கல்வி பயில்வதிலும் நல்லொழுக்கம் கடைப்பிடிப்பதிலும் மத்தியப் பிரதேசத்தில் (மத்திய இந்தியாவில்) உள்ள சகல கலைகளையும் ஆராய்வதிலும் அவர்கள் ஈடுபட்டிருப்பார்கள்.''

இந்தியாவிலிருந்து சீனாவுக்கு அஸ்ஸாம் மூலம் மூன்றாம் மார்க்கம் ஒன்று உண்டு. ஹியூவன் த்ஸாங், அஸ்ஸாம் அரசனான பாஸ்கர வர்மனைக் காண வந்தபோது, தாம் மகாசீனம் என்று இந்தியாவில் வழங்கும் நாட்டிலிருந்து வந்ததாக அரசனிடம் தெரிவித்தார். பாஸ்கர வர்மன் அவரிடம் அஸ்ஸாம் தேசத்தில் பிரபலமாகியிருந்த சில சீனப் பாடல்களைப் பற்றி விசாரித்தான். அப்போது அஸ்ஸாமுக்கும் சீனாவுக்கும் போய் வர வழி எங்கே இருக்கிறது என்று அவர் கேட்டாராம். பர்மாவின் வடபகுதி வழியாகவும் திபேத் வழியாகவும் போய் வரலாம் என்று தெரிவித்தான் அரசன்.

கிறிஸ்துவ ஆண்டின் தொடக்கத்தில் 'சீன ஆசாரம்' என்ற ஒரு நூல் இந்தியாவில் வழங்கிவந்தது. அப்போதுதான் 'சீன ஸ்தானம்' என்று அந்த நாட்டைக் குறிப்பிட்டிருப்பது முதல் முதலாகத் தெரிகிறது. அந்த நூல் இப்போது கிடைக்கவில்லை. ஆனால் அதிலிருந்து சில பகுதிகள் வடமொழியி

ளுள்ள பல தாந்திரிக நூல்களில் வந்திருப்பதைக் காணலாம். ஆகவே, 'சீனசாரம்' என்ற நூலை ஆதாரமாகக் கொண்டுதான் புத்த கோஷரும் வசிஷ்ட முனிவரும் சீனஸ்தானம் போய்த் தாரை, நீல சரஸ்வதி இந்தத் தேவிகளின் வழி பாட்டை அங்கும் பரப்பினர்கள் என்று தெரிகிறது. தேவி பாகவதத்தில் உள்ள ஒரு சுலோகம், ''அன்னை நீல சரஸ்வதி சீன தேசத்தில் ஞானவடிவாய்த் திகழ்வாள்'' என்று குறித்திருப்பதைக் காணலாம். மகாபாரதத்தில் யுதிஷ்டிரர் நடத்திய ராஜசூய யக்ஞத்துக்குச் சீனுவிலிருந்து ஒரு தூதன் வந்திருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறது.

சீனுவில் தயை, அநுதாபம் இவைகளைக் குறிக்கும் தெய்வமான க்வான்-யினைப்பற்றிச் சீன இலக்கியத்திலும், அறிவின் தெய்வமான சரஸ்வதியைப்பற்றிச் சம்ஸ்கிருத இலக்கியத்திலும் ஒரே சமயத்தில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

கிறிஸ்துவ ஆண்டின் தொடக்கத்திலே, வான சாஸ்திரத்தில் நிபுணரான சிரியா நாட்டுச் சந்நியாசி ஒருவர், கிரேக்கர்களும் இந்துக்களும் கலைகளில் எவ்வளவு முன்னேறியிருந்தார்கள் என்பதை இப்படி ஒப்பிட்டிருக்கிறர்:

''இனி இந்துககளுடைய கலையறிவைப்பற்றிச் சொல்லுகிறேன்: வான சாஸ்திரத்தில் மிகவும் நுண்ணிய விஷயங்களையெல்லாம் அவர்கள் கண்டு பிடித்திருக்கிறர்கள் - கிரேக்க, பாபிலோனியர்கள் கண்டு பிடித்திருப்பவற்றை விட அற்புதமானவை இவை. கணிதத்தில் தான் எவ்வளவு பகுத்தறிவான முறையில் முன்னேறி யிருக்கிறர்கள் இந்த இந்துக்கள்! இவர்கள் கணக்கிடும் விதத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். ஒன்பது எண் உருவங்களை வைத்துக் கொண்டு இவர்கள் கணக்கிடுவதைத்தான் சொல்லுகிறேன்.

''தாங்கள் கிரேக்க மொழி பேசுவதால் தாங்கள் மட்டுமே கணிதத்தில் கரை கண்டவர்கள் என்று எண்ணுகிறவர்களுக்கு இந்த விவரங்கள் தெரிந்தால் அப்புறமாவது, 'கிரேக்கரைத் தவிர வேறு மொழி பேசும் மக்களுக்கும் நம்மைபபோல் ஏதோ சில விஷயம் தெரிந்துதான் இருக்கிறது' என்று அவர்களுக்குப் புரியலாம்.''

அதே சமயத்தில் ஹ்யூவன் த்ஸாங் இந்தியாவைப்பற்றி எழுதியிருப்பது இது: ''சீனர்களுக்கு இந்தியாவிடமும் அதன் பண்பாட்டிடமும் எவ்வளவு மதிப்பு உண்டு என்பது அவர்கள் 'யிந் - து' என்று இந்த நாட்டைக் குறிப்பிடுவதிலிருந்தே தெரியலாம். இந்து என்றுல் சந்திரன் என்று அர்த்தம். இந்தப் பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் இதுவே: இந்திய நாடு ஒன்றுதான், மகரிஷிகளின் பரம்பரை முறையாகத் தோன்றிய நாடு; அஞ்ஞான இருளில் ஆழ்ந்து கிடந்த மனித சமூகத்தில் நிலவொளிபோல் அறிவுச் சுடர் பரப்பிய நாடு.''

அந்தக் காலத்திலேயே இந்தியாவுக்கென்று, நிறைவான தனி நாகரிகம் ஒன்று அமைந்திருந்தது. இந்திய எல்லையைக் கடந்து அதன் பண்பாடு ஆசியா கண்டம் முழுவதும் பரவியிருந்தது. உலகம் அப்போது இன்றுபோல் பரந்திரா விட்டாலும் இந்தியாவின் ஆதரிசம், அதன் நாகரிகம், கலை, அங்கே வழங்கும் மொழி இவைகளைப்பற்றி எல்லா நாட்டு மக்களுக்கும் தெரிந்திருந்தது. பல நூற்றுண்டுகள் இப்படியே நீடித்துச் சிறப்புற்று விளங்கியது இந்தியா.

ஆசியாவின் சரித்திரத்திலே கி. பி. 1-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 6-ஆம் நூற்றுண்டு முடிய உள்ள பகுதியை 'இந்திய - சீன வரலாற்றுப் பகுதி' என்று குறிப்பிடுவார்கள். நிறைவுற்ற இநதத் தனித் தனி நாகரிகங்கள் இரண்டும் பல நாடுகளில் ஒன்று கூடும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கெல்லாம் இவை இரண்டும் பரவி அப்படியே இருந்திருக்கின்றன. இன்று புதிய புதிய நிகழ்ச்சிகள் நடந்து, நாளைக்கு இன்னது நிகழும் என்று சொல்லமுடியாத நிலையில், ஆசியப் பண்பாடு மட்டும் இன்னும் இந்திய, சீன நாகரிகத்தை ஆதாரமாகக் கொண்டே விளங்குகிறது.

கன்னடக் கதை:

# சென்னம்மா

**'ஆனந்தா'**

இன்று கர்நாடகத்தில் உள்ள பிரபல எழுத்தாளர்களில் ஒருவர் இவர். இவருடைய உண்மைப் பெயர் ஏ. சீதாராம். இவருடைய 'மாடகாதி' (மாயக்காரி) என்ற கதைத் தொகுப்பிலிருந்து எடுத்தது இந்தக் கதை. தட்சிண பாரத ஹிந்தி பிரசாரக் குழுவின் 'பிரவேசிகா' பரீட்சைக்கு 1953-இல் இந்தத் தொகுப்பைப் பாடமாக வைத்திருந்தார்கள்.

அந்தக் கிராமத்தின் பெயர் நாகவள்ளி. நான் அங்கே சென்றபோது, ஏறக்குறைய என் சுற்றுப் பிரயாணம் முடிவடையும் தறுவாயில் இருந்தது. அதற்குள் சுமார் நூற்றைம்பது புகைப்படங்கள் சேமித்திருந்தேன். எல்லாம் நானே எடுத்தவை.

கிராமத்தை அடையும்போது இரவு மணி ஒன்பதாகிவிட்டது. என் உடைமைகளை எல்லாம் ஒரு சந்தை வண்டியில் போட்டு, அதன் பின்னாலேயே நடந்து வந்தேன்.

''இரவில் எங்கே தங்கலாம்?'' என்று வண்டிக்காரனை விசாரித்தேன். கரியப்பா அவர்களின் பெயரைச் சொல்லி, ''அவங்க கிட்ட வேணுன்னுப் போய்ச் சொல்றேன், சாமி. அவங்க எல்லாஞ் செய்வாங்க'' என்றான் வண்டிக்காரன். ''சரி'' என்றேன். சிறிது தூரத்திலேயே அவர் வீடு தென்பட்டது. வீட்டெதிரே வண்டியை நிறுத்திவிட்டு, உள்ளே சென்று வேறு ஒரு மனிதருடன் திரும்பி வந்து, ''இவங்கதாஞ் சாமி, கரியப்பா'' என்று வண்டிக்காரன் என்னிடம் கூறினான். கரியப்பா என் பக்கத்தில் வந்து, மிகவும் பணிவுடன் ''ஐயா, இதை உங்கள் வீடு போலவே நினைத்துக்கொள்ளுங்கள்'' என்றார். நானும் அவரைக் கும்பிட்டு, ''தங்களுக்கு வீணாகச் சிரமம் கொடுக்கிறேன்'' என்றேன்.

அவர் வீட்டுத் திண்ணையில் விரித்துக் கிடந்த பாயின் மேல் அமர்ந்தேன். கரியப்பா அவர்களின் குடும்பம் பெரியது. நிறைந்த வீடு. நான் அமர்ந்தவுடன் உள்ளேயிருந்து நான்கைந்து சின்னச் சின்னக் குழந்தைகள் ஓடி வந்து என்னைச் சுற்றி நின்றுகொண்டு ஆவலுடன் பார்த்தார்கள். என் 'ஹாட்'டும் 'பூட்டு'ம் 'கோட்'டும் அவர்களுக்கு வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

திண்ணையை அடுத்து ஓர் அறை. வேலையாள் அந்த அறையைத் திறந்து பெருக்கிப் பாய் போட்டு ஒரு விளக்கைப் பொருத்தி வைத்தான். வண்டிக்காரன் என் சாமான்களை உள்ளே கொண்டு போய் வைத்தான். அவனுக்குக் கொடுக்க வேண்டிய வாடகைப் பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பினேன். உள்ளே சென்று உடுப்பைக் களைந்துவிட்டு வேஷ்டி உடுத்துக்கொண்டேன். அதற்குள் வெந்நீர் தயாராக வைத்திருந்தார்கள். முகம், கை, கால் கழுவிச் சுத்தம் செய்துகொண்டேன். சாப்பிட்டானதும் மறுபடியும்

காப்பிரைட்: மாடகாதி (கன்னடக் கதைத் தொகுப்பு). வெளியிட்டவர்: உஷா ஸாஹித்யமாலா, மைசூர். விலை ரூ. 1/25.

திண்ணையில் அமர்ந்து என் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றிப் பேசலானேன். அவர் வீட்டில் நான் தங்கியதுபற்றிக் கரியப்பாவுக்கு மிகவும் மகிழ்ச்சி. அவருடைய பேச்சிலிருந்து அவர் பெரிய பணக்காரர் என்பதை அறிந்தேன்.

வேலையாட்களுக்குக் குறைவில்லை. கொட்டில் நிறைய மாடு கன்றுகள். இவ்வளவு தனவந்தராக இருந்தும், அவரிடம் கர்வமே இல்லை.

வழி நடந்து களைப்பாக இருந்ததால், நான் அதிக நேரம் பேசிக்கொண்டிருக்கவில்லை. உள்ளே சென்று விளக்கை அணைத்துவிட்டுப் படுத்து உறங்கிவிட்டேன்.

காலையில் நான் கண் விழித்தபோது, மணி ஏழு ஆகிவிட்டது. முகம் கழுவினேன். கரியப்பாவே ஒரு கிண்ணத்தில் பால் எடுத்துக்கொண்டு வந்து எனக்கு அளித்தார். அவர் வீட்டில் காபி வழக்கம் கிடையாது; எனக்கோ பால் வழக்கமில்லை. கொண்டு வந்ததை வேண்டாம் என்பது முறையல்ல. பாலைக் குடித்து வைத்தேன். என் சுற்றுப் பிரயாணத்தின்போது நான் எடுத்த புகைப்படங்களை அவரிடம் காட்டி, அவைபற்றிய விவரம் சொன்னேன். அதைக் கேட்டு அவருக்கு உண்டான வியப்பையும் மகிழ்ச்சியையும் சொல்லி முடியாது. ''ஐயா, நீங்கள் இஷ்டப்பட்டால், இங்கேயே பக்கத்திலே கோயிலொண்ணு இருக்கு - ரங்கநாதர் கோயில். ரொம்பப் பக்கந்தான். பழங்காலத்துக் கோயில்; அதில் உள்ள பல சிற்பங்களைப் படம் எடுக்கலாம்'' என்றார் அவர். அதைக் கேட்டதும் அந்தக் கோயிலையும் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவல் பிறந்தது.

ஆனால் அன்று என்னால் அங்கே போக முடியவில்லை. என் லட்சுமிக்குக் கடிதம் எழுதவேண்டியிருந்தது. தவிர, பேலூர்ச் சிற்பங்களைப்பற்றிக் குறிப்பு எழுதும் வேலையும் பாக்கி இருந்தது. அதனால் மறுநாள் போவதாக அவரிடம் தெரிவித்தேன்.

சாப்பிட்டபின் லட்சுமிக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தேன். என் சுற்றுப் பிரயாணத்தில் அடிக்கடி அவளுக்குக் கடிதம் எழுதுவேன். நான் பார்த்த கோயில்கள், காட்சிகள் இவற்றையெல்லாம் வர்ணித்து எழுதுவேன். நான் நாகவள்ளிக்கு வந்து, கரியப்பாவின் விருந்தாளியாகத் தங்கியது, அவருடைய உபசாரம் எல்லாவற்றையும் எழுதி முடித்தேன். மறு நாள் மரடி மலை ரங்கநாதரைத் தரிசிக்கப்போவது பற்றியும் ஒரு வரி சேர்த்து வைத்தேன்.

அந்தக் கிராமத்தில் தபால் ஆபீஸ் கிடையாது. வாரத்தில் ஒரு முறையோ இரு முறையோ பேலூரிலிருந்து தபால்காரன் வந்து கடிதங்களைப் பட்டுவாடா செய்துவிட்டு, அங்கேயிருந்து கடிதங்களை எடுத்துச் செல்வான். அந்த ஊரில் தபால் பெட்டி எங்கே இருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை! வேலையாள் எவனாவது தட்டுப்படுகிறானா என்று பார்க்க வெளியே வந்தேன். நான் வெளியே வந்தபோது, அறையின் முன் இருந்த தூண் ஒன்றில் சாய்ந்தபடி ஓர் இளம் பெண் மட்டும் உட்கார்ந்திருந்தாள். வேலைக்காரன் எவனும் தென்படாததால், செய்வதறியாது யோசித்துக்கொண்டே நின்றேன். அப்போது அவள் புன்னகை பூத்து, ''என்ன செய்யணும் சொல்லுங்க, சாமி? செய்யறேன்'' என்று கூறினாள். பட்டிக்காட்டுப் பெண்ணான அவளுடைய வெகுளித்தனமும் சரளமான பேச்சும் எனக்கு வியப்பை அளித்தன.

நான் சொன்னேன்: ''ஒண்ணுமில்லேம்மா; காகிதம் ஒண்ணு தபால் பெட்டியில் போடவேணும். தபால் பெட்டி எங்கே இருக்கு?''

அவள் சிரித்துக்கொண்டே என்னை நோக்கி இன்னும் இரண்டடி எடுத்து வைத்து, ''ஏன், சாமி, அவ்வளவு தொந்தரவு உங்களுக்கு? இங்கே கொடுங்க; நானே போடறேன்'' என்றாள். கடிதத்தை அவள் கையில் கொடுத்து, ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

அவள் நாணத்துடன், ''சென்னி'' என்று சொல்லிக்கொண்டே ஓடி விட்டாள். 'அழகான பெயர்! அழகாகப் பேசுகிறுள்!' என்று நினைத்துக்கொண்டேன். அவள் முகத்தில் பொலிந்த அடக்கம், இருதயத்தின் எதிரொலி போல் கண்ணில் தென்பட்ட நிஷ்கபடம், மொழியிலே நெளிந்தோடிய குழைவு எல்லாம் என் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துவிட்டன.

பிற்பகல் சாப்பிட்டபின் சிறிது நேரம் கண்ணயர்ந்தேன். விழித்ததும் முகம் கழுவிக்கொள்ள வெளியே வந்தேன். மறுபடியும் அதே பெண் - நான் முன்பு பார்த்த இடத்திலேயே-தூணில் சாய்ந்தாற் போல் உட்கார்ந்திருந்தாள். நான் வெளியே வந்ததைக் கண்டாள். நீட்டிக்கொண் டிருந்த கால்களை மடக்கிக்கொண்டு மனத்தை எங்கோ அலைய விட்டபடி தன் சேலையின் மேல் தலைப்பில் இருந்த நூல் இழைகளை ஒவ்வொன்ருகப் பிய்க்க ஆரம்பித்தாள். எனக்கு முகம் கழுவ ஜலம் தேவையாக இருந்தது. ''சென்னம்மா, கொஞ்சம் தண்ணீர் வேணும்'' என்றேன். ''கொண்டு வறேன், சாமி'' என்று புன்னகையோடு மொழிந்தாள். அவசரமாக உள்ளே சென்ருள். சென்னம்மா பிறக்கும்போதே புன்னகையைக் கொண்டு வந்திருக்க வேண்டும்; நான் பார்த்தபோதெல்லாம் அவளுடைய கபடமற்ற முகம், புன்னகையினல் ஜொலித்துக்கொண் டிருந்தது! சற்று நேரத்தில் சென்னம்மா தண்ணீர் கொண்டு வந்தாள். பிறகு ஒரு தட்டில் கொஞ்சம் பலகாரமும் கொண்டு வந்து வைத்தாள்.

மாலை நேரம் வெளியே செல்ல எண்ணினேன். கையில் காமிரா. என் புல்லாங் குழலையும் எடுத்துக் கொண்டு வெளிக் கிளம்பினேன். வீட்டை விட்டுக் கொஞ்ச தூரம் வந்திருப்பேன். எங்கே போவது என்று யோசித்தேன். அவர்கள் வீட்டுப் புழைக்கடையில் ஒரு தோட்டம் இருப்பதாகக் கேள்விப் பட்டிருந்தேன். அங்கே போவதென்று தீர்மானித்தேன். ஆனல் வழி தெரியவில்லை.

பின்னல் திரும்பி, ''சென்னம்மா, உங்க தோட்டத்துக்கு வழி எது? காட்டுகிருயா?'' என்றேன். ''ஓ, காட்டுகிறேனே'' என்று கூறி, ஒரு குறுக்குப் பாதையைக் காட்டினுள். சென்னி காட்டிய பாதை வழியாக நடந்தேன். அப்போது அடித்த இளங்காற்றில் என் அங்க வஸ்திரம் பறந்து வேலி முள்ளில் சிக்கியது. அதை விடுவித்துக் கொள்வதற்காகப் பின்னல் திரும்பினேன். சென்னம்மா இன்னும் அதே இடத்தில் நின்றுகொண் டிருந்தாள். எங்கே நான் வழி தவறிவிடுவேனே என்ற பயம் போல் இருக்கிறது!

சூரியப்பாவின் தோப்பு விசாலமானது. தென்னை, கமுகு, வாழை முதலிய மரங்கள் நிறைந்தது. தோப்பின் நடுவே இருந்த பெரிய கிணற்றுச் சுவரின்மேல் அமர்ந்து இயற்கை வனப்பில் மயங்கிய நான், குழலை எடுத்து என்னையும் மறந்து ஊத ஆரம்பித்தேன். மிகவும் அழகான தோட்டம். மாலைக் கதிரவனின் மஞ்சள் வெயிலில் அதன் அழகு இரட்டிப் பாயிற்று. சிறிது நேரம் என் மனம் அந்தத் தோப்பின் அழகில் ஏதோ வர்ணிக்க இயலாத சுகாநுபவத்தில் திளைத்துக்கொண் டிருந்தது. தோப்பின் குளிர்ந்த தென்றல் இன்பமாக இருந்தது. கிணற்றைச் சுற்றிலும் பூஞ்செடிகள். அவற்றின் நறுமணம் இளங்காற்றுடன் உறவாடிக்கொண் டிருந்தது. விதம் விதமான பறவைகளின் இனிய குரல் எங்கும் ஒலித்துக் கொண் டிருந்தது. என் இருதயம் பறவையோடு பறவையாகவும் மலரோடு மலராகவும் ஐக்கியம் அடைந்தது, மயக்கும் அந்த மாலை வேளையில்; மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது, பரவசமாய்க் குழலூதினேன். என் வாசிப்பில் நானே மயக்கம் கொண்டேன். இரண்டொரு பாட்டுக்கள் வாசித்த பிறகு, வாயாலேயே பாடத் தொடங்கிவிட்டேன். திடீரென்று என் பின்னல் 'சல சல' என்று



சப்தம் கேட்டது. பாடுவதைச் சட்டென்று நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெண் சென்னிதான். அவள் என்னையே நோக்கிக்கொண்டிருந்தாள். பட்டிக் காட்டானைப் போல் வாய்க்கு வந்ததை நான் உரக்க உளறிக்கொண்டிருப்பது பற்றி எனக்கே வெட்கமாய்ப் போயிற்று.

சிரிப்பு வந்தது. குழலைக் கீழே வைத்துவிட்டு என் காமிராவைப் பார்ப்பது போல் பாவனை செய்தேன். இரண்டு குடங்களில் நீர் நிரப்பிக்கொண்டு படிகளில் பையப் பைய அவள் ஏறி வந்துகொண்டிருந்தாள். என் அழகான பாட்டைக் கேட்டு அவள் முகத்தில் இன்னமும் குறுநகை பொங்கிக்கொண்டிருந்தது. முகத்தைத் திருப்பிக்கொண்டு எழுந்தேன்.

அவள் என்னவோ சொன்னாற்போல் இருந்தது. என் மனத்தில் உண்டாகியிருந்த குழப்பத்தில், அது என்னவென்றே எனக்கு விளங்கவில்லை. மறுபடியும் அவள் பக்கம் திரும்பி, ''என்னம்மா?'' என்றேன். ''ஏன் பாடறதை நிறுத்திட்டீங்க, சாமி?'' என்று அவள் கேட்டாள். அந்தக் கேள்வியால் என் உள்ளத்தில் ஏற்பட்ட கலவரம் சொல்லுக்கு அடங்காது. ''முடிந்துவிட்டதம்மா'' என்றேன்.

குழலையும், காமிராவையும் கையில் எடுத்துக்கொண்டேன். ஒன்றிரண்டு அடி எடுத்து வைத்திருப்பேன். அதற்குள் அவள், ''சாமீ!'' என்று அழைத்தாள். 'என்ன மறுபடியும் சாமிக்கு?' என்று நினைத்து அவள் பக்கம் திரும்பினேன். நிறைகுடம் ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருந்தாள். இன்னொன்று அந்தக் கிணற்றுச் சுவரின்மேல் இருந்தது. நான் திரும்பியதும், அவள் கிணற்றுக் குடத்தைச் சுட்டிக் காட்டி, ''கொஞ்சம் அதைத் தூக்கித் தர்றீங்களா?'' என்று நாணத்துடன் கேட்டாள். நான், ''அதற்கென்ன?'' என்று சொல்லி, கையிலிருந்த காமிராவையும் புல்லாங் குழலையும் கீழே வைத்துவிட்டு, அந்தக் குடத்தைத் தூக்கி அவள் இடுப்பில் வைத்தேன். நன்றிச் சிரிப்புடன் குடங்களின் பாரம் அலைக்க ஆடி அசைந்து மெல்லத் தன் வீடு நோக்கிச் சென்றாள் சென்னி. பூத்துக் குலுங்கும் அந்தப் பருவ மங்கையின் வனப்பு,

மாலைக் கதிரவனின் பொன்னிறக் காந்தியில் மிக மனோகரமாகத் திகழ்ந்தது. அவளை ஒரு புகைப் படம் எடுக்கவேண்டும் என்று தோன்றியது. காமிராவைச் சரிப் படுத்திக்கொண்டு, 'அவள் என்ன நினைத்துக்கொள்ளுவாளோ?' என் னும் எண்ணங்கூட இல்லாமல், ''சென்னம்மா'' என்று கூப்பிட் டேன். அவள், ''கூப்பிட்டீங்களா, சாமி?'' என்று திரும்பினாள். அவ ளுக்கு அருகே சென்று, ''ஒரு நிமி ஷம் அப்படியே நிக்கறியா?'' என் றேன். வியப்புடன் இளம் வெயிலின் எதிரே குலுங்கிய பூங்கொடிபோல் அவள் நின்றாள். அந்த முகத்தில் என்றும் போல் அதே கள்ளமில் லாச் சிரிப்பு - இள நகை - இன்னும் சற்று நேரத்தில் மறையப்போகும் சூரியனின் பொன்னொளியோடு கலந்து அழகுடன் மிளிர்ந்தது. நான் புகைப்படம் எடுத்து முடிந்த தும், ''என்ன செஞ்சீங்க, சாமி?'' என்று கேட்டாள். அவள் புரிந்து கொள்ளும்படி விளக்குவது இய லாத காரியம் என்று எண்ணி, ''நாளைக்குச் சொல்லுகிறேன்'' என்றேன். அவள் மெல்ல நடந் தாள்.

அன்றிரவு எனக்குத் தூக்கம் வர நேரம் ஆகிவிட்டது. அன்று மாலை நடந்ததை லட்சுமியிடம் கூறினால் என்ன நினைப்பாள், எவ் வளவு சிரிப்பாள் என்றெல்லாம் நினைத்தபடியே தூங்கிப் போய்விட் டேன்.

**ம**று நாள் கண் விழிக்கும் போது நேரம் அதிகமாகிவிட்டது. அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வேண்டிய உப கரணங்களை எடுத்துக்கொண் டேன். வெயில் ஏறுமுன்பே மரடி மலைக்குக் கிளம்பிவிட்டேன். மரடி மலையில் போட்டோ எடுத்துவிட்டு, பிற்பகலில் திரும்பி வந்துகொண் டிருந்தேன். வழி நெடுகலும் புல் வெளியில் மாடுகள் மேய்ந்து கொண் டிருந்தன. உழவர்கள் வயல்களில் வேலை செய்துகொண் டிருந்தார்கள். மாட்டுக்காரச் சிறுவன் ஒருவன் தெம்மாங்கு பாடிக்கொண் டிருந்தான். முந்திய நாள் மாலை நிகழ்ச்சி என் நினைவில் எழுந்தது. சென்னம்மாவை நினைத்தவுடன் அந்தப் பட்டிக்காட் டுப் பெண்ணின் கபடமற்ற அந்த மென்னகை என் நினைவுத் திரை யில் தோன்றி மறைந்தது. பள பளக்கும் குடங்களைச் சுமந்தபடி ஒய்யார நடை போட்டுச் சென்ற அந்தப் பெண்ணின் அழகு என் கண்முன் நடம் புரிந்தது. சென் னம்மா அந்த வீட்டு எஜமானின் மகளாகத்தான் இருக்க வேண்டும் என்பது என் ஊகமே தவிர, உண்மை தெரியவில்லை. அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் உந்தியது. என்னுடன் வந்த வழி காட்டியை, ''உன் எஜமான் வீட் டில் இருக்கும் பெண் யாரப்பா?'' என்று விசாரித்தேன். ''எந்தப் பெண், சாமி?'' என்றான் வழி காட்டி. ''அதுதான், சென்னம்மா யாருன்னு கேட்டேன்'' என்றேன். என் கேள்வியைக் கேட்டதும் அவன் குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே, ''எதுக்கு, சாமி?'' என்றான். எனக்கு மிகவும் வெட்க மாகப் போய்விட்டது. 'இவன் என் கேள்வியைத் தவறாக எண்ணி விட்டானே!' என்று ஒரு கணம் என் மனத்தில் கலவரம் உண் டாயிற்று. லட்சுமி இல்லை என்றால் என் வாழ்வே இல்லை என்பது இந்த மூடனுக்கு என்ன தெரியும்? ''ஒண்ணுமில்லேப்பா; சும்மாதான் கேட்டேன். ஏன்? கேட்டது தப்பா?'' என்றேன். ''அதுக் கில்லே, சாமி; அவங்க என் எஜமா னர் கரியப்பாவின் மகள்தான்'' என்றான். இன்னொரு கேள்வி என் நாக்கு நுனிவரைக்கும் வந்து பின் வாங்கியது. யாரென்று கேட்ட தற்கே தப்பாக எண்ணியவன், 'கல்யாணமாகியிருக்கிறதா?' என்று கேட்டால் என்னதான் நினைப்பானோ!

வீட்டுக்கு வந்ததும் குளித்து, உடை மாற்றிக்கொண்டு, உண வருந்தினேன். முன்னாள் மாலை பிடித்த சென்னம்மாவின் புகைப் படத்தை 'ப்ரிண்ட்' எடுத்தேன். புகைப்படம் அழகாக வந்திருந் தது. அவள் குடும்பத்தார் அதைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தார்கள்.

பகலில் நேரம் கழித்துச் சாப்பிட்டதால் இரவில் பசி எடுக்கவில்லை. சாப்பாடு வேண்டாம் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்திவிட்டேன். ஆனால் தூக்கமும் வருவதாக இல்லை. பொழுதைப் போக்கச் சிறிது நேரம் உலாவி வரச் சென்றேன். திரும்பும் போது மணி ஒன்பது. விளக்கு ஏற்றிவிட்டுப் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டு ஏதோ நாவலைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினேன். அப்போது அறையின் கதவு லேசாக அசைந்தது. காற்றில் ஆடுகிறது என்று எண்ணி, மேலும் நாவலில் ஈடுபட்டேன். இப்போது லேசாக யாரோ கதவைத் தட்டியது மாதிரி தோன்றியது. படுத்தபடி, ''யாரது?'' என்று கேட்டேன். பதில் இல்லை. ஒரு கணம் பொறுத்து மறுபடியும் லேசாகக் கதவை யாரோ தட்டும் ஒலி வந்தது. எழுந்து உட்கார்ந்து, ''யாரது?'' என்றேன். கை வளைகள் ஒலித்தன. அதன் கூடவே மிக மெல்லிய குரலில், ''நான்தான், சென்னி'' என்று பதில் வந்தது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த நேரத்தில் இவளுக்கு என்னிடம் என்ன வேலை? 'எப்படியிருந்தாலும் போய் விசாரிக்கலாம்' என்று முகத்தை வெளியே நீட்டி, ''என்னம்மா?'' என்றேன். அவள் உடம்பின்மேல் அறை விளக்கின் வெளிச்சம் விழுந்துகொண்டிருந்தது. அவள் கையில் ஒரு தட்டு. அதில் நான்கைந்து வாழைப் பழங்களும், ஒரு கிண்ணம் பாலும், கொஞ்சம் சர்க்கரையும் இருந்தன. அவள், ''இன்னிக்கு நீங்க சாப்பிடலேயேன்னு பழம் கொண்டுவந்தேன்'' என்றாள். அப்போது எனக்கும் கொஞ்சம் பசியெடுக்க ஆரம்பித்திருந்தது. ''சரியம்மா, சந்தோஷம்'' என்று சொல்லி, தட்டை அவளிடமிருந்து வாங்கிப் படுக்கை மேல் வைக்கப் போனேன். சென்னம்மா என் பின்னாலேயே வந்தாள். ''இனி ஒண்ணும் வேண்டாம்மா; நீ போ'' என்றேன். அவள் சிரித்துக்கொண்டே, ''நான் இருந்தா நீங்க திங்கக்கூடாதா?'' என்றாள். நான், ''ஓ, அதுக்கென்ன? தின்னாப் போச்சு. அதுக்கில்லே நான் சொன்னது, எனக்கு ஒண்ணும் வேண்டாம்.. இந்த நேரத்திலே ஒருத்தியாக நீ என்கூட இருக்கிறது அவ்வளவு நல்லா....'' என்று இழுத்தேன். என் வார்த்தைகள் முடிவதற்குள் அவள் அறையின் கதவைச் சாத்தித் தாழ்ப்பாளும் போட்டுவிட்டாள். சென்னி என் அறையில் கால் எடுத்து வைத்ததிலிருந்து என் மனசில் மங்கலாக உருவெடுக்க ஆரம்பித்த எண்ணங்கள் சிறிது சிறிதாக ஊர்ஜிதம் அடையலாயின. அவள் என் அறையின் கதவைச் சாத்தியதும் என் உடல் சூடேறி நடுங்கத் தொடங்கியது. பயத்தினால் முகத்தின் மேல் அரும்பரும்பாக ஒரே வேர்வைத் துளிகள் துளித்தன. எச்சிலையும் விழுங்க முடியாமல் தொண்டை வறண்டுவிட்டது. ''ஏம்மா கதவைச் சாத்திட்டே?'' என்று மிகவும் பிரயாசையுடன் சொல்லிக்கொண்டே, கதவைத் திறப்பதற்காக இரண்டடி எடுத்து வைத்தேன். சென்னம்மா விரைவில் நகர்ந்து கதவின்மேல் சாய்ந்து கொண்டு, புன்னகையைச் சிதறவிட்டாள். என் கால்கள் துவண்டு விழுந்தன. கொஞ்ச நஞ்சம் இருந்த சந்தேகமும் அகன்றது. அவள் எண்ணம் என் நெஞ்சில் ஆழமாகக் கீறி எழுதியதைப்போல் துலங்கியது. என் மனசுக்குள்ளேயே நினைத்துக்கொண்டேன், 'இவள்தானா கள்ளங் கபடில்லாத பட்டிக்காட்டுப் பெண்' என்று. என்னால் நிற்கவே முடியவில்லை. போய்ப் படுக்கையின்மேல் உட்கார்ந்து தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு யோசித்தேன்.

அன்றிரவு என்னைப் பாவ-வலையிலிருந்து காத்து மீட்டவள் என் லட்சுமிதான். அவளுடைய அன்பென்னும் கோட்டை என்னை வளைத்துச் சூழ்ந்திருந்தது. அழகு, குணம், அன்பு இந்த மூன்றில் எதற்காகவும் நான் அவளிடம் வைத்த பார்வையை வேறு யாரிடமும் செலுத்தத் தேவையே இல்லை. லட்சுமி மட்டும் என் மனைவியாக இல்லாதிருந்தால், நான்

அன்றிரவு சிக்கிய சூழ்நிலையில், பாதுகாப்பற்ற என் மனம் அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணிடம் ஈடு பட்டே யிருக்கும். இந்த நிகழ்ச்சி நடந்தபோது இன்னமும் நான் இளைஞன்தான். உடலுறுதியுள்ள வாலிபன். சென்னம்மாவுக்கோ வயசு இருபதுதான் இருக்கும். நடுத்தர உயரம். மாநிறம். அழகிய முகம். பொங்கும் பருவத்தின் பூரிக்கும் உடல்கட்டு. முகத்திலே எந்நேரமும் இயற்கையான புன்னகை. பொதுவாகச் சொன்னால், மனசைக் கொள்ளை கொள்ளத் தேவையான எல்லா அம்சங்களும் அவளிடம் நிறைந்திருந்தன.

நூற்றுக் கணக்கான எண்ணங்கள் ஒவ்வொன்றும் என் உள்ளத்தைப் படையெடுக்க ஆரம்பித்தன. என் தலை சுற்றத் தொடங்கியது. என்னிடம் இவளுக்குக் காதல் பிறந்திருக்குமானால், அதற்கு நான் எந்த விதத்திலும் பொறுப்பாளி அல்ல. இவள் அறியாதவள் அல்ல. இதென்ன பைத்தியக்காரத்தனம்..? ஆம், இது ஒரு விதமான வெறி! வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தால், என்ன நேரும்? என் மானம் போய்விடுமே! இவள்மீது என் மனத்தில் ஒரே வெறுப்புப் பிறந்தது. இவளுடைய நடவடிக்கை ஒவ்வொன்றின் போக்கும் இப்போது எனக்குப் புரியத் தொடங்கியது. முந்திய நாள் மாலை நடந்தவை எல்லாம் என் நினைவுத் திரையில் ஓடத்தொடங்கின. இவள் அந்த நேரத்தில் ஏன் என் பின்னாலேயே தோப்புக்கு வந்தாள்? தண்ணீர்க் குடம் - வெறும் பாசாங்கு - அதைத் தூக்க ஏன் என் உதவி கோரினாள்? அதைத் தூக்கி இவள் இடுப்பில் வைத்தபோது என் கையைத் தீண்டினாளே; ஏன்? அப்போது அது தற்செயலாகவே நிகழ்ந்தது போல் எனக்குத் தோன்றியது; ஆனால் உண்மை அது அல்ல. இன்னொரு சம்பவம்: இவள் முதலில் குடத்தை எடுப்பதற்காகக் கீழே குனிந்த போது, இவளுடைய மேலாக்கு நழுவியது. இவளை நான் அந்தக் கோலத்தில் கண்டபோது, இவள் முகத்தில் வெட்கத்தின் ரேகை ஏதும் படரவில்லை. குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு சற்றுத் தாமதித்தே மேலாக்கைச் சரிப்படுத்திக் 'கொண்டாள். இந்த எதையும் அப்போது நான் விகல்பமாக நினைக்கவில்லை; இந்த ஒவ்வொன்றும் இவள் விரித்த வலையில் ஒவ்வொரு கண்ணி என்று அறியாமல் போனேன். எப்படி இந்த இக்கட்டிலிருந்து வெளியேறுவது? கோபம் பயன்படாது. உபாயமாகத்தான் இவளை வெளியேற்ற வேண்டும் என்று எண்ணிக்கொண்டேன். சென்னம்மா இன்னமும் கதவின்மேல் சாய்ந்துதான் நின்று கொண்டிருந்தாள்.

மெதுவாக, ''சென்னம்மா'' என்று அழைத்தேன். அவள், ''ஏன், சாமி?'' என்று கேட்டுக்கொண்டே இரண்டடி எடுத்து வைத்து என் படுக்கையின் அருகே வந்து நின்றுகொண்டாள்.

''உட்கார்.''

அவள் என் படுக்கையின் மேலேயே உட்கார்ந்துவிட்டாள். நான் கொஞ்சம் நகர்ந்துகொண்டேன்.

''சென்னம்மா, நீ இப்படிச் செய்யலாமா?''

''எப்படி, சாமி?''

''இப்படி நள்ளிரவிலே திருட்டுத்தனமாக..'' என்னால் இதற்கு மேல் பேச முடியவில்லை.

''திருட்டுத்தனமா வரல்லே, சாமி.''

''அப்படியென்றால்?....''

பதில் இல்லை. நான் சொன்னேன்: ''இங்கே பாரு: உங்க வீட்டு மனிதர்களுக்குத் தெரிந்தால் எனக்கும் உனக்கும் வெட்கக்கேடு!''

''அவங்க ஒண்ணும் சொல்ல மாட்டங்க, சாமி.''

எனக்கு ஒரே வியப்பாகப் போய்விட்டது. மறுபடி கேட்டேன்: ''என்ன சொன்னே?''

''அவங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்கன்னுதான் சொன்னேன்'' என்றாள், அழுத்தமாக.

''இங்கே பாரு: அவங்க சொல்லட்டும், சொல்லாது போகட்டும்; இதுக்கு நான் சம்மதப்பட மாட்டேன். எனக்குக் கல்யாண

மாயிருக்கு. இன்னொருத்தன் பெண் சாதியை நான் கெடு..''

''ஐயோ, சாமி! ஏன் இப்படிச் சொல்றீங்க? எனக்குக் கல்யாணமே ஆகல்லே - நான் பசவி.''

''என்ன? என்ன சொன்னே?''

''என்னைப் 'பசவி' விட்டுட்டாங்க, சாமி.''

''பசவி!.. பசவி!!.. அப்படீன்னா?''

''சாமிக்கு விட்டிருக்காங்க.''

நான் கேட்டிருக்கிறேனே தவிர, சாமிக்கு விட்ட 'பசவி' எவளையும் நேரில் கண்டதில்லை. அதைப் பற்றி விவரமாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது.

''சாமிக்கு விட்டிருக்காங்களா? யாரு?''

''எங்க அப்பனும் ஆயாளும்.''

''ஏன் விட்டாங்க?''

''சாமி, நான் எட்டு வயசுக் கொழந்தையா இருந்தப்ப, ரொம்பக் காயலாவாப் படுத்துட்டேன். எங்கப்பனும் ஆயாளும் மரடி மலைச் சாமிக்கு வேண்டிக்கிட்டாங்க, எனக்கு நல்லா ஆயிட்டா, அந்தச் சாமி பேருலே என்னெப் 'பசவி' விடறோமின்னு. அப்புறம் எனக்குத் தேவலையாப் போச்சாம்!''

''அப்படீன்னா நீ கல்யாணமே பண்ணிக்க மாட்டே?''

''மாட்டேன், சாமி.''

''அப்பொ இப்படியே இருப்பியா?''

''ஆமாம், சாமி.''

''தாசியெப் போலே!''

என்னுடைய இந்த வார்த்தைகள் அவள் நெஞ்சில் ஈட்டிபோல் பாய்ந்திருக்க வேண்டும். ஒரு கணத்தில் அவள் புருவங்கள் நெரிந்தன; அதரங்கள் அதிர்ந்தன. என்னை வெட்டிவிடுவது போன்ற பார்வையுடன், ''சாமி, அப்படிச் சொல்லக்கூடாது!'' என்றாள்.

சிரமப்பட்டு எச்சிலை விழுங்கியபடி, ''எப்படிச் சொல்லக் கூடாது?'' என்றேன்.

''நாங்க தாசிங்க இல்லே. தெரிஞ்சுக்குங்க.''

''அப்படி யில்லாமெ வேறென்னவாம்? நீ எல்லாரையும் போல் கல்யாணம் பண்ணிக்கிட்டு, குடும்பப் பெண்ணா இல்லாமெ, நடு ராவுலே வந்து....''

''சாமி, உங்களுக்கு இன்னும் தெரியல்லே? 'பசவி'ங்க கல்யாணம் கட்டக்கூடாது.''

''ஏன் கூடாது?''

''வேண்டுதலையை நிறைவேத்தணுமே, அதுக்குத்தான், சாமி. ஒருத்தனைக் கட்டிக்கிட்டா உங்களைப் போலவங்களுக்குப் பணிவிடை எப்படிச் செய்ய முடியும்?''

''சரி, இன்னொருத்தனுக்குச் சேவை ஏன் செய்யணும்?''

''பின்னே, வேண்டுதலையைச் செலுத்த வேணுமா?''

''இப்படியா செலுத்தறது, சாமி பேரிலே தாசித் தொழில் செய்துக்கிட்டு?''

அவள் புருவத்தை நெரித்து, ''சாமி, அந்தப் பேச்சு மட்டும் எங்கிட்டே, சொல்லாதீங்க - சொல்லாதீங்க! நாங்க தாசிங்க இல்லே, சாமி; தாசிங்க இல்லே. தாசிங்களுக்குப் பணத்தாசை, சாமி. அவங்க யாரின்னும் பார்க்க மாட்டாங்க. அவங்களுக்கு வேண்டுதலையும் இல்லே. அது அவங்க தொழில்.''

''நீங்க?..''

''நாங்க, பணம் கிணம் தொட மாட்டோம், சாமி. யார் யாரையோ சேத்த மாட்டோம். உங்களப்போல மரியாதைக்காரங்க, நல்ல மனுஷங்க வந்தா, அவங்க சேவை செஞ்சு வேண்டுதலையைச் செலுத்தறோம். எங்களைத் தாசின்னு மட்டும் சொல்லாதீங்க, சாமி.''

''அப்படீன்னா உன் சேவை உன் அப்பா அம்மாவுக்குத் தெரியாதெ இருக்குமா?''

''பின்னே? அவங்கதானே வேண்டிக்கிட்டவங்க. அவங்களுக்குத் தெரியாமே இருக்குமா?''

''சரி, அவங்க என்னமோ அனுப்பிட்டாங்க. ஆனா நான் இதுக்குச் சம்மதிப்பேன்னு எப்படி அவங்களுக்குத் தெரியும்? எந்த ஆதாரத் தின்பேரிலே அவங்க உன்னை எங்கிட்ட அனுப்பினாங்க?''

இந்தக் கேள்விக்கு அவளிடமிருந்து உடனே பதில் வரவில்லை.

சிறுநகை ஒன்றை இதழில் தவழ விட்டுக்கொண்டே, கழுத்தைச் சாய்த்து, கடைக்கண்ணுல் என்னை நோக்கியபடி, ''பின்னே, நீங்க எங்க வேலைக்காரனெக் கேட்டீங் களாமே - நான் யாரு, என்ன, ஏதுன்னுட்டு'' என்று வெட்கத் துடன் அவள் சொன்னுள்.

எனக்கு இப்போது எல்லாம் விளங்கிவிட்டது; நான் அந்த வழி காட்டியைக் கேட்டபோது அவன் கேலியாகச் சிரித்து, ''ஏன், சாமி?'' என்று கேட்டதன் விபரீதம் விளங்கிவிட்டது. ''அட தெய் வமே!'' என்று வாய்க்குள் சொல் லிக் கொண்டேன்.

''ஆமாம், சென்னம்மா; சும் மாத் தெரிஞ்சுக்கலாம்னுதான் கேட்டேன். அவ்வளவுதான். என் லட்சுமி பேரில் ஆணை: வேறெந்த விதமான ஆசையும் எனக் கில்லை.''

''ஐயோ! விடுங்க, சாமி. இப்ப என்ன ஆயிடிச்சி? இதுக்கெல்லாம் ஆணை கீணை வைக்காதீங்க!''

''அப்படியில்லே, சென்னம்மா. போன உயிர் திரும்பி வருமா?''

''இல்லே, வராது.''

''அப்படின்னுக் கேளு: ஒரு பெண்ணுக்கு மானந்தான் உயிர். மானம் இல்லாத ஒரு பெண், நாயைவிட மட்டமானவள். நீயும் ஒரு பெண்தான். மானம் இல்லாமெ வாழக்கூடாது. மானங் கெட்ட பெண்ணுக்கு நரகத்திலே கூட எடமில்லேன்னு சொல்வாங்க, தெரிஞ்சவங்க.''

''சாமி, நீங்க சொல்றது கல்யாணமாகிப் புருஷன் கூட இருக்கிறவங்களுக்குத்தான். அவங்க எங்களேப்போலே நடந்துக் கிட்டா அவங்களைச் சாதியிலிருந்து நீக்கிடுவாங்க. எங்களைச் சாமிக்கு விட்டிருக்காங்க. எங்களுக்கு உங்களைப் போலே நல்லவங்கசேவை தான்..''

''ஐயோ, சென்னம்மா! உனக் குத் தெரியாது. இதோ பார்: ஒரு பெண் மானங் கெட்டா, அதைச் சாமி ஒப்புமா? சாமிக்கு வேண்டிக் கிட்டிருந்தா அந்தச் சாமிக்குச் சேவை செய். அதை விட்டுவிட்டு இப்படி மானம் இல்லாமெ வாழ் வதா?''

''சாமி, உங்களெப்போல மரியாதைக்காரங்கதான் எங்க கடவுள்; உங்க சேவை செஞ்சா அதுவே எங்க புண்ணியம்.''

அவள் வார்த்தைகளைக் கேட்டு என் இருதயத்தின் அடித்தளத்தி லிருந்து ஒரு பெருமூச்சு வெளிப் பட்டது. ஐயோ தெய்வமே! உன்னைச் சந்தோஷப்படுத்த உன் பெயரிலே எத்தனை பாவமும் அநியாயமும் நிகழ்கின்றன!

கொந்தளித்த உணர்ச்சிகளால் என் நெஞ்சம் பிளந்துவிடும்போல் ஆகிவிட்டது. நெடுமூச்செறிந் தேன். சென்னம்மா பேசாமல் மேலாக்கின் நுனியை விரலில் சுற்றிக்கொண் டிருந்தாள். என் பெருமூச்சைக் கேட்ட அவள் என்னைத் திரும்பி நோக்கினுள். அவள் முகத்தில் அப்போது ஒரு விதமான கலவரம் தோன்றியது. இந்த ஒன்றும் அறியாப் பேதை, சமூகத்தின் கொடிய வழக்கம் ஒன் றுக்கு இரையாகிவிட்டாளே என்ற எண்ணம் என் வயிற்றில் ஒரு வித மான வேதனையை உண்டு பண்ணி யது. அதனுல் என் கண்களும் துளித்தன.

''சென்னம்மா, உன்னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண் டும்'' என்று சொல்லியபடி, என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். சென்னம்மா என் கண்ணீரைக் கண்டுகலக்கம் அடைந் திருக்க வேண்டும். என் அருகே நகர்ந்து வந்தாள். அப்படி அவள் என்னருகே நகர்ந்து வரும்போது, எனக்கு ஒதுங்க மனம் வரவில்லை. அவள் மனமாரப் பாவம் செய்பவ ளாக இல்லை. அறியாமை என்ற மாசு அவள் உடலைத் தீண்டியிருக்க லாம். அவள் உள்ளமோ தாமரை இலை நீர்த்துளிபோல் பரிசுத்தமாக இருந்தது. என் கண்ணீரால், அவளுடைய உடல் மாசைக் கழுவ வேண்டுமென்று தோன்றியது. மெல்ல அவள் கைகளைப் பிடித்துக் கொண்டேன். என் உடலில் சிறிது நடுக்கம் கண்டது. கையை விடா மல் அப்படியே அவள் விரல்களைத் தடவிக்கொண்டே, ''சென்னம்மா!

சென்னம்மா'' என்று மெதுவாகக் கூப்பிட்டேன். இரக்கம் கனிந்த என் அன்பு அவள் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. அவள் இன்னமும் கிட்ட நெருங்கித் தலையைக் கவிழ்த்துக்கொண்டு மிகவும் மெல்லிய குரலில், ''என்ன, சாமி?'' என்று கேட்டாள். அவள் முகத்தில் ஏதோ ஒரு விதமான கலவரம் தென்பட்டது. அவள் முகத்தை நோக்கியபடி நான் கேட்டேன்: ''இதோ பாரு, சென்னம்மா. நான்தான் உன் கடவுள் என்று நீ சொல்லவில்லையா?''

''ஆமாம், சாமி; நீங்க என் கடவுள்தான்!''

''அப்படீன்னு, நான் சொல்வதை நீ கேட்கணும்.''

''நான் உங்க அடியாள். சொல்லுங்க, சாமி.''

''நீ இனிமே இப்படிப்பட்ட பாவம் செய்யவே கூடாது, தெரியுமா?''

''அப்படீன்னு, வேண்டுதலே?''

''ஐயோ! அந்த வேண்டுதலையின் தலையிலே இடி விழ..பாரு இன்னிக்கு நான்தான் கடவுள்னு சொன்னே. இதுக்கு முன்னே நீ யார் சேவையும் செஞ்சதில்லையா?''

சென்னம்மா பதில் சொல்லவில்லை; தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். ''இதோ பாரு. இதுக்கு முன்னாலே நீ யார் யார் சேவையோ செஞ்சிருக்கே. இன்னிக்கு நான்தான் கடவுள் என்று சொல்லிக்கிட்டு என் சேவை செய்யறத்துக்கு வந்திருக்கே. இது ரொம்பப் பாவம். கொஞ்சம் யோசிச்சுப் பாரு. உனக்கும் தாசிக்கும் என்ன வித்தியாசம்? அது அவளுக்குத் தொழில். உனக்குக் கடவுள் எதிலும் குறை வைக்கல்லே. ஆனால் ரெண்டு பேர் செய்யற பாவமும் ஒண்ணுதான். கடவுள் என்னிக்கும் இந்தப் பாவத்தை மன்னிக்கமாட்டார்!''

சென்னம்மா எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டாள். முதலில் தோன்றிய பிரமை, கலவரத்தின் சின்னம் — அவள் முகத்திலிருந்து விலகியது. சிறிது சிறிதாக முகம் வாடியது. உடல் குன்றியது. விழிகள் நிலத்தில் பதிந்தன. மெல்ல அவளுடைய கைகளை உலுக்கி, ''சென்னு!'' என்று கூப்பிட்டேன். நிமிர்ந்து என்னை நோக்கினாள். அவள் பார்வையில் வழி தடுமாறிக் கொண்டிருந்த குழந்தையினுடைய திக்கற்ற நிலையின் சாயை நிழலாடியது. என் சொற்கள் நியாயம் என்பதை அவள் தெளிவாக உணர்ந்திருக்க வேண்டும்.

''சென்னு, நான் சொன்னது சரிதானே?'' என்று கேட்டேன். சென்னம்மா வாய் திறக்கவில்லை. நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவள் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் பொலபொல என்று உதிர்ந்து அவள் கன்னங்களில் உருண்டோடின.

நெடுநேரம் வரைக்கும் அவள் அழுதுகொண்டே இருந்தாள். நான் அவளைத் தேற்றி, ''இதோ பார், சென்னு: உன்னைப் பார்த்தா எனக்குக் கோவமோ, அருவருப்போ இல்லவே இல்லை. சொல்லு, எனக்குக் கோவமா?'' என்றேன்.

மிக நைந்த குரலில் அவள் சொன்னாள்: ''இல்லே, சாமி!''

''சரி, அப்படீன்னு, என் நெஞ்சு மேலே கை வைத்துச் சொல்லு, இனிமே இந்த வேலை செய்வதில்லேன்னு.''

சென்னம்மா என் மார்பில் கை வைத்தாள். கபடமற்ற அவள் பார்வை என் கண்களை ஊடுருவி என் நெஞ்சில் இறங்கியது. நைந்த பார்வை; நைந்த குரல். நடுக்கத்தோடு சொன்னாள்: ''தேவா, இனிமே இந்த வேலை செய்யவே மாட்டேன்!''

என் நெஞ்சிலிருந்து பெரிய பாறாங்கல் ஒன்றை இறக்கியது போல் ஆயிற்று.

பிறகு அவள் போய்விட்டாள். நானும் ஒருவித மகிழ்ச்சியுடன் நிம்மதியாய்த் தூங்கினேன்.

இருந்தாற்போல் இருந்து விழிப்பு ஏற்பட்டது. பார்த்தால் — கரியப்பா! அவர்தான் கூவி எழுப்பியவர். உள்ளே எப்படி வந்தாரோ தெரியவில்லை. இரவு கதவைத் தாழ்ப்பாள் போட மறந்துவிட்டேன் போல் இருக்கிறது!

''என்ன, ஐயா'' என்று கண்களைத் தேய்த்துக்கொண்டே எழுந்தேன்.

''ஐயோ! என்ன சொல்லட்டும், சாமி! . . ஐயோ! என் மகளே! என் சென்னு! . .''

பேச்சை முடிக்காமல் அவர் கதறினர். ஒன்றும் புரியாமல், நான் திகைப்பும் பீதியும் அடைந்தேன். அதற்குள் இன்னும் யாரோ வந்து, ''சாமி, சென்னம்மா தோட்டத்துக் கெணத்துலே விழுந்து . . .'' என்ருர்கள்.

படுக்கையிலிருந்து எழுந்து அப்படியே பைத்தியக்காரனைப் போல் தோட்டத்துக் கிணற்றுப் பக்கம் ஓடினேன். பத்துப் பன்னிரண்டு பேர் கும்பலாக அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். இன்னமும் உயிர் இருக்குமோ என்னும் ஆசையேதான். ஆசை! பைத்தியக்காரத்தனமான ஆசை! இரவே அவள் கிணற்றில் விழுந்திருக்கவேண்டும்! போது விடிகிறவரைக்கும் உயிர் இருக்குமா? அருகில் போய் நின்றுகொண்டேன். மற்றவர்கள் வழி விட்டார்கள். ஐயோ தெய்வமே! என்ன காட்சி! நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன்.

எனக்கு நினைவு வந்தபோது சவத்தினருகே போனேன். உயிர்ச்சின்னம் ஏதாவது தென்படுகிறதா என்று ஆசையுடன் குனிந்து பார்த்தேன். அவள் உடலில் எரிந்துகொண்டிருந்த நெருப்பு அணைந்துவிட்டது. அமுதம் சுண்டி மிஞ்சியிருந்த வெறும் விஷ ஓடு! புண்ணியம் பாவத்திலிருந்து விலகிவிட்டது!

அன்று மாலையே நான் அந்தக் கிராமத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன். புறப்படுவதற்கு முன் சென்னம்மாவின் போட்டோவை அவர்கள் வீட்டிலேயே விட்டு வந்தேன். அந்த அபூர்வமான பெண்ணை - கள்ளங் கபடமற்ற உத்தமியை - இழந்து தவித்துக்கொண்டிருந்த இவர்களுக்கு, அந்த நிழலா அமைதி தேடித் தரப் போகிறது?

போலீஸார் வந்து என்னவோ விசாரித்து, 'தவறிக் கிணற்றில் விழுந்து சாவு' என்று பதிவு செய்துகொண்டு விட்டார்கள். ஆனல், அவள் சாவுக்கு நானே பொறுப்பாளி! நானே கொலைகாரன்! நான் சொன்னதெல்லாம் அவள் மனத்தில் ஆழப் பதிந்திருக்க வேண்டும். 'இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல்' என்று அவள் கருதியிருக்கவேண்டும். நான் அவளை என் அறையிலிருந்து வெளியேற்றியபோது, அவள் நெஞ்சத்தில் சாகவேண்டுமென்னும் எண்ணமே நிறைந்திருக்கவேண்டும். இந்த எண்ணம் என் நெஞ்சைப் பிளந்தது. அந்த வேளையில் அவளை நான் வெளியே அனுப்பாதிருந்திருந்தால், ஒருகால் அவள் உயிரோடு இருந்திருப்பாளோ என்னவோ! ஐயோ! நானே கொன்றது போல் ஆகிவிட்டதே!

நாளைக்கு ஊர் போய்ச் சேர்ந்துவிடுவேன். இந்தக் கதையைக் கேட்டால் என்ன சொல்வாளோ என் லட்சுமி!

[ மொழிபெயர்த்தவர்: பாமா சிவராம் ]

## பொய்க் கண்

''அந்த ஆள் பொய்க்கண் வைத்துக்கொண்டிருக்கிருன்!''

''அதை அவன் உன்னிடம் சொன்னனு?''

''இல்லை; நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அது வெளிவந்துவிட்டது.''

—'கொலம்பியா யூனிவர்ஸிட்டி ஜெஸ்டர்'



# அன்னை

நோபல் பரிசு பெற்ற
இத்தாலிய நாவல்

மூலம்:
கிரேஸியா டெலடா

தமிழ்:
தி. ஜானகிராமன்

காப்பிரைட்: தமிழ்ச் சுடர் நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை-5.
விலை: ரூ. 3/75.

# அன்னை

★

இன்றும் பால் வெளியே கிளம்புவான் போல் இருக்கிறது. இருள் கவிந்துவிட்டது.

பக்கத்து அறையில் இருந்தாள் அன்னை. சந்தடி இல்லாமல் அங்குமிங்கும் அறையில் அவன் உலாவுவது நன்ருய்க் கேட்கிறது. இருப்புக் கொள்ளாமல் துடிக்கிருன். 'அம்மா விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தவுடன் புறப்பட்டுவிடலாம்' என்று இருக்கிருனே என்னவோ!

சில நாளாகவே இது நடந்துகொண்டுதான் இருக்கிறது. பெண்கள் செய்கிற காரியங்களெல்லாம் செய்துகொண் டிருக்கிருன் பால். கண்ணுடிக்கு முன்ஞல் நின்று அழகு பார்த்துக்கொள்வது; நகங்களைக் கழுவிக் கழுவி, துடைத்துத் துடைத்துப் பாலிஷ் செய்துகொள்வது; தலையைச் சற்றைக்கொரு தரம் வாரிக்கொள்வது - எல்லாம்! தலைமயிர்கூட நீளமாக வளர்ந்திருந்தது. வளர்ந்து, பாதிரிகளுக்கு இருக்குமே பின்னந்தலையில் க்ஷவரம் செய்த வட்டம், அந்த வட்டத்தைக்கூட மறைத்துவிட்டது. இதோடு நிற்கவில்லை. வாசனைகள் வேறு! மேலே வாசனை; உடையில் வாசனை; பல் தேய்க்கக் கமகம வென்று மணக்கும் பல்பொடி; புருவ மயிருக்கு வாசனை. அதைக்கூட அழகாகச் சீவி விட்டுக்கொண் டிருந்தான் பால்.

இவ்வளவும் அவள் கண்முன் எழுந்தது. அவளுக்குப் பால் செய்கிறதெல்லாம், இடையில் சுவரே இல்லாததுபோல, தெளிவாகத் தெரிந்தது.

வெளியே கிளம்பிக்கொண்டு தான் இருந்தான் அவன். சந்தேகமில்லை. கதவைத் திறந்தான். சற்று நின்று கவனித்தான்.

சந்தடி செய்யாமல் பால் மாடிப்படியில் இறங்கிக் கீழே போஞன். கதவைத் திறந்து வெளியேறிவிட்டான். காற்று அவனைச் சூழ்ந்து கொண்டு மின்வெட்டின் வேகத்தில் தூக்கிச் செல்வதுபோல் இருந்தது.

அவன் போன பிறகுதான் அவளுக்கும் எழுந்திருக்க முடிந்தது. விளக்கை ஏற்றிஞள்.

பேயை முறியடித்தாக வேண்டும். ஆவேசம் உந்த மாடிப்படி உச்சியின் சவுக்கத்தில் விளக்கை எடுத்து வைத்து, இறங்கி, அவளும் வெளியே புறப்பட்டாள்.

நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் யாரையோ பார்க்கப்போகிருன் என்ற ஒரு நம்பிக்கையுடன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டது தாயின் நெஞ்சு. ஆஞல் கண்ணுல் கண்ட பிறகும் கூடவா இந்தப் பொய்ச் சமாதானம் நிற்கும்? பால் அதோ ஓடுகிருன். பேய் அவனை உந்துகிறது. அதோ அந்த வீட்டை நோக்கி அவனை உந்திக்கொண்டு செல்கிறது.

அந்த வீட்டில் யாருமில்லை - ஒரு பெண்ணைத் தவிர. இளம் பெண். இளமையின் வாளிப்பும் ஆரோக்கியமும் நிறைந்த பெண். தன்னந்தனியாக வாழும் பெண்.

சாதாரணமாகப் போகிறவர்கள் வாசல் வழியாகத்தானே போவார்கள்! இவன் அதை விட்டு, தோட்டத்துச் சின்னக் கதவை நோக்கி விரைந்தான். கதவு திறந்தது. அவன் புகுந்தவுடன் மூடிக்கொண்டது. கரிய வாய் ஒன்று அவனை விழுங்கிஞற்போல இருந்தது.

பொறி மாதிரி மைந்தனை விழுங்கிய அந்தத் திட்டிக் கதவைப் பார்த்துவிட்டுத் தாய் நகர்ந்தாள். சற்று நேரம் ஒரு நிச்சயத்துக்கும் வராமல் அசைவற்று நின்று, மீண்டும் வீட்டைநோக்கித் திரும்பிஞள்.

பெரிய குருவிடம் சென்று கதறுவதுபோல் கற்பனை செய்துகொண்டாள்: ''சமீப காலம் வரையில் குழந்தை மாதிரி பால் வாழ்ந்து வந்தான். படிப்பது, பிரார்த்திப்பது இவைதான் அவனுக்குத் தெரி

கிரேஸியா டெலடா உலக இலக்கியத்திலே இடம் பெற்ற ஒருத்தி. அவள் பிறந்தது 1872 - இல்; இறந்தது 1926 - இல். பதினேந்தாவது வயசிலே முதல் நாவல் எழுதி, இறக்குமுன் 56 நாவல்கள் எழுதிவிட்டாள். நோபல் பரிசு பெற்ற இந்த நாவலை மொழிபெயர்த்த தி. ஜானகிராமன், தாமே அற்புதமான சிறுகதைகள் எழுதிப் புகழ் பெற்றவர். எனவே, மொழிபெயர்ப்பும் அருமையாக அமைந்திருக்கிறது. தமிழ்ச் சுடர் நிலைய உரிமையாளர் ஸ்ரீ அ. கி. கோபாலன் இந்த மாதிரி உலக இலக்கியங்களைத் தொடர்ச்சியாய்த் தமிழில் வெளியிட்டு வருவது சிறந்த சேவையாகும்.

யும். தன் மக்களின் நன்மையே அவனுடைய லட்சியம். சில சமயம் குழல் ஊதுவான். ரொம்ப உற்சாக மான பிரகிருதி இல்லாவிட்டா லும், அமைதியும் நிதானமும் படைத்தவன். வேத புருஷர்களைப் போல, சாந்தியும் நிறைவும் கொண்டு ஏழு வருஷம் நாங்கள் வாழ்ந்துவிட்டோம். என் மகன் குடிக்க மாட்டான்; வேட்டையாட மாட்டான்; சுருட்டுப் பிடிக்க மாட்டான்; பெண்களைக் கண் ணெடுத்தும் பார்க்க மாட்டான். சேமித்திருந்த பணம் எல்லாவற் றையும் ஒதுக்கி வருகிறான், உடைந்துபோன பாலத்தைக் கட்டு வதற்காக. வயசு இருபத்தெட்டாகி றது. இப்பொழுது அவன் தலையில் சாபம் விழுந்துவிட்டது. ஒரு பெண் அவனைத் தன் வலையில் பிடித்துவிட்டாள். பிரபுவே, இங் கிருந்து எங்களை அனுப்பிவிடுங்கள்; என் பாலைக் காப்பாற்றுங்கள்.

''அவள், பணக்காரி, அழகி; தனியாக - தன்னந்தனியாக-இருக் கிறாள். அவளுக்குத் தம்பிகள், ஒரு தமக்கை எல்லாரும் உண்டு. ஆனால் அவர்களெல்லாம் கல்யாண மாகிப் பிள்ளை குட்டிகள் பெற் றுக்கொண்டு தூர தேசங்களில் வசிக்கிறார்கள். அவள் மட்டும் சொத்தையும் வீட்டையும் பார்த் துக்கொள்வதற்காக இங்கே தங்கி விட்டாள். வெளியே போவதே இல்லை. கொஞ்ச காலத்துக்கு முன் வரையில் என் பாலுக்கு அவளைத் தெரியக்கூடத் தெரியாது. அவ ளுடைய தந்தை ஒரு மாதிரியான ஆசாமி. பணக்காரன். விவசாயி.''

பெண்ணின் வீட்டிலிருந்து புறப்பட்டு, அந்தப் புல்வெளியை அடைந்தான் பால். இன்ன தென்று சொல்ல முடியாத, உயி ருள்ள, பிசாசு போன்ற ஏதோ ஒன்று காற்றினூடே சலிப்பது போல் அவனுக்குப் பட்டது. அங்குமிங்கும் அவனை அலைக்கழித் தது அது; குளிரக் குளிர அடித்தது. காதலின் மேகக் கனவைக் கண்டு விட்டு வந்தவன் அவன். வீசி யடித்த காற்றில், கோட்டு நலுங்கி, அவன் உடம்பில் ஒட்டிக்கொண் டது. அந்தப் பெண் அவனை மெய்மறந்து ஆரத் தழுவி நின்ற நினைப்பு வந்து சிலிர்க்க அடித்தது.

பயங்கரமான - மகத்தான - ஒன்று தனக்குள்ளே பிறந்திருப் பதை அவன் உணர்ந்தான். நினைக்க நினைக்க உள்ளம் எழுச்சி யும் வெறுப்பும் கொண்டது. தான் அந்தப் பெண் ஏக்னிஸ்மீது சாமானியமான மண்ணுலகத்து ஆசையே வைத்திருப்பதையும், அந்த ஆசையில் பெருமை கொண்டு களிப்பதையும் இப்போதுதான் முதல்முதலாக அவன் தெளிவாக உணர்ந்தான்.

சற்று நேரத்துக்கு முன்வரை, இந்த அன்பு தெய்விகமானது

என்று தனக்குத் தானேயும் சொல்லிக்கொண் டிருந்தான். அது வெறும் பிரமை. ஆனால் முதல் முதலில் அவன்மீது கண்களை நாட்டி நிறுத்தியவள் அவள்தான். முதல் சந்திப்பிலேயே அவனுடைய அன்புக்கும் உதவிக்கும் அவை ஏங்கி நின்றன. கெஞ்சும் அந்தக் காந்தத்துக்குக் கொஞ்சங் கொஞ்சமாக அவன் பணிந்தான். கருணை அவனை இழுத்தது. அவளைச் சூழ்ந்திருந்த தனிமை, கடைசியில் இருவரையும் ஒன்று சேர்த்துவிட்டது.

கண்கள் சந்தித்ததும்; கைகள் ஒன்றையொன்று தேடிக் கோத்துக்கொண்டன. அன்றிரவு முத்தமிட்டுக் கொண்டார்கள். இத்தனை வருஷங்களாக அமைதியாக ஊர்ந்துகொண் டிருந்த அவனுடைய ரத்தம் இப்போது உருகியோடும் நெருப்பைப்போலக் கொதித்தது. சக்தியற்ற சதை, பணிந்து ஒரே சமயத்தில் வெற்றியும் தோல்வியும் பெற்றுவிட்டது.

''இருவரும் ரகசியமாக ஊரை விட்டு ஓடிப்போய் எங்கேயாவது வசிக்கவேண்டும்; அல்லது செத்துப் போய் விடவேண்டும்'' என்று அந்தப் பெண் சொன்னாள். அப்போதிருந்த போதையில் அவன் அதற்கு இணங்கிவிட்டான். மறு நாள் இரவு மீண்டும் சந்தித்து இதைப்பற்றி யோசித்து முடிவு செய்வது என்று இருவரும் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் வெளி உலகத்துக்கு வந்ததும், உடுப்புக்களை அடித்துப் போக முயன்ற காற்று, இந்தத் திரையை - ஏமாற்றத்தை - விலக்கிவிட்டன. கோயில் கதவின் எதிரில் மூச்சு ஒடுங்கி நின்றான் அவன். உடல் ஜில்லிட்டது. தான் நிர்வாணமாக நிற்பது போலவும், அடித்துப் போட்டாற்போல் துயின்ற கிராமத்து மக்கள், தான் ஆடையற்றுப் பாவம் நிறைந்து நிற்பதைக் கனவில் காண்பதுபோலவும் தோன்றிற்று அவனுக்கு.

வீட்டுக் கதவைத் திறந்த உடனேயே, அடுக்களையிலிருந்து வெளிச்சம் வருவதைக் கண்டான். சாப்பாட்டு அறை வழியாக முன் ஹால்வரை வந்தது ஒளி. கணப்பில் நெருப்பு அல்லது சாம்பல்தான் மிகுந்திருந்தது. அதன் அருகில், பிணம் காப்பதுபோல, உட்கார்ந்திருந்தாள் அன்னை.

''பால், உனக்காகத்தான் காத்திருக்கிறேன். எங்கே போய்விட்டு வருகிறாய்?''

''ஒரு நோயாளியைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று உடனே அவன் பதில் அளித்தான்.

''நீ எங்கே போயிருந்தாய் என்று எனக்குத் தெரியும். இரவு வேளையில் நீ எழுந்துபோவது என் காதில் விழாமலில்லை. இன்றிரவு உன்னைத் தொடர்ந்து வந்து நீ சென்ற இடத்தையும் பார்த்தேன். பால், இதென்ன காரியம்? நீ யோசித்துப் பார்த்தாயா?''

அவன் பதில் சொல்லவில்லை. காதில் விழாததுபோல் நின்றான். கண்ணை நிமிர்த்தி, அன்னை அவனைப் பார்த்தாள். உயரமாக, விறைப்பாக, சவம்போல் வெளுத்து, சிலுவையில் அறைந்ததுபோல் அசைவற்று அவன் நின்றான். பின் சுவரின்மீது அவனுடைய நிழல் பெரிதாக விழுந்திருந்தது. 'அவன் என்னைக் கோபித்துக் கொண்டு, தான் நிரபராதி என்று சொல்லிக்கொள்ள மாட்டானா?' என்று அவள் ஏங்கினாள்.

''என்ன அம்மா இது? சின்னப் பையனா நான்? எது கெட்டது, எது நல்லது என்று எனக்குத் தெரியாதா என்ன?'' என்று முரட்டுத்தனமாக அவன் பேசினான்.

''இல்லையடா, பால்; நீ செய்தது தப்பு என்று உனக்குத் தெரியவில்லை. தெரிந்தால் இப்படிப் பேசமாட்டாய்.''

''பின்னே எப்படிப் பேசுவது?''

''நீ இந்த மாதிரி இரையலாகாது. அந்தப் பெண்ணுக்கும் உனக்குமிடையே தப்பாக, முறை தவறான தொடர்பு எதுவும் கிடையாது என்று உறுதி சொல்ல வேண்டும். ஆனால் நீ அதைத் தான் சொல்ல மாட்டேன் என்கிறாய். அந்தராத்மா உன்னைத் தடுக்கிறது. சரி; நீ ஒன்றுமே சொல்லவேண்டாம். அதை இப்

போது கேட்கவில்லை நான். ஆனல் செய்கிற காரியம் சரியா என்பதைமட்டும் நன்ருய் யோசித்துப் பார். அது போதும்.''

பால் பதில் பேசவில்லை. நகர்ந்து அந்த அறையின் நடுவில் போய் நின்ருன், அவள் சொல்வதைச் சொல்லட்டும் என்று.

''பால், இனிமேல் எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை; சொல்ல விருப்பமும் இல்லை. ஆனல் தெய்வத்தினிடம் உன்னைப் பற்றிப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்.''

''போதும்'' என்று அவளை நோக்கிப் பாய்ந்தான் அவன், அடிக்கப் போவதுபோல. கண்ணில் தீப் பறந்தது: ''மகா புத்திசாலி! பேசாமல் இரு. என்னிடமோ வேறு யாரிடமோ இதைப் பற்றிப் பேச வேண்டாம். உன் மனத்தில் தோன்றியவற்றை உன்னேடேயே வைத்துக்கொள்.''

அவள் அசையாமல் சொன்னுள்: ''இல்லை. இதைப்பற்றி உன்னிடமும் சொல்லவில்லை; வேறு யாரிடமும் சொல்லவில்லை. அந்த வீட்டில் இனிமேல் அடியெடுத்துவைப்பதில்லை என்று சபதம் மட்டும் செய்து கொடு. இல்லாவிட்டால் இந்த ஊரை விட்டே போய்விடுகிறேன்; திரும்பியே வரவில்லை.''

அவன் நிமிர்ந்தான். தலை கிறுகிறுத்தது. 'கடவுளே அவள் வாயிலாகப் பேசுகிருர்; அவள் கேட்டதை யெல்லாம் வாக்களித்துவிடு' என்று, குருட்டு நம்பிக்கை அவனைத் தூண்டிற்று. அதே சமயத்தில் சொல் வெள்ளப் பெருக்கு எடுத்தது. பிழை யெல்லாவற்றையும் அவள்மீதே போட்டுவிடவேண்டும் என்று தோன்றியது; சொந்த ஊரிலிருந்து அவனை அவள் இங்கே இழுத்து வந்து, அவனுக்குப் பிடித்தமில்லாத வாழ்க்கையில் கொண்டு தள்ளியதைச் சொல்லி அழுதுவிட வேண்டும் என்று நெஞ்சு பறந்தது. ஆனல் பயன்? அவளுக்குப் புரியக்கூடப் புரியாது. சரி, சரி..கண் முன் எழுந்த தோற்றங்களை விரலால் ஓட்டிவிட்டு, அவளுடைய முகத்துக்கு எதிராகக் கையை நீட்டினுன். பிரிந்த தன் விரல்களுக்கிடையே ஒரே ஜோதி மயமாக அவனுக்குத் தோன்றியது.

''அம்மா, நான் இனிமேல் அந்த வீட்டில் நுழைவதில்லை. இது சத்தியம்.''

அவ்வளவுதான்; உடனே சமையலறையிலிருந்து வெளியே வந்துவிட்டான். எல்லாம் இதோடு முடிந்துவிட்டதாக ஓர் உணர்ச்சி எழுந்து ஆசுவாசம் அளித்தது. ஆத்மாவை ரட்சித்தாகிவிட்டது. ஆனல் சாப்பாட்டறையைக் கடக்கும்போது, சாவுக்கு அழுவதுபோல் தாயார் வாய் விட்டு அழுதது செவியில் விழுந்தது.

தள்ளாடிக்கொண்டே படுக்கை பக்கம் போனுன். உடுப்புக்களைக் கழற்றுமலே அந்தக் குறுகிய படுக்கையில் விழுந்தான். கரகரவென்று கண்ணீர்ப் பெருக்கெடுத்தது. தாயின் காதில் விழாதபடி - தன் காதிலேயே விழாதபடி - மௌனமாக அழுதான். ஆனல் இருதயம் உரக்க அழுதது. உள்ளே கிடந்து புழுங்கும் துக்கம் அவனைப் புரட்டி எடுத்தது.

''ஈசனே, என்னை உன் கரத்தில் ஏந்திக்கொள். இதை விட்டு என்னைத் தூக்கிச் சென்றுவிடு!''

இந்தப் பிரார்த்தனை அவனுக்கு உண்மையாக ஆறுதல் அளித்தது - துக்கக் கடலில் அகப்பட்டவனுக்கு விடுதலை என்ற தெப்பம் கிடைத்தது போல.

வருந்துவதும், காதலிப்பதும், ஜோடியைத் தேடி அடைந்து மீண்டும் வருந்துவதும் மனிதனின் இயல்பு. நல்லது செய்து நல்லதைப் பெறுவதும் தீமை செய்து தீமையை பெறுவதுந்தான் மனித வாழ்க்கை. ஆனல் இவ்வளவு சிந்தனையும் அவன் இருதயத்தை அழுத்திக் கொண்டிருந்த தாபத்தை விலக்கவில்லை. அந்த ஏக்கத்தின் உண்மையான பொருளை அவன் இப்போது அறிந்துகொண்டான்: சாவின் கசப்பும் கொடூரமும் அதில் தேங்கியிருந்தன. ஏனென்ருல், காதலையும் ஏக்கினிஸையும் துறப்பதென்ருல், உயிரையே துறப்பதாகத்தான் அர்த்தம். அவன் சிந்தனை இன்னும் சற்று ஆழ்ந்து உலாவிற்று: 'இதெல்லாம் வீணனது, பயனற்

றது. வேட்கையின் கண் இன்ப வெறி தணிந்ததும், ஆத்மா மீண்டும் உயர்ந்து, முன்னையும் விடத் தனிமைக்கு ஏங்குகிறது; தன்னைச் சுற்றி வளர்ந்திருக்கும் அழியும் உடலான சிறைக்கூடத்திலேயே மீண்டும் புகல் தேடுகிறது. அப்படி இருக்கும்போது, இந்தத் தனிமை எனக்கு என்ன கஷ்டத்தைக் கொடுத்துவிடப் போகிறது? இத்தனை வருஷமாக, வாழ்வின் சிறந்த பருவம் முழுவதும் நான் அதை ஏற்றுப் பொறுத்துக்கொள்ள வில்லையா? ஏக்னிஸோடு எங்கே யாவது ஓடிப்போய் அவளைக் கல்யாணம் செய்துகொண்டாலும், அங்கேயும் இந்தத் தனிமை என்னை விட்டுவிடுமா....?'

இருந்தாலும், அவள் பெயரை உச்சரிப்பதும், அவளோடு வாழலாம் என்று எண்ணுவதும் அவனை எழுச்சிகொண்டு துள்ளச் செய்தன. கற்பனையில் அவள் அருகில் அழகு முழுவதும் பரிமளித்து நிற்கக் கண்டான். ஓடை நீரில் தொங்கி வளைந்து கொடுக்கும் கொடியைப் போல், இழுத்த இழுப்புக்கு அவள் வருவதைக் கண்டான். அவள் காதோடு இனிமையாகப் பேசினான். குங்குமப் பூவைப்போல மணம் கமழ்ந்து சுடும் அவளுடைய கேசபாரத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். தலையணையைக் கடித்து, கீதங்களுக்கெல்லாம் கீதமான பாட்டைப் பாடினான்: 'நாளை உன்னிடம் வந்து விடுகிறேன். அன்னையும் ஆண்டவனும் வருந்தினால் என்ன? சபதம் செய்தேன், பச்சாத்தாபப்பட்டேன்; குருட்டு நம்பிக்கையும் பயமும் கொண்டேன். இப்போது எல்லாற்றையும் உதறிவிட்டு, உன்னிடம் வந்து விடுகிறேன்.'

தவறான பாதையில் காலை வைத்தாகிவிட்டது. அவனுடைய முன்னோர்களைப்போல - ஆடு மேய்த்து, மாவு யந்திரம் வைத்து வாழ்ந்த முன்னோர்களைப்போல - அவனும் இயற்கை உணர்ச்சிகளுக்கு வசப்பட்டவன். இப்போது அவை இழுத்தபடி போக முடியாததால் அவன் துன்புற்றான். தன்னை வாட்டிய நோய் என்னவென்று பழைய படியே மீண்டும் அவன் கண்டு பிடிக்க முயன்றான். அவனுடைய துக்கத்துக்குக் காரணம் இதுவே: அவன் மனிதன்; ஆனால் மனிதனுக்கு உரித்தான காதலும் இன்பமும் இயற்கையான பூர்த்தியும் நிறைந்த வாழ்க்கையை நடத்த முடியவில்லை. ஆனால்...இன்பத்தைச் சுவைத்ததும் மீண்டும் அச்சமும் தாபமும் வந்துவிடுகின்றன. ஆகவே, வாழ்க்கையில் பங்கு கேட்பது சதை அல்ல; ஆத்மாதான். அதுதான் சதைச் சிறையிலிருந்து தப்பியோடத் துடிக்கிறது. அவன் காதல் வசப்பட்ட பொன்னான கணங்களில், ஆத்மாதான் உயர்வது வழக்கம். ஆனால் திடீரென்று, எழுந்த சுறுக்கிலேயே, கூட்டுக்குள் விழுந்துவிடும். சிறைவாழ்வு முடிந்ததும் சதையை உதறிவிட்டு, முடிவற்ற பேரின்பமும் பரம்பொருளும் உள்ள இடத்துக்கு அது போகப் போகிறது என்பதற்கு அந்தக் கணப்பொழுது விடுதலையும் இன்பமுமே அத்தாட்சி.

துயருற்று, களைப்புற்று, அவன் புன்னகை பூத்தான். 'இந்த வேதாந்தங்களை எங்கே வாசித்தோம்?.. எங்கேயாவது வாசித்துத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால், எனக்குப் புதுக் கருத்துக்களைக் காணத் திறன் இல்லை. எப்படி இருந்தால் என்ன? உண்மை எப்போதும், யாருக்கும் உண்மைதான். எல்லா இருதயங்களும் ஒன்றுதானே? தான் மற்ற மனிதர்களிலிருந்து வேறுபட்டவன் என்றும், அவர்களை விட்டு வேண்டுமென்றே ஒதுங்கிக் கடவுளை அடையப்போவதாகவும் அவன் நினைப்பதுண்டு. 'இப்போது கடவுள், மீண்டும் என்னை மனிதரிடையே அனுப்பி, ஆசாபாச துக்கங்களில் தள்ளித் தண்டிக்கிறார் போல் இருக்கிறது. மீண்டும் நான் உயரவேண்டும். எனக்கு ஏற்பட்ட வழியிலேயே செல்லவேண்டும்' என்று எண்ணமிட்டான் பால்.

பூஜைக்காக இரண்டாவது மணி விடாமல் அலறி அலறி அவனை அழைத்தது. அவன் மறந்து வைத்துவிட்ட எதையோ தேடுவது

போல் அங்குமிங்கும் பரபரவென்று அலேந்து, கடைசியில் மேஜைமுன் அமர்ந்து எழுத ஆரம்பித்தான். 'குறுகிய வாயிலால் போங்கள்' என்று தொடங்கும் விவிலிய வசனங்களே நகல் எடுத்து, சிலுவைக் குறியிட்டுப் பின்பக்கம் எழுதினுன்:

''என்னே மறுபடியும் எதிர்பார்க்காதே; தயை செய். ஏமாற்றத்தின் வலேயில் நாம் ஒருவருக்கொருவர் சிக்கிவிட்டோம். நாம் விடுதலே பெறவேண்டுமானுல் - பாதாளத்தில் விழாமல் தப்பவேண்டுமானுல்- கொஞ்சங்கூடத் தாமதமில்லாமல் இந்த வலேயிலிருந்து அறுத்துக் கொண்டு விடவேண்டும். நான் இனி உன்னிடம் வரப்போவதில்லே. என்னே மறந்துவிடு. எனக்குக் கடிதம் எழுதி அனுப்பவேண்டாம். என்னேப் பார்க்கவும் முயலவேண்டாம்.''

உடனே கீழே இறங்கித் தாயை அழைத்து, அவளேப் பார்க்காமலே, அந்தக் கடிதத்தை அவளிடம் பால் நீட்டினுன்.

''இந்தக் கணமே இதைக் கொண்டுபோய் அவள் கையில் கொடுத்துவிட்டு, உடனே திரும்பிவிடு'' என்று நெஞ்சு கரகரக்கச் சொன்னுன்.

கடிதம் அவள் கைக்குப் போனதும் வெளியே விரைந்தான். கரையேறி விடுதலே பெற்றுற்போல் இருந்தது.

காலே ஆகாரத்துக்கு மேஜை மீது விரிப்புப் போட்டிருந்தது. பக்கத்து நாற்காலியில் தொப்பியை வைத்துவிட்டு, பால் உட்கார்ந்து கொண்டான். காபியை அம்மா ஊற்றும்போது, ''கடிதத்தைக் கொடுத்தாயா?'' என்று நிதானமாகக் கேட்டான். 'கொடுத்தேன்' என்ற பாவனேயில் தலேயசைத்தாள் தாய்.

''தோட்டத்தில் அவள் இருந்தாள். எப்போதும் அதிகாலேயிலேயே எழுந்துவிடுவாள்போல் இருக்கிறது. நேராக அவளிடமே கடிதத்தைக் கொடுத்தேன். யாரும் பார்க்கவில்லே. அதை அவள் வாங்கிப் பார்த்தாள். பிறகு என்னேப் பார்த்தாள். ஆனுல் அதைப் பிரிக்கவில்லே. 'பதில் ஒன்றும் இல்லே போல் இருக்கிறது' என்று சொல்லி நான் போவதற்காகத் திரும்பினேன். ஆனுல் அவள், 'சற்று இருங்கள்' என்று சொல்லிவிட்டு அப்புறம் அதைப் பிரித்தாள், மூடி மறைக்க ஒன்றுமில்லே என்று எனக்குச் சொல்வதுபோல. வாசித்ததும் அவள் முகம் அந்தக் காகிதம் மாதிரியே வெளுத்துவிட்டது. 'சரி, போய் வாருங்கள்; கடவுள் உங்களேக் காப்பாற்றட்டும்' என்று சொன்னுள்.''

''சரி; போதும்'' என்று வெறுப்புடன் கத்தினுன் அவன். ஆனுல் தலே நிமிரவில்லே. கண் இமை நடுங்க அவன் முகம் ஏக்னிஸின் முகத்தைப் போலவே வெளுத்தது அவளுக்கு நன்ருகத் தெரிந்தது. மூர்ச்சையாகி விடப்போகிருனே என்று ஒருகணம் பயந்தாள் அவள். ஆனுல் அவன் முகம் மீண்டும் சிவந்ததும் அவளுக்கு மூச்சு வந்தது.' அப்பாடா!' என்று ஒரு விடுதலே. இந்த மாதிரி சமயங்கள் மிகப் பயங்கரமானவை தான். அவற்றைத் தைரியமாகச் சமாளிக்கவேண்டும். பணிந்துவிடுவதில் அர்த்தமே இல்லே. மேலும், ஏதோ சொல்லவேண்டும் என்று அவளுக்கு உள்ளம் துடித்தது. 'என்ன காரியம் செய்துவிட்டாய், பார்த்தாயா? உன்னேயும் கெடுத்துக் கொண்டு அவளுக்கும் கேட்டை விளேவித்துவிட்டாய்' என்று மெதுவாகவாவது சொல்லிவிட வேண்டும்போல் இருந்தது. ஆனுல் அவள் வாயெடுப்பதற்குள், அவன் நிமிர்ந்து தீய ரத்தவெறியைத் தூக்கி எறிவது போலத் தலேயைப் பின்னுல் உதறிக்கொண்டே கண்ணில் கோபம் ஜொலிக்க ஒரு பார்வை பார்த்தான். ''போதும், போதும்! உன் காதில் விழவில்லே? போதும்; இனி ஒரு வார்த்தைகூட இந்த விஷயத்தைப்பற்றிக் கேட்க நான் தயாராயில்லே. இல்லாவிட்டால், நேற்று ராத்திரி நீ செய்வதாகப் பயமுறுத்தியதை நானே செய்துவிடுகிறேன்; இந்த வீட்டை விட்டு வெளியே போய்விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுச் சரேலென்று எழுந்தான். அவன் தன் அறைக்குப் போவதற்குப் பதி

லாக வீட்டை விட்டே வெளியே போனான்.

அன்று மாலை வேலைக்காரப் பையனைப் பார்ப்பதற்காக, மதுக் கடைக்குச் சென்றான் பால். பையன் தான் மது விற்பவன். கரிய உருவம் ஒன்று சந்தடி இல்லாமல் சதுக்கத்தின் குறுக்கே ஓடி வந்து, கடை வாசலில் வந்து நின்றது. உட்புறத்தை அதன் கறுப்புக் கண்கள் அகல அகலப் பார்த்தன. இரைக்க இரைக்க உருவம் உள்ளே நுழைந்தது.

ஏக்னிஸின் வேலைக்காரிகளில் ஒருத்தி அவள். தன்னை அறியாமல் கடையின் பின் கோடியைப் பார்க்க நகர்ந்துகொண்டான் பால். ஒளிந்துகொள்ள முயன்றவன், ஏதோ நினைத்துக்கொண்டு பரபரவென்று முன்னால் வந்தான். பம்பரத்தைப் போல் தன் உடம்பு சுழன்றமாதிரி இருந்தது அவனுக்கு. தான் தனியாக இல்லை; பேச்சுக்கோ சந்தேகத்துக்கோ இடம் கொடுக்கக்கூடாது என்று எண்ணிச் சமாளித்துக் கொண்டான். அசைவற்று நின்றான். பையனின் தாயிடம் வேலைக்காரி என்ன சொல்கிறாள் என்று கேட்கக்கூடப் பால் விரும்பவில்லை. பையனின் தாயோ மிகவும் அக்கறையாக ஆவலோடு கேட்டுக்கொண் டிருந்தாள். 'எங்கேயாவது ஓடிப் போய் விடவேண்டும்; பத்திரமான இடத்தைப் பார்க்க ஓடிப் புகல் அடைய வேண்டும்' என்று அவன் உடல் துடித்தது. இருதயத் துடிப்புக்கூட நின்றுவிட்டது. உடலில் ஓடும் ரத்தம் முழுவதும் தலையை நோக்கிப் பாய்ந்தது; காதில் வந்து ஓலமிட்டது. அப்படியும் வேலைக்காரி சொன்ன வார்த்தை ஒவ்வொன்றும் அவனுடைய ஆத்மாவின் ஆழத்தைத் துளைத்துக்கொண்டு புகுந்தது.

மூச்சுத் திணற அந்தப் பெண் சொன்னாள்: ''அப்படியே விழுந்துட்டாங்க. மூக்கிலேருந்து ரத்தம் ஆறுக் கொட்டிச்சு. தலைக்குள்ளே ஏதாவது உடைஞ்சுதான் போச்சோன்னு பயமாய்ப் போயிடிச்சி. அவ்வளவு ரத்தம்! இன்னும் நிக்கல்லே. ஈஜிப்ட் மேரியின் சாவியைக் கொடுங்கம்மா. அதை நிறுத்துறத்துக்கு அது ஒண்ணுதான் வழி.''

தட்டும் கோப்பையுமாக நின்று கொண்டிருந்த பையன், இதைக் கேட்டு, சாவியைக் கொண்டுவருவதற்காக ஓடினான். பழைய மாதா கோவில் ஒன்றின் சாவிகள் அவை. மூக்கில் ரத்தம் கொட்டுகிறவர்களின் தோள்மீது அவற்றை வைத்தால் ஓர் அளவுக்கு ரத்தம் நின்று விடுமாம்.

'எல்லாம் பாசாங்கு! வேஷம்! வெறுங் கதை! உளவு பார்க்கத் தான் இந்தக் குட்டியை அனுப்பியிருக்கிறாள் அவள். மறுபடியும் தன் வீட்டுக்குள் என்னை இழுக்கத் தான் இந்த ஆர்ப்பாட்டம் எல்லாம். இந்த உதவாக்கரை இருக்கிறாளே, கடைக்காரி; இவளும் இந்தச் சூழ்ச்சியில் சேர்ந்தவள் தானோ என்னவோ' என்று பால் எண்ணமிட்டான்.

ஆனால் உள்ளத்தில் மட்டும் கலவரம் பெருகிக்கொண்டே யிருந்தது. சகிக்க முடியாத குழப்பமாக - இரைச்சலாக - மாறுகிற அளவுக்கு அது பெருகிவிட்டது. இல்லை; வேலைக்காரி சொல்வது பொய் இல்லை. ஏக்னிஸ் மிகவும் ரோசம் உள்ளவள்; கர்வமும் உள்ளவள். யாரிடத்தும் தன் ரகசியங்களைப் பகிர்ந்துகொண்டு விடுகிறவள் அல்ல. அதுவும் வேலைக்காரர்களிடமா? உண்மையாகவே அவளுடைய உடல் நிலை மோசமாகத்தான் இருக்கவேண்டும். பாலின் கண்முன், அவளுடைய இனிய முகம் ரத்தக்கறை படிந்திருப்பது தெரிந்தது. அந்தமாதிரி அவளை அடித்துப் போட்டவன் அவன்தானே?..'தலைக்குள்ளே ஏதாவது உடைஞ்சுதான்போச்சோன்னு பயமாப் போயிடிச்சி..'

பையனுடைய தாயின் கண்கள் சரேலென்று தன் பக்கம் திரும்புவதை அவன் கண்டான். அவன் இவ்வளவு அலட்சியமாக இருப்பதைப் பார்த்து, அந்தப் பார்வையில் வியப்பு நிறைந்திருந்தது.

''சரி; எதனால், எப்படி ரத்தம் வந்தது?'' என்று வேலைக்காரியைப் பார்த்து அவன் கேட்டான். கேள்வியில்தான் எவ்வளவு நிதா

னம்! எவ்வளவு சாந்தம்! தன் கவலையைத் தன்னிடமிருந்தே மறைக்க முயலுகிறுளு?

அந்தப் பெண் திரும்பி அவனைப் பார்த்தாள். இருண்ட, கூரிய அந்த முகத்தைப் பார்த்தபோது, இவனை ஏதோ ஒரு பாறை முனை என்று மதித்து அதன்மீது மோதிக் கொள்ளாமல் அவள் தன்னைக் காத்துக்கொள்ள முயல்வது போல் தோன்றிற்று.

''அவங்க விழுந்தபோது நான் வீட்டிலே இல்லே. தண்ணி மெள்ள ஊத்துக்குப் போயிருந்தேன். திரும்பி வந்து பார்க்கறப்போ, ரொம்ப அவங்களுக்கு உடம்பு சரியா யில்லெ. வாசப்படியிலே விளுந்துட்டாங்க. மூக்கிலேருந்து ரத்தம் கொட்டிக்கிட்டே யிருந் திச்சு. ஆனு காயத்தைவிட அவங்க படற பயந்தான் சாஸ்தியா இருந்திச்சு. ரத்தம் நின்னுது. ஆனலும் மூஞ்சி வெளுத்துத்தான் கிடந்தது. சாப்பிடவே மாட்டேன் னிட்டாங்க. மறுபடியும் சாயங் காலம் மூக்கு ரத்தம் கொட்டக் கிளம்பிடிச்சு. ரத்தம் மட்டும் இல்லீங்க. உடம்பு முழுக்கக் குலுக் கிக் குலுக்கிப் போட்டுது. இப்ப நான் வர்றப்ப, ஜில்லுப்பா, விறைச் சுப் போய்ப் படுத்திருந்தாங்க. இன் னும் ரத்தம் கசிஞ்சுக்கிட்டேதான் இருக்கு. எனக்கு என்னமோ பயமா யிருக்கு'' என்ருள். பையன் கொண்டுவந்து கொடுத்த சாவிகளை வாங்கி முன்தானையில் சுற்றிக் கொண்டாள். ''வீட்டிலே நாங் களும் பொம்பிளேங்கதானேம்மா? என்ன செய்யிறது!'' என்ருள்.

வாசல் கதவண்டை நகர்ந்தாள் வேலேக்காரப் பெண். ஆனல் அவள் கண்மட்டும் பால்மீதுதான் இருந்தது, பார்வையாலேயே அவனே இழுத்துச் செல்ல முயல் வதுபோல. பையனின் தாய் வறட்டுக் குரலில் சொன்னுள்: ''ஏன், நீங்கள் போய்ப் பார்த்து விட்டு வரலாமே அவளே?''

''ஆமாங்க, நீங்க வாங்க. எச மானி அம்மாவுக்குச் சந்தோசமா இருக்கும். உங்களைப் பாத்தா, கொஞ்சம் தைரியமாவது வரும்'' என்று வேலேக்காரி தூண்டினுள்.

'ம்..பேயல்லவா உன் வாயால் பேசுகிறது!' என்று நினேத்தான் பால். ஆயினும், அவன் கால்கள் அவளைப் பின்தொடர்ந்தன. கூடவே நடந்தான் பையனும். சதுக்கத் தைக் கடந்து கோயில், அப்புறம் வீடுவரைக்கும் போனுர்கள். வேலேக் காரி முன்னுல் ஓடினுள். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடி னுள். நிலவிலே வேலேக்காரி கண் ணின் வெள்ளே மின்னியது. அந்த இரவில் ஏதோ பிசாசு ஓடுவது போல்தான் இருந்தது, அவளேப் பார்த்தால். ஏதோ இனந் தெரியாத பயத்துடனேயே அவள் பின் சென் ருன் பால். பையனின் தோளேப் பிடித்துக்கொண்டு, குருடன் மாதிரி நடந்தான்.

வீட்டு வாசலே அடைந்ததும் கதவைத் திறக்கப் பையன் முயன்ற போது உள் பக்கம் பூட்டியிருந்தது. பால் நின்று பையனின் தோளி லிருந்து கையை எடுத்துச் சற்று விலகி நின்ருன்.

'நான் வார்த்தையைக் காப் பாற்ற மாட்டேன் என்று அவளுக் குத் தெரிந்துவிட்டது. அதனுல் தான் பூட்டிவிட்டாள்' என்று பாலின் உள்ளம் புகைந்தது.

''நீ உடனே திரும்பிப் போய் விடு'' என்று பையனுக்கு அவன் விடை கொடுத்தான்.

வேலேக்காரப் பெண்ணும் போனுள். பத்தடி தூரம் நடந்து விட்டு, அப்படியே நின்ருன். பையன் வீட்டுக்குத் திரும்பிப் போவதையும், மதகுரு சாவியைப் பொருத்திக் கதவைத் திறப்பதை யும் பார்த்துவிட்டு ஓடிவந்தாள்.

''நான் வரவில்லே'' என்று அதட்டுகிருற்போல் சொன்னுன் பால். அடிக்க வருகிருற்போல் இருந் தது அவன் திரும்பிய தோரணே. அவளுடைய புறத்தைத் துளேத்து உண்மை இயல்பை அறிய முயல் வதுபோல நேருக்கு நேராக அவ ளுடைய கண்களைப் பார்த்தான்: ''அப்படி நான் கட்டாயம் வரத் தான் வேண்டும் என்ருல் - என்ன, புரிகிறதா? நான் கட்டாயம் வர வேண்டும் என்று இருந்தால்தான் - நீ மறுபடியும் வா. பார்க்கலாம்.''

ஒன்றும் சொல்லாமல் அந்தப்

பெண் போய்விட்டாள். உள்ளே போவதற்கு அவனுக்கு வலிவு இல்லை. தான் மிதிக்கத் தொடங்கிவிட்ட வேறு பாதையிலும் முன்னேற முடியவில்லை. 'சாசுவதமாக மூடிய கதவு ஒன்றின்முன் நிற்பாயாக!' என்று சாபம் பெற்றவன் போல் நின்றான். கதவின் சாவி மட்டும் அவனிடம் இருந்தது.

வீட்டுக்குப் போனதும் அன்னையிடம் பால் சொன்னான்; ''அம்மா இதைப் பார்: அந்தப் பெண் ஏக்னிஸுக்கு உடம்பு சரியாக இல்லை. இன்று காலையிலிருந்து படுத்துக் கிடக்கிறாள் அவள். விழுந்துவிட்டாளாம். தலையில் காயம் பட்டு மூக்கிலிருந்து ரத்தம் கொட்டிக்கொண் டிருக்கிறதாம்.''

''பால், இதெல்லாம் யார் சொன்னார்கள்? ஒரு சமயம் பொய்யாக இருந்தால்..?''

மீண்டும் தன் மனச்சாட்சியே அவள் வாயிலாகப் பேசுவதுபோல் தோன்றிற்று அவனுக்கு. ஆயினும் உடனேயே பதில் சொன்னான்: ''அது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் அதைப்பற்றிக் கவலை இல்லை இப்போது. முட்டாள்தனமாக ஏதாவது செய்துவிடுவாளோ என்ற பயந்தான் எனக்கு. வேலைக்காரர்கள் தவிர, வேறு மனிதர்கள் இல்லை அங்கே. தனி மனுஷி. நான் போய் அவளைப் பார்த்தால்தான் தேவலை.''

''பால்!''

''நான் போய்ப் பார்த்துத்தான் ஆகவேண்டும்'' என்று அதட்டுகிற அளவுக்குக் குரலை உயர்த்திக் கொண்டு சொன்னான்.

''நீ அங்கே போனால் வீழ்ச்சி அடையாமல் இருப்பாயென்று தைரியம் இருக்கிறதா உனக்கு? வேலைக்காரியைப் பார்த்தது உண்மை, அந்தப் பெண் உடம்பு சரியில்லாமல் படுத்திருப்பதும் உண்மை என்று வைத்துக்கொண்டாலும் வீழ்ச்சி அடைய மாட்டாயென்று நிச்சயம் இருக்கிறதா உனக்கு?''

பேசிக்கொண்டே இருந்தவள் சட்டென்று நிறுத்திவிட்டாள். இருளின் ஊடே அவனுடைய வெளிறிய முகம் தெரிவது போல் இருந்தது. அவளுடைய தாயுள்ளத்தில் கருணை ஊறிப் பொங்கியது. ஏக்னிஸிடம் அவன் போவதை ஏன் தடுக்க வேண்டும்? உண்மையிலேயே ஏக்னிஸ் துக்கம் தாளாமல் இறந்துவிடுவாளோ? பாலும் துக்கம் தாளாமல் இறந்துவிட்டால்? .....சந்தேகம் அவளை வதைத்து எடுத்தது. முன்னே பால் பட்ட வேதனையை அவளும் இப்போது அநுபவித்தாள்.

''ஆண்டவனே!'' என்று பெருமூச்சு விட்டாள். தன்னைக் காப்பாற்றும் பொறுப்பைக் கடவுளிடம் ஏற்கனவே ஒப்படைத்துவிட்டது அவளுக்கு நினைவு வந்தது. அவனைத் தவிர வேறு யார் நம்முடைய அல்லல்களைத் தீர்க்க முடியும்? இந்த நினைவு அவளுக்கு ஆறுதல் அளித்தது. உடனடியாகப் பிரச்னையைத் தீர்த்துவிட்டது போல ஓர் ஆசுவாசம் உண்டாயிற்று. ஏன்? கடவுளிடம் ஒப்படைத்துப் பிரச்னையைத் தீர்த்துவிடவில்லையா அவள்?

''உன் மனச்சாட்சி உன்னைப் போக உத்தரவிட்டால், நீ இங்கே வருவானேன்? உடனே போவதற்கென்ன?''

''நான் சத்தியம் செய்துவிட்டேனே. நான் மறுபடியும் அங்கே போனால், நீ என்னை விட்டுவிட்டுப் போய்விடுவதாகப் பயமுறுத்தினாய்; நான் சத்தியம் செய்து கொடுத்தேன்...'' என்று எல்லையில்லாத துயரத்துடன் அவன் சொன்னான். 'அம்மா, என் சத்தியத்தைக் காப்பாற்றப் பலாத்காரம் செய்தாவது எனக்கு நீ உதவக் கூடாதா?' என்று கத்த வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. ஆனால் வார்த்தைகள் வாயில் வரவில்லை.

''சரி, அப்படியானால் போ. உன் மனச்சாட்சி சொல்கிற மாதிரி தான் நீ நடக்க வேண்டும்'' என்று அவள் சொன்னாள்.

அவன் வெளியே வந்துவிட்டான். தான் ஒன்றும் அப்படிப் போக்கிரி இல்லை என்று ஓர் எண்ணம் அவனுக்குத் தோன்றியது. கெட்ட நோக்கத்துடனோ காம சிந்தையுடனோ அவன் போகவில்லையே.

தவிர்க்கக்கூடிய ஆபத்து ஏதாவது இருந்தால் அதைப் போக்கத் தானே அவன் போகிறான்? இந்த ஆபத்துக்குப் பொறுப்பாளியும் அவன்தானே. நிலவு காயும் புல் வெளியில் வேலைக்காரி நடந்து பின் திரும்பி அவனிடம் வந்து, ''எஜமானி அம்மாளுக்கு நீங்கள் வந்தால் கொஞ்சம் தைரியமாக இருக்கும்'' என்று சொன்னது ஞாபகம் வந்தது.

ஏக்னிஸிடமிருந்து பிரிந்துவிட அவன் செய்யும் முயற்சிகளெல்லாம் இப்போது அவனுக்கு அற்பத்தனமாகத் தோன்றின. அவளிடம் உடனே புறப்பட்டுப் போய்த் தைரியம் சொல்லியிருக்க வேண்டும். கடமை அதுதான்...

எல்லாம் எப்போதும் போலவே- அதாவது தோட்டத்தின் வழியாக ரகசியமாக அவன் வரும் இரவுகளில் இருப்பதைப் போல் தான்-இருந்தது. திட்டிவாசல் திறந்திருந்தது. அதன் குறுகிய திறப்பின் வழியாக இரவின் காற்றுப் புதர்களின் நறுமணத்தைச் சுமந்து வந்தது. அறையின் பெரிய விளக்கின் நிதானமான ஒளியில் சுவரில் மாட்டியிருந்த மான்களின் கண்ணாடிக் கண்கள் பளபளவென்று மின்னின. உள்ளே நடப்பதையெல்லாம் அவை நன்றாகக் கவனித்துக்கொள்வது போலத் தோன்றின. உள் அறைகளுக்குச் செல்லும் நிலைக் கதவு வழக்கத்துக்கு மாறாக நன்றாய்த் திறந்து கிடந்தது. அதன் வழியாகத்தான் வேலைக்காரி உள்ளே போனாள். அழுந்தி அழுந்திப் படியும் அவளுடைய காலடியின் கீழே பலகை மூடிய அந்தத் தளவரிசை முனகிற்று. சிறிது நேரத்துக்குப் பின்பு பெரிய காற்றடித்ததுபோல் வீட்டையே அதிரச் செய்து கொண்டு படாரென்று கதவு சாத்தும் ஓசை ஒன்று கேட்கவே, அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. உள் அறையின் இருளிலிருந்து ஏக்னிஸ் வந்துகொண்டிருந்தாள். முகம் வெளுத்து நிலை குலைந்த மயிர் தாறுமாறாகப் பறக்க, நீரில் மூழ்கிய பெண்ணின் அருவத்தைப் போல் வந்தாள் அவள். விளக்கின் ஒளியில் அவள் வந்து நின்றதும், பால் கவலை நீங்கி ஒரு பெருமூச்சு விட்டான்.

கதவைத் தன் பின்னால் சாத்திக் கொண்டே அதன்மேல் சாய்ந்து தலையைக் குனிந்து அவள் நின்றாள். அவள் தடுமாறுவதைப் பார்த்தால் விழுந்துவிடுவாள் போலத் தோன்றியது. பால் சட்டென்று கையை நீட்டியபடி அவளுக்கு அருகில் விரைந்தான். ஆனால் தொடுவதற்குமட்டும் துணிவில்லை.

''உடம்பு எப்படி இருக்கிறது?'' என்று தாழ்ந்த குரலில் அவளைக் கேட்டான். அவளை அங்கே சந்திக்கும்போதெல்லாம் அவன் குரல் அதற்குமேல் உயர்வதில்லை. அவள் பதில் சொல்லவில்லை. உடல் முழுவதும் நடுங்கக் கதவின்மீது ஆதரவாகக் கையை அழுத்திக் கொண்டு நின்றாள். ஒரு கணம் மௌனம். இருவரில் எவரும் பேசவில்லை.

''ஏக்னிஸ், நாம் தைரியமாக இருக்கவேண்டும்'' என்றான் பால்.

''அப்படியானால் நீங்கள் ஏன் வந்தீர்கள்?''

''உனக்கு உடம்பு சரியாக இல்லை என்று கேள்விப்பட்டேன்.''

நிமிர்ந்து நின்று கர்வத்துடன் நெற்றி மயிரைப் பின்னால் தள்ளி விட்டுக்கொண்டு, ''எனக்கு உடம்பு சரியாகத்தான் இருக்கிறது. நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பவில்லை'' என்று அவள் சொன்னாள்.

''எனக்கு அது தெரியும். இருந்தாலும் வந்தேன். நீ சௌக்கியமாயிருப்பதைப் பார்த்து எனக்குக் கவலை இல்லாமல் இருக்கிறது.''

''இல்லை. நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பவில்லை. நீங்களும் வந்திருக்கக் கூடாது. ஆனால் வந்துவிட்ட பிறகு, எனக்குக் கேட்க வேண்டும்போல் இருக்கிறது; ஏன் அப்படிச் செய்தீர்கள்...ஏன்...?''

தேம்பிக்கொண்டே கேட்டாள் அவள். கைகள் ஆதரவைத் தேடி அலைந்தன. பால் பயந்துவிட்டான். 'ஏன் வந்தோம்?' என்று ஆகிவிட்டது அவனுக்கு. மெதுவாக, அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய், இரு

போகலாம். என்னை விட்டுப் போங்கள்!''

அவளை விட்டுப் போகவில்லை அவன். அவள் உடல் முழுவதும் நடுங்குவதை அவன் உணர முடிந்தது. அவளைக் கண்டு ஓர் அச்சம் ஏற்பட்டது அவனுக்கு. கோத்த நான்கு கைகளிலும் அவள் குனிந்து முகத்தைப் புதைத்தபோது, தன்னைக் கடிக்கப் போகிருளோ என்று கூட அவன் பயந்தான்.

''போங்கள்! போய்விடுங்கள்! நான் உங்களை அழைக்கவே யில்லை! நாம் தைரியமாக இருக்க வேண்டுமானல், ஏன் திரும்பி வந்தீர்கள்? மறுபடியும் ஏன் என்னை முத்தமிட்டீர்கள்? ம்..என்னேடு இப்படியெல்லாம் விளையாடலாம் என்று நினைத்தால், நீங்கள் நினைத்தது தவறு! இரவெல்லாம் இப்படி வருவது, பகலில் என்னை இழிவுபடுத்திக் கடிதங்கள் எழுதுவது என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் நினைத்தது தவறு! இன்று வந்தீர்கள்! நாளை வருவீர்கள்! அப்புறம் ஒவ்வோர் இரவும் இப்படி வருவீர்கள்! எல்லாம் எனக்குக் கோப வெறி மூளும் வரையில்தான். ஆனல் இது நடக்காது! நான் இதற்கெல்லாம் இணங்க மாட்டேன்!

''நான் என்ன, குழந்தையென்று நினைத்துக்கொண்டீர்களா? எனக்கு வயசாகிவிட்டது. என்னைச் சிறிது நேரத்துக்குள் கிழவியைப் போல் ஆக்கிவிட்டது நீங்கள் தான். நேரான பாதையா! ஆமாம்! இப்படியே, கள்ளத்தனம் செய்துகொண்டிருந்தால் நேர்ப் பாதையாகத்தான் இருக்கும்! இல்லையா? நான் ஒரு கணவனைத் தேடிக்கொள்ள வேண்டும்; அவனுக்கு நீங்கள் என்னைக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும். அதற்குப் பிறகு, நீங்களும் நானும் சந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும். இதுதான் உங்கள் எண்ணமா? அப்படியானல் என்னைச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை நீங்கள்! நேற்று இரவு நீங்கள் சொன்னது என்ன? 'எங்கேயாவது ஓடிப் போய்விடுவோம். கல்யாணம் செய்துகொண்டு விடுவோம். நான் வேலை செய்து சம்பாதிக்கிறேன்' என்று சொன்னீர்களே! இல்லையா? ஆனல் இன்று வந்து கடவுள், தியாகம் என்றெல்லாம் பேசுகிறீர்கள். சரி, எல்லாம் தீர்ந்துவிட்டது. நாம் பிரிந்துவிடுவோம். ஆனல் ஒன்று மட்டும் சொல்கிறேன்: இந்த ஊரை விட்டு இன்றிரவே நீங்கள் போய்விட வேண்டும். நான் மறுபடியும் உங்களைப் பார்க்க விரும்பவில்லை. நாளைக் காலையில் எங்கள் கோயிலில் போய்த் தொழுகை நடத்த மட்டும் நீங்கள் போனீர்களோ, நானும் அங்கே வருவேன். பீடத்தின் படியில் ஏறி நின்று, 'இவர் தான் உங்கள் மகான். பகலில் அற்புதங்கள் செய்கிறவர்..ராத்திரியில் துணையில்லாத பெண்களைக் கற்பழிக்கப் போகிறவர்' என்று ஊராருக்கெல்லாம் பறை சாற்றுவேன்!''

கையினல் அவள் வாயைப் பொத்த முயன்ருன் பால். பயனில்லை. ''போங்கள், போங்கள்'' என்று கத்தினள் அவள். அவளுடைய தலையைப் பிடித்து, மார்போடு அவன் அழுத்திக்கொண்டான். மூடியிருந்த கதவுகளை மருள மருளப் பார்த்தான்.

திமிறிக்கொண்டு - தலையினல் அவன் மார்பை முட்டப் பின் வாங்குவதுபோல் திமிறிக்கொண்டு - தன்னை அவன் அணைப்பிலிருந்து அவள் விடுவித்துக்கொண்டாள். விறைத்து, நிமிர்ந்து உட்கார்ந்தாள். கட்டைபோன்ற அவளுடைய முகத்தைச் சுற்றிலும் நாடாக்களைப்போல அழகிய கேசங்கள் முறுக்கிக்கொண்டிருந்தன. உதட்டை இறுக மடக்கி, கண்ணை மூடிக்கொண்டாள். திடீரென்று தூங்கிவிட்டவள்போல் அவள் தோன்றினள். பழிவாங்கக் கனவு காண்கிருளா? அவளுடைய வெறி பிடித்த சொற்களையும் ஆட்டங்களையும்விட அந்த மௌனமும், அவள் அசையாமல் உட்கார்ந்திருந்ததுந்தான் அவனுக்குப் பயத்தை ஊட்டின. அவளுடைய கைகளை மீண்டும் பற்றினன். ஆனல் அந்தப் பிடிப்பில் இன்பம், காதல் எல்லாம் செத்துக் கிடந்தன.

மீண்டும் அவள் கண்விழித்தாள்.

''நீங்கள் இன்றிரவு போய்விட வேண்டும். போயே தீரவேண்டும். மறுபடியும் என் கண்களில் படக் கூடாது'' என்று ஒவ்வொரு வார்த்தையையும், தெளிவாக, உறுதியாகச்சொன்னுள். அந்தக் குருட்டுச் சக்தியை அந்தச் சமயம் எதிர்த்து நிற்பதில் பயனில்லை என்று அவனுக்குத் தோன்றிவிட்டது.

''நான் அப்படிப் போக முடியாது. நாளைக் காலையில் பூஜை செய்தாகவேண்டும். நீயும் அதற்கு வந்து இரு. பிறகு நான் போய் விடுகிறேன், அவசியமானுல்.''

''அப்படியானுல் நாளைக் காலையில் வந்து எல்லார் முன்னிலையிலும் உங்களை அம்பலப்படுத்துகிறேன்.''

''நீ அப்படிச் செய்தால் அது கடவுளின் சித்தம் என்பதற்கு அடையாளம். ஆனுல் நீ அப்படிச் செய்யமாட்டாய், ஏக்னிஸ்! போய் வருகிறேன்.''

கடைசியில், தோட்டத்துக்குப் போகும் கதவைத் திறந்து, சுவர் ஓரமாகச் செல்லும் பாதையில் நடந்து, மிக மிகப் பழகிப்போன அந்தத் திட்டி வாசல் வழியாக வெளியேறினுன்.

மீண்டும் பால் முன்போல் மாடிப் படி ஏறினுன். ஆனுல் முன்போல அந்தப் பயம்-ஏதோ ஆபத்து நெருங்கி வருகிறது என்ற பயம் - இல்லை.

முன்போலவே இப்போதும் தாயின் அறைக் கதவுக்கு முன் நின்ருன் அவன். ஏக்னிஸைக் கண்டதையும், அவள் தன்னை அம்பலப் படுத்துவதாகப் பயமுறுத்தியதையும் அம்மாவிடம் சொல்லுவது நல்லது என்று தோன்றிற்று. ஆனுல் அவள் நன்ருகத் தூங்கிக் கொண்டிருந்தாள். மூச்சு ஒழுங்காக ஏறி இறங்குவது கேட்டது. 'பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று தன் அறைக்குப் போனுன். அம்மாவுக்கு நல்ல தூக்கம். மகனைப்பற்றி அவளுக்கு நிச்சய புத்தி வந்துவிட்டதோ ஒருவேளை!

'ஆமாம். இன்றிரவே நான் போய்விட வேண்டும். அபவாதத்தைத் தவிர்க்கவேண்டும் என்று கிறிஸ்துவே கட்டளையிட்டிருக்கிருர். அம்மாவை எழுப்பிச் செய்தி அனைத்தையும் அவளிடம் சொல்லி இரண்டு பேரும் சேர்ந்தே புறப்பட்டு விடலாம். குழந்தையாக இருக்கும்போது என்னை அழைத்துச் சென்றதுபோல அவள் மீண்டும் என்னை அழைத்துப் போகட்டும். வேறு இடத்துக்குச் சென்று நான் புது வாழ்க்கையைத் தொடங்க முடியும்.'

ஆனுல் இந்த எண்ணங்களெல்லாம் மனத்தின் துள்ளல்களே தவிர, தனக்கு அந்த மாதிரி செய்யத் தைரியம் வராது என்றே தோன்றிற்று. அப்படிச் செய்யத்தான் அவசியம் என்ன? ஏக்னிஸ் அவள் பயமுறுத்தியபடி செய்யமாட்டாள் என்று அவனுக்கு ஒரு நிச்சயம் இருந்தது. அப்படி ஏன் போகவேண்டும்? மறுபடியும் அவளிடம் சென்று வீழ்ச்சியடையும் ஆபத்தும் இப்போதில்லை. ஏனென்ருல், சோதனையில் வென்று தீய ஆசைகளையும் அவன் வென்று விட்டான்.

ஆயினும் உள்ளம் மீண்டும் துள்ளி எழுந்தது.

''இருந்தாலும், பால், நீங்கள் போய்விடத்தான் வேண்டும். அம்மாவை எழுப்பி, இருவரும் புறப்பட்டுவிடுங்கள். பேசுவது யார் என்று தெரியவில்லையா? நான்தான், ஏக்னிஸ். நான் பயமுறுத்தியதைச் செய்து காட்டமாட்டேன் என்று நீங்கள் உண்மையாக நம்புகிறீர்களா? ஒருவேளை செய்யாமல் இருந்தாலும் இருப்பேன். எதற்கும் நீங்கள் போய்விடுவது நல்லது. என்னிடமிருந்து தப்பித்து விட்டதாக நினைக்கிறீர்களா? நான் உங்களுக்குள்ளேயே இருக்கிறேன். உங்கள் வாழ்க்கையின் துர்த்தேவதை நான். நீங்கள் இங்கே தங்குவதாக இருந்தால், ஒரு நொடி கூட உங்களை நான் சும்மா விடப் போவதில்லை. உங்களுக்கு இழுக்குத் தரும் நிழலாக - உங்களுக்கும் உங்கள் தாய்க்குமிடையே ஒரு சுவராக - உங்களுக்கும் உங்கள் ஆத்மாவுக்கும் இடையே ஒரு சுவ

ராகத்தான் - இருப்பேன். போய் விடுங்கள்.''

இதைக் கேட்டு, தன் மனச் சாட்சியைச் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் அவளைச் சமா தானப்படுத்த முயன்றான் அவன்.

''ஆமாம். நான் போகப் போகி றேன். நாங்கள் இருவரும் போகி றோம். ஆனால் நீமட்டும் என் நெஞ்சில் இருந்துகொண்டுதான் இருப்பாய். திருப்தியாக இரு. என்னை இனிமேல் வதைக்காதே. நாம் சேர்ந்தேதான் இருக்கிறோம். காலத்தின் சிறகுகள் மீதேறி அழியா நிலையை நோக்கி நாம் போகிறோம். முதலில் நாம் சந் தித்து முத்தம் இட்டுக்கொண்ட போதுகூடப் பிரிந்து தூரத்தில் தான் இருந்தோம்; பகைவர்க ளாக இருந்தோம். இப்போது தான் நம்முடைய உண்மையான ஒற்றுமை தொடங்குகிறது-உன் வெறுப்பிலும் என் பொறுமை யிலும் தியாகத்திலுந்தான் தொடங்குகிறது.''

நன்றாகத் தூங்கிவிட்டான் அவன். இரண்டு மூன்று மணி நேரம் ஆழ்ந்த - கனவில்லாத - தூக்கம். விழித்து எழுந்தபோது நினைவு சூன்யமாக இருந்தது. மறுபடியும் படுத்துத் தூங்கவேண் டும்போலத்தான் இருந்தது அவ னுக்கு. ஆயினும் கதவை யாரோ தட்டுவதுபோல் சப்தம் கேட்டது. சட்டென்று எழுந்தான். பயத்தில் மனம் மரத்துக் கிடந்தது.

'ஏக்னிஸ் கோயிலுக்கு வந்து எல்லார் முன்னிலையிலும் என்னை இழிவுபடுத்தப் போகிறாள்' என்ற ஒரு நினைவுதான் ஓங்கி நின்றது உள்ளத்தில். அவன் தூங்கும் போதே, தான் பயமுறுத்தியதை அவள் செயலில் காண்பித்து விடு வாள் என்ற நிச்சயம் பிரக்ஞை யில் வேர் ஊன்றிவிட்டது.

வாழ்க்கைச் சுழலில் அவ னுடைய இருதயந்தான் சுழன்று சுழன்று வந்தது. தானாக நிற்கவோ, இஷ்டம்போல் சுழ லவோ முடியாது அதற்கு. கதவை மூடி உள்ளே போய்ப் படிக்கட்டின் மீது உட்கார்ந்தான் - அம்மா முதல் நாளிரவு உட்கார்ந்ததுபோல. மனத்தை வதைக்கும் பிரச்னை யைத் தீர்க்க அவனால் முடிய வில்லை. தீர்க்கும் முயற்சியையும் கைவிட்டு விட்டு, யாராவது வந்து உதவ மாட்டார்களா என்று காத்திருந்தான்.

அம்மா வந்தாள்.

''பால், இங்கே என்ன செய்து கொண் டிருக்கிறாய்? உடம்பு சரி இல்லையா?''

''அம்மா'' என்று அழைத்தபடி சாப்பாட்டு அறைக் கதவை நோக்கி நடந்தான், திரும்பாமலேதான். மேலும் தொடர்ந்து, ''நேற்றிரவு உன்னை எழுப்ப நான் விரும்ப வில்லை. ரொம்ப நேரமாகிவிட்டது. நேற்று நான் அவளைப் பார்க்கப் போனேன். பார்க்கப் போனேனா..'' என்று முடிக்க வில்லை.

அம்மாவுக்கு நிதானம் வந்து விட்டது. அவனையே அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றாள். அவன் பேசி நிறுத்திய அந்த இடை வெளியில், கோயில் மணியின் அழைப்புக் கணகண என்று ஒலிப் பது கேட்டது. வீட்டின் தலை மேலேயே அந்த மணியை மாட்டி னாற்போல அவ்வளவு ஓசை.

''அவளுக்கு உடம்புக்கு ஒன்று மில்லை. ஆனால் ரொம்பப் பட படத்துப் போயிருக்கிறாள். நான் இந்த ஊரைவிட்டு உடனே போய் விட வேண்டுமென்று சொல்லு கிறாள். இல்லாவிட்டால் கோயி லுக்கு வந்து, ஜனங்களின் முன்னே என்னை அம்பலப்படுத்துவதாகப் பயமுறுத்துகிறாள்.''

அம்மா பேசவில்லை. ஆனால் பக்கத்தில் அவள் நின்று-உறுதியாக மலைபோல் நின்று - தன்னை ஆதர வாகப் பிடித்துக்கொண் டிருப்பது மாதிரி இருந்தது. குழந்தைப் பரு வத்தில் தள்ளாடியபோது பிடித்துக்கொண்டது மாதிரியே, இப்போதும் விழுந்துவிடாமல் பெற்ற கை பிடித்திருப்பதை அவன் உணர்ந்தான்.

''நேற்றிரவே நான் போய்விட வேண்டும் என்று சொன்னாள். போகாவிட்டால், இன்று காலை யில் 'கோயிலுக்கு வந்துவிடு வேன்' என்று சொன்னாள்..ஆனால்

..எனக்கு ஒன்றும் பயமில்லை.. அவள் வருவாள் என்று நான் நம்பவுமில்லை.''

முன் கதவைத் திறந்தான். சூரியனின் தங்க ஒளி, இருண்ட அந்த நடையில் வெள்ளம்போல வீசிப் பரந்தது - அவனையும் அம்மாவையும் வெளியே மயக்கி இழுத்துச் செல்ல முயல்வதுபோல. திரும்பிப் பார்க்காமல் கோயிலை நோக்கி நடந்தான் பால். அவனைப் பார்த்துக்கொண்டே வாசலில் நின்றாள் அன்னை.

அவள் வாயைத் திறக்கவேயில்லை. ஆனால் அவள் உடல் நடுங்கிற்று. அமானுஷ்யமான பிரயாசையுடன் உடலை நிதானப்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. சட்டென்று படுக்கையறைக்குள் போய், அவசரம் அவசரமாக உடையை அணிந்துகொண்டாள். பெல்ட்டைப் போட்டுக்கொண்டு, நடையை அழுத்திப் போட்டுக் கோயிலை நோக்கி நடந்தாள். ஆனால் வீட்டைவிட்டுப் புறப்படு முன், வீட்டு வேலையை மறக்கவில்லை. கோழிக் குஞ்சுகளை வெளியே துரத்தி, காபிச் செம்பை நெருப்பினருகே இழுத்துவைத்தாள். தலைத்துணியின் முனையை முறுக்கி வாயையும் மோவாயையும் மூடிக் கட்டிக்கொண்டாள். இல்லாவிட்டால், அவளையும் மீறிக் கொண்டு வெடவெட என்று வரும் நடுக்கத்தை எப்படி மறைக்க முடியும்?

வழியில் எதிர்ப்பட்ட ஊர்ப் பெண்கள் வணக்கம் கூறிய போதும், கோயிலுக்கு முன்னுள்ள சதுக்கத்தில் கட்டைச் சுவர் ஓரமாக உட்கார்ந்திருந்த கிழவர்கள் வாழ்த்துக் கூறியபோதும், அவளுக்குக் கண்ணால்தான் விடையளிக்க முடிந்தது. கோயிலுக்கு முன்னால் கிழவர்கள் கூடியிருந்தார்கள். கறுப்பாகக் கூர்முனையுடன் அவர்கள் அணிந்திருந்த குல்லாய்கள், காலை வானின் இளஞ்சிவப்புப் பின்னணியில் பளீர் என்று தெரிந்தன.

பால் கோயிலுக்கு வந்துவிட்டான். பாவ அறிக்கை செய்து கொள்ளும் இடத்தில் பலர் குழுமிக் காத்திருந்தார்கள். முதலில் வந்த ஸ்திரீ, கிராதிக்கு முன்னால் மண்டியிட்டிருந்தாள். மற்றவர்கள் தங்கள் முறைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

பீடத்தை நோக்கி நடந்தான் பால். ஆனால் மனத்திலுள்ள வேதனை, கணத்துக்குக் கணம் பெருகிக்கொண்டிருந்தது. போகும்போது, ஏக்னிஸ் வழக்கமாக உட்காரும் நாற்காலிமீது அவனுடைய சட்டை உராய்ந்தது. அதற்கு எதிரே அழகாகச் செதுக்கு வேலை செய்து மண்டியிடும் ஸ்டூல் ஒன்று. ஏக்னிஸின் குடும்பத்துக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கியிருந்த ஆசன வரிசை அது. பால் அதைக் கடந்துகொண்டே, கண்ணாலும் காலடியாலும் பீடத்துக்கும் அதற்கும் உள்ள தூரத்தை மனத்துக்குள் கணக்கிட்டுக்கொண்டான்.

''என்னைக் கண்டனம் செய்ய அவள் ஆசனத்தை விட்டுவிட்டு எழுந்து பீடத்தை வந்து அடைவதற்குள், நான் உக்கிராண அறைக்குப் போய்விடலாம்'' என்று முடிவு செய்துகொண்டான். ஆயினும், இப்போது உக்கிராண உள்ளுக்குள் நுழையும்போதே அவன் உடல் நடுங்கியது.

எல்லாருக்கும் அவன் பிராயச்சித்தம் செய்துவைத்தான். பாவங்களிலிருந்து விமோசனம் அளித்தான். அளிக்கும்போது வெகு சீக்கிரத்தில் தானும் அவர்களுடைய கருணைக்கு இறைஞ்சி மண்டியிடும் நாள் வரப்போகிறது என்ற நினைவும் உள்ளோட்டமாக ஊர்ந்துகொண்டிருந்தது.

ஏக்னிஸ் அங்கேதான் இருந்தாள். கறுப்பு உடை. தந்தம் போன்ற வெண்மையான முகத்தின்மீது ஒரு மெல்லிய கருந்திரை. அவள் கண் வேதப் புத்தகத்தில் லயித்திருந்தது. கறுப்பு உறை மூடிய கையில் புத்தகத்தின் முலாம் மின்னும் அட்டை பளபளத்தது. ஆனால் அவள் ஓர் ஏட்டைக்கூடப் புரட்டவில்லை. வேலைக்காரி, பக்கத்தில் நடையில் அடிமையைப்போல மண்டியிட்டிருந்தாள். சற்றைக்கு ஒரு முறை

அவள் கண் நிமிர்ந்து நாயின் விசுவாசத்துடன் எஜமானியின் முகத்தைப் பார்த்தது. எஜமானியின் துயரத்துக்கு, மௌனமாகப் பரிவு காட்டுவது போல் இருந்தது அந்தப் பார்வை.

பீடத்திலிருந்து ஒவ்வொன்றையும் பார்க்கும்போது பாலுக்கு நம்பிக்கை அற்றுப்போய் விட்டது. ஏக்னிஸ் பைத்தியக்காரத்தனமாகத் தன் யோசனையைச் செயலில் காட்டப் போவதில்லை என்று மட்டும் இருதயம் சமாதானம் செய்துகொண்டது. வேத நூலின் ஏடுகளைப் புரட்டினான். ஆனால் நாவு தடுமாறிற்று: வார்த்தைகளை உச்சரிக்க முடியவில்லை. பயத்தால் உடல் வேர்த்துக் கொட்டியது. மயக்கம் வரும்போல் இருந்தது. புத்தகத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான்.

சடங்கு முடிந்தவுடன், ஓர் ஆள் துதிப்பாடல் ஒன்றைத் தாழ்ந்த குரலில் பாடத் தொடங்கினான். அடங்கிய குரலில் கூட்டம் முழுவதும் அதைத் திருப்பி முறை வைத்து இரண்டிரண்டு முறை பாடிற்று. ஆதிகாலத்துத் துதி அது. மனிதன் காட்டில் வாழும் பிராணியாக இருந்த நிலையில் பாடும் பாடலைப் போல் இருந்தது. ஸ்வரத்தில் ஏற்ற இறக்கம்இல்லாத மெட்டு; தனித்ததொரு கரையில் மோதி விழும் கடலலை போல ஏற்ற இறக்கம் இல்லாத மெட்டு. ஆனால் மெதுவாகப் பாடிய அந்தப் பாடல் கூட ஏக்னிஸுக்கு மீண்டும் பழைய நினைவுகளைக் கொண்டு வந்தது. ஏதோ பழங்காலக் காட்டில் மூச்சைப் பிடித்துக்கொண்டு இருளில் ஓடியது போலவும், திடீரென்று மணல் மேடும் இன்மலர்களும் உதயத்தின் இளம் பொன்னொளியும் நிறைந்த கடற்கரை எதிரே வந்துவிட்டது போலவும் அவளுக்குத் தோன்றிற்று.

அவளுடைய அந்தராத்மாவின் ஆழத்தில் ஏதோ கிளர்ந்தது. அபூர்வமான உணர்ச்சி ஒன்று அவள் தொண்டையைக் கவ்விற்று. தலை கீழாக நடந்துவிட்டு, மறுபடியும் நேர்நிலைக்கு வந்தது போல, உலகம் அவள் கண்முன் சுழன்றது. தன்னுடைய பழமை, தன் இனத்தின் பழமை - எல்லாம் அவள் முன் வெள்ளமாகப் பிரவகித்து வந்து அவளை ஆட்கொண்டன. ஸ்திரீகளும் கிழவர்களும், தாதியும் வேலைக்காரிகளும் பாடிய அந்தக் குரல்கள்-அவளுடைய வீட்டைக் கட்டி, வயல்களை உழுது, உடைகளை நெய்த ஆண் பெண்களின் குரல்கள் எல்லாம் - அவள் இனத்தின் பழமையை அவள் முன் கொண்டு வந்தன.

தான் வீழ்ச்சி அடைந்தவள் என்று எப்படிச் சொல்லிக் கொள்வது? தன்னை எஜமானியாகவும், பீடத்தில் நிற்கும் குருவை விடப் புனிதமானவள் என்றும் போற்றி வருகிற மக்களின் முன் எப்படித் தன்னை ஒறுத்துக்கொள்வது?.. தன்னைச் சுற்றிலும், தனக்குள்ளேயும் - ஏன், தன் காதலில்கூடத் தான்-கடவுளின் சாந்நித்தியத்தை ஏக்னிஸ் உணர்ந்தாள்.

அவளும் சேர்ந்துதான் அவனுடன் பாவம் புரிந்தாள். அவனுக்கிடும் தண்டனை அவளையும் சாரும் அல்லவா?...ஆனால்?... இப்போது அங்கே கூடியிருந்த ஆண், பெண், குழந்தைகளின் குரல்களோடு கருணை நிறைந்த தெய்வத்தின் குரலும் சேர்ந்து, 'உன்னையே ஏமாற்றிக்கொள்ளாதே; உனக்கு விமோசனம் தேடிக்கொள்' என்று எச்சரித்து ஆக்ஞையிட்டது.

ஊர் மக்கள் தன்னைச் சுற்றிலும் நின்று துதிகளைப் பாடும்போது, அவள் மனக்கண் முன் தன்னந்தனியான வாழ்க்கையின் நாட்கள் அனைத்தும் பிரிந்து எழுந்தன. குழந்தைப் பருவம், வாலிபம், இளமை எல்லா நிலையிலும் இதே கோயிலில், முன்னோர்களின் முழங்காலும் முழங்கையும் பட்டுப் பட்டுக் கறுத்துப்போன இதே ஆசனத்தில் வணங்கி வணங்கி அவள் வளர்ந்திருக்கிறாள். ஒரு வகையில் கோயிலே அவர்களுடைய குடும்பச் சொத்து என்றுகூடச் சொல்ல வேண்டும். அதைக் கட்டியது அவள் முன்னோர்களில் ஒருவர் தான். வேதம் கெட்ட பார்பரிக் கப்பல் கொள்ளைக் கூட்டம் ஒன்றை எதிர்த்து அவர்கள் வசம்

இருந்த மேரியன்னையின் உருவத்தைக் கைப்பற்றி இந்தக் கோயிலில் கொண்டுவந்து வைத்தாராம் அவர். கோயிலில் உள்ள மேரி உருவத்தைப்பற்றி இப்படி ஓர் ஐதிகம் உண்டு.

இந்த ஐதிகங்களுக்கிடையே அவள் வளர்ந்து வந்திருக்கிருள். எளிமையும் பெருமிதமும் கொண்ட சூழ்நிலையில், கிராமத்துச் சின்ன மனிதர்களின் சிறுமையிலிருந்து ஒதுங்கி- ஆயினும் அவர்களுக்கிடையிலும் முரட்டு ஓட்டிலுள்ள முத்தைப்போல - அவள் வளர்ந்து வந்திருக்கிருள்.

இப்படி வளர்ந்தவள் தன் மக்களின் முன்னிலையிலேயே தன்னை இழிவுபடுத்திக் கொள்வதா?.. ஆனல், அந்தக் கோயிலுக்குச் சொந்தக்காரி என்ற உணர்ச்சி அவளுக்கு ஆத்திரத்தைத்தான் ஊட்டிற்று. இந்தப் புண்ணிய ஸ்தலத்தில் எப்படி ஒரு பாவியைப் பார்த்துக்கொண் டிருப்பது? தன்னுடன் பாவம் புரிந்தவனை-மகானைப் போல் நடித்துக் கோயிலின் புனிதமான பாத்திரங்களை ஏந்தி நிற்கும் பாவியை-எப்படிப் பொறுமையுடன் பார்த்துக்கொண்டு...?

அவனுக்கு முன் ஏக்னிஸ் மண்டியிடும்போது, கம்பீரமான, உன்னதமான அவன் தோற்றம் முன்னே நின்றது. அவனிடம் அன்பு வைத்த குற்றம் நெஞ்சை அரித்தது.

மரணத்தின் வெளுப்பு ஏக்னிஸின் மேனியில் படர்ந்தது. ஜில்லென்று உடல் வேர்த்தது. முன்னிருந்த பலகைமீது முழங்கால் படபடவென்று அடித்துக்கொண்டது. அவள் வணங்குவதை நிறுத்திவிட்டாள். பீடத்தில் நின்ற மத குருவை அவளுடைய கண் வெறித்துப் பார்த்தது. தீய மூச்சு ஒன்று அவளிடமிருந்து கிளம்பி, அவனைச் செயலில்லாமல் அடித்து, போர்த்துத் திணறச் செய்வதுபோல் இருந்தது.

மரணத்தை அளிக்கும் அந்தச் சுவாசத்தை உணர்ந்தான் அவன். நடுக்கும் குளிரில் விறைத்ததுபோல விரல்கள் மரத்துப்போய், முதுகின் நாளத்தில் நடுக்கம் சிலிர்த்து ஓடிற்று- அடக்க வொண்ணுத நடுக்கம். ஆசியளிப்பதற்காக அவள் திரும்பியபோது, ஏக்னிஸ் தன்னை வெறித்துப் பார்ப்பதைக் கண்டான். ஒரு மின்வெட்டில், அந்தக் கண்கள் சந்தித்தன. நீரில் முழுகுகிறவனைப் போல, அந்த ஒரு நொடிக்குள், தன் வாழ்க்கையின் இன்பம் - அவளுடைய காதலில் கண்ட இன்பம் - அவள் முதல் முதலாகப் பார்த்த பார்வையின் இன்பம் - அவளுடைய இதழ்கள் தந்த முதல் முத்தம் - அனைத்தையும் ஒரு கணத்தில் அவன் அநுபவித்துவிட்டான்.

பின்பு..புத்தகமும் கையுமாக ஆசனத்தை விட்டு அவள் எழுவது தெரிந்தது.

''ஆண்டவனே, உன் சித்தப்படி எல்லாம் நடக்கும்!'' என்று மண்டியிட்டபடி சொல்லும்போது அவன் நாவு தடுமாறிற்று. மீற முடியாத விதியின் நிழலை உண்மையிலே அவன் பார்த்துக்கொண் டிருந்தது போல் தோன்றிற்று.

பிரார்த்தனையை உரக்கச் சொல்லியவண்ணம், நெருங்கிவரும் விதியைச் சந்திக்கச் சித்தமாக இருந்தான் அவன். கூட்டமும் பிரார்த்தனைகளை முணுமுணுத்துக்கொண் டிருந்தது. தெளிவற்றுக் கேட்கும் அந்த முணுமுணுப்புக்கிடையில், பீடத்தை நோக்கி ஏக்னிஸ் வருவதும், அவளுடைய அடியோசையும் நன்றுகக் கேட்டதுபோல் இருந்தது அவனுக்கு.

''வந்துகொண் டிருக்கிருள். ஆசனத்தை விட்டு எழுந்துவிட்டாள். பாதிதூரம் வந்துவிட்டாள். இதோ, இதோ வந்துவிட்டாள். எல்லாரும் அவளைத்தான் பார்க்கிருர்கள். பக்கத்தில் வந்துவிட்டாளே!''

இந்தப் பிரமை அவனைப் பிடித்து ஆட்டின ஆட்டில், சொல் கூட எழவில்லை. கிளம்பிய சொற்கள் மடிந்து விழுந்தன. மெழுகு வர்த்திகளை அணைத்துக்கொண் டிருந்த வேலைக்காரப் பையன் திடீரென்று திரும்பி, சுற்றிலும் பார்ப்பதைக்கண்டான் பால். 'சரி; அவள் வந்துவிட்டாள். உபதேச மேடையின் படிக்கட்டில் ஏறிவிட்டாள்' என்று நிச்சயமாகிவிட்டது பாலுக்கு.

மண்டியிட்டிருந்தவன் எழுந்தான். கோயிலின் கூரை இடிந்து தலையில் விழுந்து மண்டை உடைவதுபோல் இருந்தது. கால்கள் இற்றுவிட்டன. ஆனால்பெருமுயற்சியுடன் எழுந்து பீடத்தின் மீதேறினான்; அப்பம் வைத்திருந்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டான். உக்கிராண அறைக்குள் போவதற்காகத் திரும்பியபோது, அவள் கிராதியைக் கடந்து பீடத்தின் படியில் ஏற இருந்தது தெரிந்தது.

''தெய்வமே, என்னைச் சாக விடேன்'' என்று அவன் உள்ளம் தீனமாகக் கதறியது. பாத்திரத்தின் மீது தலை குனிந்து வணங்கினான், வெட்ட ஓங்கும் வாளுக்குக் கழுத்தைத் தானே கொடுப்பதுபோல. உக்கிராண அறைக்குள் புகும் போது மீண்டும் திரும்பிப் பார்த்தான்; பீடத்துக் கிராதியின்முன், கடைசிப் படியில் மண்டியிட்டு, ஏக்னிஸ் வணங்கிக்கொண் டிருந்தாள்.

நடந்தது இதுதான்: கிராதியின் அருகில் வரும்போது அவளுக்குக் கால் தடுக்கிவிட்டது. திடீரென்று சுவர் ஒன்று முன் எழுந்ததுபோல் அங்கேயே துவண்டு மண்டியிட்டு விட்டாள். பனிப் படலம் போல ஏதோ கனமாக அவள் கண்ணை மறைத்தது. மேலே போக முடியவில்லை.

சற்றுக் கழித்துக் கண் மங்கல் தெளிந்தது. படிக்கட்டையும், பீடத்தின் முன்னுள்ள மஞ்சள் விரிப்பையும், மேசைமீது கிடந்த மலர்களையும், எரியும் விளக்கையும் பார்க்க முடிந்தது. ஆனால் மதகுரு மறைந்துவிட்டான். அவன் நின்றுகொண் டிருந்த இடத்தில் காலை வெயில் அந்த மங்கலை நீக்கியவண்ணம் சாய்வாக விழுந்து, விரிப்பின்மீது தங்க முலாம் பூசியிருந்தது. சிலுவைக் குறி செய்துகொண்டு எழுந்து கோயில் வாசலைப் பார்க்க அவள் நடந்தாள். வேலைக்காரியும் பின்தொடர்ந்தாள். கூடியிருந்த கிழவர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லாரும் அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்து விடை அளித்தார்கள். ஊருக்கே அவள் எஜமானி. அழகுக்கும் நம்பிக்கைக்கும் சின்னமானவள். அந்தஸ்தில் அவளும் அவர்களும் மலையும் மடுவும்போல. ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் - அவர்களுடைய துன்பங்களில்- அவளுக்குப் பங்கு உண்டு. முள்ளிடை ரோஜாப்போல அவர்களைச் சேர்ந்தவள் தான் அவள்.

வாசலை அடைந்ததும், வேலைக்காரப் பெண் அவள் விரலில் புண்ணிய தீர்த்தத்தைத் தெளித்தாள். பீடத்தின்முன் மண்டியிடும்போது ஏக்னிஸின் உடை தூசி அடைந்துவிட்டது. அதைத் தட்டிவிடுவதற்காகக் குனிந்தாள் வேலைக்காரி. தட்டிவிட்டு நிமிர்ந்தபோது, ஏக்னிஸின் முகம் வெளுத்துப் போய், அவள் கண்கள் கோயிலின் ஒரு மூலையை வெறித்துப் பார்ப்பதை வேலைக்காரி கண்டாள். ஆமாம், மதகுருவின் தாய், தொழுகை நேரம் முழுவதும் மண்டியிட்டுக்கொண் டிருந்த இடம் அது. அங்கே அசைவற்றுத் தரையில் உட்கார்ந்திருந்தாள் குருவின் அன்னை. முகம் முன்னே மார்பின் மீது விழுந்திருந்தது. தோள் சுவர் மீது சாய்ந்திருந்தது. ஏக்னிஸும் வேலைக்காரியும் வெறித்துப் பார்த்ததை இன்னொரு ஸ்திரீயும் திரும்பிப் பார்த்தாள். அவ்வளவுதான்; ஒரே பாய்ச்சலில் அந்த மூலையை நோக்கிப் பாய்ந்தாள். மெதுவாக ஏதோ பேசி, கையால் அந்த முகத்தை நிமிர்த்தினாள்.

அன்னையின் கண்கள், பாதி மூடியபடி, கண்ணாடிபோல் மின்னின. விழிகள் மேல் நோக்கிச் செருகியிருந்தன. கையிலிருந்த ஜப மாலை கீழே விழுந்திருந்தது. தலையும், பிடித்துக்கொண் டிருந்த பெண் பிள்ளையின் தோள்மீது விழுந்து தொங்கலிட்டது.

''செத்துப் போயிட்டாங்க'' என்று அந்தப் பெண்பிள்ளை கூச்சலிட்டாள்.

அவ்வளவுதான். கூட்டம் முழுவதும் ஓடிவந்து, அங்கே கூடிவிட்டது.

பாலும் வேலைக்காரப் பையனும் உக்கிராண அறையில் இருந்தார்கள். குளிரிலும் ஆபத்திலிருந்து விடுதலை பெற்ற ஆறுதலிலும் பாலின் உடல் நடுங்கிக்கொண் டிருந்தது. உண்மையாகவே பாறை

மீது மோதிச் சிதறி முழுகும் கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்தது போல ஓர் உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு. சோர்ந்து ஓய்ந்த அங்கங்களுக்குச் சக்தி கொடுக்கவும் குளிரைப் போக்கவும் அங்கும் இங்கும் நடந்தால் நல்லது என்று தோன்றிற்று. எல்லாம் ஒரு கெட்ட கனவு மாதிரி கழிந்துவிட்டதை நினைத்து அவன் ஆறுதல் அடைந்தான்.

வெளியில் இன்னதென்று புரியாமல் முணுமுணுவென்று பல குரல்கள் கேட்டன. தாழ்ந்து தொடங்கிய அந்த முணுமுணுப்பு விறுவிறு என்று ஓங்கி உயர்ந்து, உரக்கக் கேட்டது. அறைக்கு வெளியே பையன் எட்டிப் பார்த்தான். நடையின் கோடியில் கூட்டமாக இருந்தது. வாசலில் போகத்தான் இந்த இரைச்சல்-நெருக்கடி-என்று அவன் நினைத்தான். திடீரென்று கூட்டத்திலிருந்து ஒரு கிழவன் விரைந்து அறையை நோக்கி வந்து, என்னவோ ஜாடை காட்டினன். பையனுக்குப் புரியவில்லை.

''அவருடைய அம்மாவுக்கு உடம்பு சரியில்லை'' என்றுன் கிழவன்.

பால் மேலங்கியைக்கூடக் கழற்றவில்லை. ஒரே பாய்ச்சலில் கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தான். அம்மா காலை நீட்டிப் படுத்திருந்தாள். தலை ஒரு ஸ்திரீயின் மடியில் இருந்தது. சுற்றிலும் கூட்டம் பெருகிற்று. பால் உற்று நோக்கினன். அன்னையின் கண்ணைப் பார்த்தான்.

''அம்மா, அம்மா!''

முகம் அசைவற்று, விறைத்துக் கிடந்தது. கண்கள் பாதி மூடியிருந்தன. வாய்விட்டு அழுவதை நிறுத்தும் முயற்சியில், பற்கள் கிட்டியிருந்தன.

பாலுக்குப் பளிச்சென்று புரிந்துவிட்டது. அம்மா அதே சோகத்தின் அதிர்ச்சியால் இறந்துவிட்டாள். எந்தத் திகிலை அவனல் மீறிக் கடக்க முடிந்ததோ, அந்தத் திகிலே அவளை அடித்துவிட்டது.

தலை நிமிர்ந்தபோது, குமுறிவந்த அழுகையை அடக்கிக்கொள்வதற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டான். சுற்றி நின்றவர்களைப் பார்த்தான். பரபரப்பு மிகுந்து நெருங்கி நெருங்கி வந்து சூழ்ந்து நின்றது கூட்டம். அந்தக் குழப்பத்தின் நடுவில் அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த ஏக்னிஸின் கண்களை, அவன் கண்கள் சந்தித்தன.

## மரியாதை

அமெரிக்காவில் ஓர் ஆங்கிலேயர் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஒரு விருந்தில் அவருக்குப் பக்கத்திலே செல்வச் சீமாட்டி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள்.

தங்கள் நாட்டு மரியாதையைப்பற்றி ஆங்கிலேயர் மிதமிஞ்சிப் பெருமை அடித்துக்கொண்டார். ''உலகத்திலேயே நாங்கள்தான் மிகவும் மரியாதை தெரிந்தவர்கள். நீங்கள் இருக்கிறீர்களே அமெரிக்கர், நீங்கள் மிக அற்புதமான மக்கள்தான். ஆயினும், மரியாதையில் ஆங்கிலேயர்கள் உங்களையும் விட மிஞ்சியவர்கள். நீங்களே இதை ஒப்புக்கொள்வீர்கள். இல்லையா?'' என்றுர்.

''ஆமாம்'' என்றுள் அமெரிக்கச் சீமாட்டி; தொடர்ந்து, ''இது எங்கள் மரியாதை'' என்று முடித்தாள்.

—'காப்பர்ஸ் வீக்லி'

# சட்டமும் அறிவும்

★

மிகப் பழங்காலத்தில் செல்வமும் அறிவும் வாய்ந்த ஓர் அரசன் இருந்தான். தன் குடிமக்களின் நன்மைக்காகச் சில சட்டங்களை இயற்ற வேண்டும் என்று அவன் விரும்பினான்.

அவன் தன் நாட்டில் இருந்த ஆயிரம் சாதியினரின் பிரதிநிதிகளாக ஆயிரம் புலவர்களைத் தேர்ந்தெடுத்து, தலைநகருக்கு வரவழைத்தான். அவர்களின் ஆலோசனைப்படி சட்டம் இயற்றும் வேலை நடந்து வந்தது.

அந்த ஆயிரம் புலவர்களும் ஆயிரம் சட்டங்களை எழுதி அரசனிடம் கொடுத்தார்கள். அவற்றைப் படித்ததும் அரசனுடைய உள்ளம் உருகியது; அவன் கண்களிலிருந்து நீர் வெள்ளமாகப் பெருகியது. தன் ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான குற்றங்கள் இழைப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவன் கனவிலும் நினைத்ததில்லை.

அவன் அரசாங்க அதிகாரியைக் கூப்பிட்டுப் புன்முறுவல் பூத்தவாறே சில சட்டங்களை எழுதிக் கொடுத்தான். அவன் எழுதியவை ஏழே சட்டங்கள்.

ஆயிரம் புலவர்களும் இதைக் கண்டு சினம் பொங்கியவர்களாக அங்கிருந்து தம் தம் ஊருக்குச் சென்று, தாங்கள் இயற்றிய சட்டங்களைத் தம் சாதியினரிடம் சொன்னார்கள். ஒவ்வொரு சாதியினரும் தங்கள் பிரதிநிதியான புலவன் அமைத்த சட்டத்தையே கடைப்பிடிக்கலானார்கள்.

அதனால்தான் இன்றும் ஆயிரக்கணக்கான சட்டங்கள் நிலவுகின்றன. இன்றும் அந்தப் பரந்த நாட்டில், ஆயிரக்கணக்கான சிறைகள் இருக்கின்றன. சட்டத்தை மீறும் ஆண்களும் பெண்களும் அவற்றில் நிறைந்திருக்கிறார்கள்.

ஆயிரம் சட்டங்கள் இயற்றிய அந்தப் பழைய வழி வந்தவர்களே, இன்று அந்தப் பரந்த நாட்டில் வாழ்கிறார்கள் என்பதில் ஐயமில்லை; ஆனால் அந்த நாட்டில் அறிவாளியாக இருந்தவன் ஒருவன்தான் - அந்த அரசன்!

—கலில் கிப்ரான்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# மஞ்சரி

## பொருளடக்கம்

ஹேவிளம்பி - வைகாசி மே 1957

| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | .. .. .. | 1 |
| நாடோடி நர்த்தனம் | .. .. மாத்ருபூமி | 3 |
| நயா பைசா | .. .. .. | 5 |
| புராதன இந்திய ஓவியம் | .. .. கலைமகள் | 6 |
| என் தமிழ் ஆசிரியர்கள் | .. .. சர்வோதயம் | 11 |
| குழந்தையும் துக்க வீடும் | .. பேரென்ட்ஸ் மகஸீன் | 12 |
| ஏழைகளின் குடை | .. .. சுதேசமித்திரன் | 15 |
| பாடும் பறவை | .. அமிர்த பஜார் பத்திரிகா | 19 |
| வீட்டுக்காரிக்கு வேலை | .. .. .. | 24 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 25 |
| கல்வியின் கருத்து | .. .. .. | 28 |
| புலன் கடந்த நெறி | .. ..ரா. ஸ்ரீ. தேசிகன் | 31 |
| திருஷ்டத்தியும்னன் பிறப்பு | .. .. .. | 36 |
| உடை அணியும் கலை | .. .. ஆந்திர மஹிளா | 39 |
| சீமையிலே ஒரு குருகுலம் | .. பிரிட்டிஷ் இன்ஃபர்மேஷன் | 41 |
| ஜெர்மனியில் 'சகுந்தலை' | .. ஜி. டி. ஆர். புல்லட்டீன் | 46 |
| பெண் எப்படி? | .. .. கர்மவீர் | 51 |
| சீனு - இந்தியா வைத்த பெயர் | ஹிந்துஸ்தான் டைம்ஸ் | 53 |
| சென்னம்மா (கன்னடக் கதை) | 'ஆனந்தா' - பாமா | 56 |
| அன்னை (இத்தாலிய நாவல்) | டெலடா - ஜானகிராமன் | 67 |
| சட்டமும் அறிவும் | .. .. கலில் கிப்ரான் | 88 |

*Manjari - May '57* **Regd. No. M. 497**
(Regd. as a Newspaper in Ceylon)

வாழிய செந்தமிழ் வாழ்க நல் தமிழ

வாழிய பாரத மணித் திருநாடு

## மலிவு விலையில்

# சக்தி புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| மகாகவி பாரதியார் காவியங்கள் | | ரூ. 1.50 |
| சூரிய நமஸ்காரம் | திருவேதி | 1.00 |
| எமர்சன் கட்டுரைகள் | | 1.00 |
| இந்தியருக்கு | டால்ஸ்டாய் | 1.00 |
| செல்வம் | க. சந்தானம் | 1.00 |
| ராஜ்யம் | ,, | 1.00 |
| கூண்டுக்கிளி | ஹ. சட்டோபாத்யாய | 1.00 |
| புறநானூறும் தமிழரும் | வையாபுரிப் பிள்ளை | 1.00 |
| அமெரிக்கக் கதைகள் | ஸ்டீன்பெக் | 1.00 |
| முத்ராராக்ஷஸம் | விசாக தத்தர் | 1.50 |
| அபேதவாதம் | ராஜாஜி | 1.00 |
| சக்தி பிறக்குது | சுரபி | 0.35 |
| கோதாவரி | லக்ஷ்மி | 0.35 |
| எருவும் எரு இடுதலும் | சுந்தரம் | 1.25 |
| பணம் | எமிலி பேர்ன்ஸ் | 1.50 |
| மார்க்ஸிஸம் என்றால் என்ன? | .. | ரூ. 1.0 |
| சிவப்புக் குதிரைக் குட்டி | ஸ்டீன்பெக் | 1.0 |
| அணுவை அறிக | நா. கி. நாகராஜன் | 1.5 |
| பாரதியார் சரித்திரம் | செல்லம்மா பாரதி | 2.0 |
| மகாகவி பாரதியார் | வ. ரா. | 2.0 |
| வாசந்தி | கதைத் தொகுப்பு | 1.0 |
| தர்ம ரட்சகன் | தொகுப்பு நூல் | 1.0 |
| ஜீவப் பிரவாகம் | .. | 1.0 |
| திரிவேணி | .. | 1.0 |
| யாத்திரை | .. | 1.0 |
| கம்பன் என் காதலன் | .. | 1.0 |
| காவியக் காதல் | .. | 1.0 |
| இரண்டு பெண்கள் | .. | 1.0 |
| ரோஜாப் பூ | .. | 1.0 |

### உயர்ந்த பதிப்புகள்

| | | |
|---|---|---|
| காய்கறித் தோட்டம் | மு. அருணாசலம் | ரூ. 5.50 |
| குழந்தைமை ரகசியம் | மாண்டிசோரி | 5.00 |
| ரகுநாதன் கதைகள் | ரகுநாதன் | 3.75 |
| திருமலை முருகன் பள்ளு | மு. அருணாசலம் | 2.50 |
| இருளின் வலிமை | டால்ஸ்டாய் | 2.00 |
| டால்ஸ்டாய் கதைகள் I | .. | 2.00 |
| டால்ஸ்டாய் கதைகள் II | .. | 2.00 |
| டால்ஸ்டாய் கட்டுரைகள் | .. | 2.00 |
| (தபால் செலவு தனி) | | |
| வனிதாலயம் | சகுந்தலா ராஜன் | ரூ. 2.0 |
| ஹிந்து பத பாதுஷாஹி | சாவர்க்கர் | 3.7 |
| லெனின் பிறந்தார் | ராமனாதன் | 3.5 |
| அழகிரிசாமி கதைகள் | அழகிரிசாமி | 3.7 |
| மாலைக்கு மாலை | யாழ்ப்பாணன் | 2.5 |
| சுந்தரி | வ. ரா. | 5.0 |
| வான வில் | ருஷ்ய நாவல் | 4.0 |
| ஏசுநாதர் போதனை | குமரப்பா | 1.5 |
| ஏரி குளங்களைச் செப்பனிடுவோம் | | 0.2 |
| மாய விளக்கு | வை. கோ. | 3.0 |
| (தபால் செலவு தனி) | | |

மலிவுப் பதிப்பு நூல்கள்: 1957-இல் வெளி வருபவை: பாரதியார் கட்டுரைகள்: ரூ. 1.50 பாரதியார் வசனங்கள்: ரூ. 1.50. திருக்குறள் பரிமேலழகர் உரை: ரூ. 1.50. இனி நாம் செய்யவேண்டுவது யாது? டால்ஸ்டாய்: ரூ. 1.50., வேதநாயகம் பிள்ளை - பிரதா முதலியார் சரித்திரம்: 1.50., ராஜம் அய்யர் - கமலாம்பாள் சரித்திரம்: ரூ. 1.50 வ. ரா. - வாழ்க்கைச் சித்திரம்: ரூ. 1.50 இன்னும் பல.

உயர்ந்த பதிப்புகள்: 1957-இல் வெளி வருபவை: போரும் வாழ்வும்: டால்ஸ்டா (ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் தமிழாக்கம்) சுமார் 2200 பக்கங்கள் - 3 பாக ரூ. 24. ருஷ்ய நாட்டுக் கதைகள் (படங்களுடன்) ரூ. 3., உக்ரேனிய நாட்டுக் கதைக ரூ. 4., அமெரிக்க நாட்டுக் கதைகள்: சுமார் விலை ரூ. 2., தமிழ் நாட்டுக் கதைக ரூ. 2., இன்னும் பல.

## சக்தி காரியாலயம்

1/142, மவுண்டு ரோடு,
ஆயிரம் விளக்கு - சென்னை